**உதவி அமர்வு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:– திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27–ம் நாள் திங்கள்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை திங்கள் 14–ம் நாள்**

**அமர்வு வழக்கு எண். 58/2020**

**CNR.No.TNKI11-000517-2020**

(முதல்நிலை பதிவேடு வழக்கு எண் PRC.No.03/2020 ஊத்தங்கரை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அவர்களால் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, தொடர்ந்து மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களால் 04.01.2021–ம் தேதியில் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது)

**நீதிமன்ற படிவ எண். 61–ன் படி**

| | | |
|---|---|---|
| குற்ற முறையிடுபவர் | : | காவல் ஆய்வாளர், ஊத்தங்கரை காவல் நிலையம், குற்ற எண். 589/2018, கிருஷ்ணகிரி மாவட்டம். |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | 1. வெங்கட் (எ) வெங்கடேசன், த/பெ. சின்னகண்ணு, வயது சுமார் 32 வருடங்கள்,<br>2. பரதன் (இறப்பு), த/பெ. நாகேஷ்வரன், வயது சுமார் 24 வருடங்கள்,<br>3. மகேந்திரன், த/பெ. சாமோடன், வயது சுமார் 24 வருடங்கள், |
| முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்ட குற்ற பிரிவுகள் | : | இ.த.ச. பிரிவு 394, 397 of IPC மற்றும் 25(1-A) of Arms Act–ன் கீழ் |
| வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் | : | இ.த.ச. பிரிவு 392, r/w 397 of IPC மற்றும் 25(1-B) (a), 25(1)(a) and 27(1) of Arms Act–ன் கீழ் |
| முடிவு / தீர்வு | : | முடிவில் 1–ம்எதிரி மீது பிரிவு – 392 உ/இ 397 of IPC மற்றும் 25(1-B) (a) and 27(1) of Arms Act-ன் படி குற்றவாளி என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து சட்டப்பிரிவு குவிமுச 235(1)–ன் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்படுகிறது. 3–ம் |

| | | |
|---|---|---|
| | | எதிரிக்கான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்வு காணப்பட்டுள்ளதால் சந்தேகத்தின் பலனை 3–ம் எதிரிக்கு அளித்து சட்டப்பிரிவு குவிமுச 235(2)–ன் குற்றவாளி இல்லை என்றும், இவ்வழக்கு விசாரணையில் இருந்த போது 2–ம் எதிரி பரதன் கடந்த 16.04.2024–ம் தேதியில் இறந்து விட்டதாக இறப்பு சான்று தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் மேற்படி 2–ம் எதிரிக்கு எதிரான குற்றச் சாட்டுகள் அற்றுப் போய் விட்டதாகவும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |

| குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வ.எண். (1)** | **பெயர் (2)** | **தந்தை பெயர் (3)** | **இனம் (அ) சாதி (4)** | **தொழில் (5)** | **இருப்பிடம் (6)** | **வயது (7)** |
| 1. | 1. வெங்கட்டு (எ) வெங்கடேசன் | சின்னகண்ணு | -- | -- | க.எண்.222, கலைஞர் நகர், ஊத்தங்கரை அஞ்சல் மற்றும் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். | 32/2019 |
| 2. | பரதன் (இறப்பு) | நாகேஷ்வரன் | -- | -- | க.எண்.220, ரெட்டிப்பட்டி கிராமம், ஊத்தங்கரை அஞ்சல் மற்றும் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். | 24/2019 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | மகேந்திரன் | சாமோடன் | -- | -- | ஒப்பந்தவாடி கிராமம் மற்றும் அஞ்சல், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். | 24/2019 |

| குற்றம் சம்பந்தப்பட்ட நாட்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்வு (8) | முறையீடு (9) | கைது (அ) முன்னிலை (10) | பிணையின் பேரில் விடுதலை (11) | விசாரணையின் தொடக்கம் (12) | விசாரணையின் முடிவு (13) | தண்டனை அல்லது ஆணை (14) | தாமதத்திற்கான விளக்கம் (15) |
| 16.12.2018 | 16.12.2018 | A1, A2 22.02.2019, A3 – 25.02.2019 | A1. Judicial Magistrate Court, Uthangarai. Crl.M.P.No. 1832/2019, Date: 04.07.2019 (Mandatory bail) A2. Judicial Magistrate Court, Uthangarai, Crl.M.P.No. 1351/2019, Date, 07.06.2019 (Mandatory bail) A3. Principal Sessions Court, Krishnagiri Crl.M.P.No. 569/2019, Date. 19.03.2019. | 27.09.2022 | 06.08.2025 | 27.04.2026 | 04.01.2021 –ம் தேதி தான் இந்நீதிமன்றத்திற்கு மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலிருந்து வழக்கு கோப்புகள் வரப்பெற்றது. தாமதம் ஏதும் இல்லை. |

**<u>சென்னை உயர் நீதிமன்றத்தின் 07.04.2021-ம் தேதியிட்ட ROC.No. 814/2020/RG/G1-ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள் 2019-ன் கீழ் விதி 106(4)-ன் படி வழக்கின் சுருக்கம்:</u>**

<table>
<tr><td>1.</td><td colspan="4">எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள்</td><td>A1, A2 – 22.02.2019<br>A3 – 25.02.2019</td></tr>
<tr><td>2.</td><td colspan="4">இறுதி அறிக்கை விசாரணை நீதிமன்றத்தில் (Judicial Magistrate Court, Uthangarai) தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>16.03.2020</td></tr>
<tr><td>3.</td><td colspan="4">முதன்மை பதிவேட்டு ஊத்தங்கரை குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து மேல் விசாரணைக்கு மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள் ( Judicial Magistrate Court, Uthangarai to Hon'ble PDJ Court, Krishnagiri.</td><td>14.12.2020 in D.No.1795/2020</td></tr>
<tr><td>3A</td><td colspan="4">மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் இருந்து இந்நீதிமன்றத்திற்கு வழக்கு கோப்புகள் அனுப்பப்பட்ட நாள்</td><td>04.01.2021</td></tr>
<tr><td>4.</td><td colspan="4">விசாரணை நீதிமன்றம்</td><td>Assistant Sessions Court / Subordinate Court, Uthangarai</td></tr>
<tr><td>5.</td><td colspan="4">எதிரிகளின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள்</td><td>இ.த.ச. பிரிவு 392, r/w 397 of IPC மற்றும் 25(1-B) (a), 25(1)(a) and 27(1) of Arms Act-ன் கீழ்</td></tr>
<tr><td>6.</td><td colspan="4">எதிரிகளிடம் கு.வி.மு.ச 240 பிரிவின் கீழ் குற்றச்சாட்டு குறித்து வினவிய நாள்</td><td>11.01.2021</td></tr>
<tr><td>7.</td><td colspan="4">எதிரிகளின் பதில்</td><td>பொய் வழக்கு</td></tr>
<tr><td rowspan="3">8.</td><td colspan="4">இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் (317 கு.வி.மு.ச மனு தவிர)</td><td rowspan="3"></td></tr>
<tr><td>குற்றப்பல்வகை மனு எண்</td><td>உத்தரவு விவரம்</td><td colspan="2">மேல்முறையீட்டு விவரம்</td></tr>
<tr><td>--</td><td>--</td><td colspan="2">Nil</td></tr>
<tr><td>9.</td><td colspan="4">சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம்</td><td></td></tr>
<tr><td></td><td>வ.எண்.</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை நாள்</td><td>குறுக்கு விசாரணை நாள்</td><td></td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1. | முருகன் | 27.09.2022 | 27.09.2022 | |
| | 2. | ஆனந்தன் | 27.09.2022 | 27.09.2022 | |
| | 3. | மாரியப்பன் | 18.10.2022 | 18.10.2022 | |
| | 4. | சிவக்குமார் | 18.10.2022 | 18.10.2022 | |
| | 5. | இளையராஜா | 22.11.2022 | 22.11.2022 | |
| | 6. | சுபாஷ் | 22.11.2022 | 22.11.2022 | |
| | 7. | குமரேசன் | 06.12.2022 | 06.12.2022 | |
| | 8. | பிரகாஷ் | 06.12.2022 | 06.12.2022 | |
| | 9. | இளையப்பன் | 06.12.2022 | 06.12.2022 | |
| | 10. | மஞ்சுநாத் | 09.01.2023 | 09.01.2023 | |
| | 11. | பாலகிருஷ்ணன் | 09.01.2023 | 09.01.2023 | |
| | 12. | திருஞானம் | 03.02.2023 | 03.02.2023 | |
| | 13. | ராஜேந்திரன் | 03.02.2023 | 03.02.2023 | |
| | 14. | வித்யாசீனிவாசன் | 16.03.2023 | 16.03.2023 | |
| | 15. | நடராஜன் | 16.03.2023 | 16.03.2023 | |
| | 16. | விமலா | 29.03.2023 | 29.03.2023 | |
| | 17. | சுரேந்தர் | 18.12.2023 | 18.12.2023 | |
| | 18. | வீரராகவன் | 05.01.2024 | 05.01.2024 | |
| | 19. | சுல்தான் அர்பீன் | 24.01.2024 | 24.01.2024 | |
| | 20. | முரளி | 04.07.2025 | 04.07.2025 | |
| | 21. | ராமமூர்த்தி | 06.08.2025 | 06.08.2025 | |
| 10. | எதிரியிடம் கு.வி.மு.ச 313(ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | | | | 26.08.2025 |
| 11. | எதிரிகள் தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய / ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | | | | A1, A2 - Nil<br>A3 – 04.08.2021 / 01.03.2022<br>A3 – 22.06.2022 / 05.07.2022 |
| 12. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் மற்றும் தீர்வு | | | | Nil |

இவ்வழக்கு என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு.N. சத்தியநாதன், அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V. மாதேஷ், அவர்கள் ஆஜராகியும், 3–ம் எதிரித் தரப்பில் C. கேசவன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

### 1. எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள்

இவ்வழக்கின் சம்பவமானது கடந்த 15.12.2018–ம் தேதியன்று இரவு 10.15 மணியளவில் சாட்சிகள் ஆனந்தன் மற்றும் முருகன் இருவரும் வெப்பாலம்பட்டி அரசு மதுபான கடையை மூடிவிட்டு அவர்களது வீட்டிற்கு ஊத்தங்கரை – அனுமந்தீர்த்தம் இடது பக்க ரோட்டில் ஆனந்தன் TN–29–BZ–5171 பதிவெண் கொண்ட ஹோண்டா ஆட்டிவா இருசக்கர வாகனத்தை ஜெயவேல் கிருஷ்ணன் நிலம் மற்றும் வித்யா மந்திர் கல்லூரி விடுதி அருகே ஓட்டிச் சென்றுக் கொண்டிருந்தபோது 1, 2 எதிரிகள் பின் தொடர்ந்து TN–24–AL–7067 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கியை வைத்துக்கொண்டு பின்னால் துரத்தி சென்று கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் சுட்டபோது சாட்சிகள் இருவரும் வாகனத்திலிருந்து கீழே விழுந்து பின் வாகனத்தை சாட்சி ஆனந்தன் தூக்கும்போது 1–வது எதிரி நாட்டு துப்பாக்கியின் பின் பகுதியால் சாட்சி ஆனந்தனின் வலது கண்ணத்தின் மீது அடித்து காதுமடல், வலது கை மற்றும் அக்குள் ஆகிய இடங்களில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், சாட்சிகள் ஆனந்தன் மற்றும் முருகேசனை 1, 2 எதிரிகள் அபாயகரமான ஆயுதமான துப்பாக்கியால்

சாட்சிகளை அச்சுறுத்தி, பயமுறுத்தி, மரண பயத்தையும், உண்டாக்கி அவர்கள் பையில் இருந்த ரூ.2,90,830/– பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளதாகவும், சம்பவத்திற்கு முன் 3–வது எதிரி உரிமமில்லாத நாட்டு துப்பாக்கியை 1–ம் எதிரிக்கு விற்றுள்ளதாகவும், எதிரிகளின் செய்கையானது இதச பிரிவு 392, உ/இ 397 மற்றும் 25(1–B) and 27(1) of Arms Act–ன் கீழ் தண்டிக்கத்தக்கதும் இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்கதுமான குற்றத்தை புரிந்துள்ளார்கள் என இறுதி அறிக்கை தாக்கல்.

**<u>2. வழக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்புதல்</u>**

இவ்வழக்கில் எதிரிகளுக்கு ஊத்தங்கரை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மூலமாக நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி 207 குவிமுச பிரிவின் கீழ் முறையாக வழக்கின் ஆவணங்கள் எதிரிகளுக்கு வழங்கி குற்றம் பற்றி விசாரிக்கப்பட்டது. மேற்படி சட்டப்பிரிவுகள் கீழான குற்றச்சாட்டுகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்ய தகுந்தது என்பதால் இவ்வழக்கின் கோப்புகளை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி அவர்களுக்கு குவிமுச 209 (அ), பிரிவின் கீழ் மாற்றம் செய்யப்பட்டு பின்பு இவ்வழக்கு இந்நீதிமன்றம் முன் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதால் இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**<u>3. குற்றச்சாட்டு வனைதல்</u>**

இந்த நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜரானபோது எதிரிகளிடம் இ.த.ச சட்டப்பிரிவு U/s – 392, உ/இ 397 மற்றும் 25(1)(a), 25(1–B)(a) and 27(1) of Arms Act–ன் படி குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றச்சாட்டுகள் பற்றி எதிரிகளிடம் விளக்கி வினா எழுப்பியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்து

எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என பதில் அளித்ததால் அரசு தரப்பு சாட்சிக்களுக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

**4. <u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்–</u>**

இவ்வழக்கில் சாட்சிகள் 1 முதல் 21 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டார்கள். சான்றாவணங்கள், அ.த.சா.ஆ.1 முதல் 25–வரையிலும், சான்று பொருள் சா.பொ.1 முதல் ச.பொ.19 வரையிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளது, எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

**<u>5. அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்.</u>**

அரசு தரப்பை நிரூபிக்க எழுத்து மூலமாக புகார் அளித்த முருகன் அ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டதில், தான் தற்போது புட்டிரெட்டிபட்டியில் குடியிருந்து வருவதாகவும், தற்போது கடை எண். 2985 டாஸ்மாக் கடையில் உதவி விற்பனையாளராக பணி செய்து வருவதாகவும், இதற்கு முன்பு வெப்பாலம்பட்டி அருகே உள்ள கடை எண். 2936ல் உதவி விற்பனையாளராக பணி செய்து வந்ததாகவும், அந்த கடையில் தான், கோவிந்தராஜ், ஆனந்த், இளையராஜா மற்றும் மேற்பார்வையாளர் சுபாஷ், சிவக்குமார் ஆகியோர் பணி செய்து வந்ததாகவும், கடந்த 15.12.2018–ம் தேதி இரவு சுமார் 10 மணியளவில் தானும், ஆனந்த் என்பவரும் கடையை மூடிவிட்டு ஆனந்தனுக்கு சொந்தமான ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் அனுமந்தீர்த்தத்தில் உள்ள கௌரி துணிக்கடைக்கு மேல் தனியாக அறை எடுத்து தங்கி உள்ளதாகவும், அந்த இடத்திற்கு தாங்கள் சென்றதாகவும், தாங்கள் கடையை மூடிவிட்டு கடை சாவி, ரூம் சாவி அன்று விற்பனையான சுமார் மூன்று லட்சம் பணம், பில், புக், சிட்டா, பாம்5 ஆகியவற்றை இருசக்கர வாகனத்தின் முன் புறத்தில் வைத்துக்கொண்டு ஆனந்தன் இருசக்கர வாகனத்தை ஓட்ட தான் பின்னால் அமர்ந்து வந்ததாகவும், தங்கள் கடை சேலம் மெயின் ரோட்டில் இருந்து கிழக்கு திசையில் சுமார் ஒரு

கிலோ மீட்டர் தூரம் தள்ளி உள்ளே அமைந்துள்ளதாகவும், தாங்கள் கடையில் இருந்து கிளம்பி மெயின் ரோட்டிற்கு வந்த போது அந்த இடத்தில் கிழக்கு பக்கம், கல்லின் மீது இரண்டு நபர்கள் உட்கார்ந்து இருந்ததாகவும், ஒரு இருசக்கர வாகனம் பக்கத்தில் நின்று கொண்டு இருந்ததாகவும், தாங்கள் மெயின் ரோட்டிற்கு வந்து அனுமந்தீர்த்தம் நோக்கி தெற்கு திசையில் சென்றுக் கொண்டிருந்த போது தங்களுக்கு பின்னால் ஒரு இருசக்கர வாகனம் தொடர்ந்து வந்துக் கொண்டிருந்ததாகவும், அதனால் தாங்கள் சற்று வேகம் எடுத்து முன்னால் சென்றதாகவும், வித்யாமந்திர் கல்வியல் கல்லூரி விடுதி தாண்டி ரோட்டின் வளைவில் சென்ற போது டமால் என ஒரு சத்தம் கேட்டதாகவும், தான் பார்த்தபோது தன் காதில் ரத்தம் வந்ததாகவும், தங்கள் இருசக்கர வாகனமும் நிலை தடுமாறி மண் ரோட்டில் கீழே விழுந்து விட்டதாகவும், எழுந்து பார்த்த போது ஆனந்தன் வலது கை அக்குள் பகுதி சுட்டு விட்டதாக சொல்லி அவர் கத்திக் கொண்டே ஓடியதாகவும், அவர் அணிந்திருந்த டி சர்ட் எரிந்து விட்டதாக சொல்லிக் கொண்டே ஓடியதாகவும், தான் கீழே விழுந்த பணப் பையை எடுக்கலாம் என முற்பட்டபோது ஒரு நபர் துப்பாக்கியை நீட்டிக் கொண்டே வந்ததாகவும், தான் பணப்பையை எடுக்க முயற்சித்த போது துப்பாக்கியை திருப்பி அதன் பின் பகுதியால் தனது வலது காதின் பக்கமே அடித்து விட்டு பணப் பையை பிடுங்கி கொண்டதாகவும், அவ்வாறு தன்னை துப்பாக்கியால் அடித்த நபரை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்பதாகவும், சாட்சி நீதிமன்றத்தில் முதலாவதாக நின்றுக் கொண்டிருந்த எதிரி வெங்கடேசன் என்பவரை அருகில் சென்று பார்த்து, தொட்டு, அடையாளம் காட்டியதாகவும், தன்னையும், ஆனந்தன் என்பவரையும் அடிக்க மற்றும் சுட பயன்படுத்திய துப்பாக்கி தன்னால் பார்த்து அடையாளம் சொல்ல முடியும் என்றும், அந்த துப்பாக்கி தான் நீதிமன்றத்தில் உள்ளதாகவும், சாட்சி நீதிமன்றத்தில் உள்ள துப்பாக்கியை பார்த்து இவ்வளவு நீளம் உள்ள துப்பாக்கி என கூறுவதாகவும், மேற்படி துப்பாக்கி தான் அவரால் பயன்படுத்த பட்டதா என தன்னால் சொல்ல

இயலாது என்றும், அதன் பின்பு தான் ரோட்டில் கீழ் புறம் உள்ள செடியின் மறைவில் உட்கார்ந்து கொண்டதாகவும், அங்கிருந்து அனுமந்தீர்த்தம் சேர்ந்த முன்னாள் பஞ்சாயத்து தலைவர் மாரியப்பனுக்கு போன் மூலம் தகவல் சொல்லியதாகவும், தான் தகவல் தெரிவித்து சுமார் கால் மணி நேரத்தில் மாரியப்பனும், 2, 3 நபர்கள் வந்ததாகவும், சம்பவம் நடைபெற்ற போது இரவு சுமார் 10.15 மணி இருக்கும் என்றும், அதன் பிறகு ஆம்புலன்ஸ்க்கு மாரியப்பன் தகவல் சொல்லி வந்தது என்றும், அதன் பிறகு ஆம்புலன்ஸில் ஏறி தான், ஆனந்தன், கடை சூப்பர் வைசர் ஆகியோர் ஊத்தங்கரை அரசு மருத்துவ மனைக்கு வந்ததாகவும், ஆனந்தன் பி.எட் கல்லூரி பக்கம் சம்பவத்திற்கு பயந்து ஒளிந்து கொண்டிருந்ததாகவும், அவரையும் அழைத்துக் கொண்டு தான்அரசு மருத்துவமனைக்கு வந்ததாகவும், ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக் கொண்டு தருமபுரி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சென்றதாகவும், தங்களுடன் சிவக்குமார், இளையராஜா, மாரியப்பன் மற்றும் வந்ததாகவும், தன்னை தருமபுரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தும், ஆனந்தனை சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும், விடியற்காலை சுமார் 6,15 மணியளவில் ஊத்தங்கரை காவல் ஆய்வாளர் தன்னை மருத்துவமனையில் விசாரித்ததாகவும், ஆய்வாளர் விசாரித்த போது தான் வாய்மொழியாக சொன்னதை ஆய்வாளர் எழுதிக் கொண்டதாகவும், பின்பு அதை தனக்கு படித்து காண்பித்ததாகவும், அவர் படித்து காண்பித்தது சரி என்பதால் தான் கையொப்பம் செய்ததாகவும், வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், **புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**அதேபோல் ஆனந்தன் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டதில்,** அ.சா.1ஐ தனக்கு தெரியும் என்றும், தான் கடை எண். 2936 டாஸ்மாக் கடையில் 19 ஆண்டுகளாக விற்பனையாளராக பணிபுரிந்து வருவதாகவும், தன்னுடன் கோவிந்தராஜ், சுபாஷ், சிவக்குமார், இளையராஜா மற்றும் அ.சா.1 ஆகியோர் உள்ளனர் என்றும், கடை

எண். 2936 வெப்பாலம்பட்டியில் உள்ளதாகவும், அதில் தான் நான்கு ஆண்டுகளாக பணி செய்து வந்ததாகவும், கடந்த 15.12.2018ம் தேதி அன்று இரவு 10.00 மணிக்கு விற்பனை முடிந்து பையில் பில் புக், சிட்டா, விற்பனை தொகை, இருப்பு பதிவேடு, ரூம் சாவி, கடை சாவி ஆகியவற்றை எடுத்துக் கொண்டு தனக்கு சொந்தமான ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனம் டி.எண்.29 பி.இ.சட் 5171 என்ற வாகனத்தில் தானும் முருகனும், விற்பனை தொகை மற்றும் ஆவணங்களை பையுடன் வாகனத்தின் முற்பகுதியில் வைத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தை தான் ஓட்ட முருகன் தனக்கு பின்னால் அமர்ந்து வந்ததாகவும், தங்கள் கடையில் இருந்து தாங்கள் தங்கியிருக்கும் ரூம் ஆனது அனுமந்தீர்த்தம் கௌரி துணிக்கடையின் மாடியில் உள்ள இடத்திற்கு தாங்கள் சென்று கொண்டிருந்ததாகவும், தாங்கள் கடையில் இருந்து கிளம்பி மெயின் ரோட்டிற்கு வரும் வழியில் சுமார் 200 மீட்டர் தூரம் வந்தபோது மெயின் ரோட்டில் இருந்து கடைக்கு வரும் வழித்தடத்தில் வலப்புறம் இரண்டு நபர்கள் கல்லின் மீது உட்கார்ந்து இருந்ததாகவும், அவர்களுக்கு அருகில் பல்சர் வாகனம் போல் ஒரு இருசக்கர வாகனம் நின்றுக் கொண்டிருந்ததாகவும், அதை பார்த்து கொண்டே தான் சென்றதாகவும், தாங்கள் அவர்களை தாண்டி சென்ற பிறகு அந்த வண்டி ஸ்டார்ட் ஆகும் சத்தம் கேட்டதாகவும், அங்கு இரண்டு நபர்கள் தனது வாகனத்தை பின் தொடர்ந்ததாகவும், அவர்கள் பின்னால் தொடர்வதை பார்த்து தான் தனது இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டியதாகவும், அவர்களும் வேகமாக வந்ததாகவும், தான் மெதுவாக வாகனத்தை இயக்கிய போது அவர்களும் மெதுவாக இயக்கியதாகவும், தான் பின் தொடர்வதை அறிந்து வேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றதாகவும், வித்யாமந்திர் கல்லூரி விடுதி தாண்டி சென்ற போது சாலை இறக்கம் வளைவாக இருந்ததால் தான் மெதுவாக ஓட்டியதாகவும், அப்போது டமால் என சத்தம் கேட்டதாகவும், பிறகு தான் விழுந்து விட்டதாகவும், தான் சற்று திரும்பி பார்த்தபோது துப்பாக்கியுடன் ஒரு நபர் வந்ததாகவும், ஒரு நபர் வண்டியில் உட்கார்ந்து இருந்ததாகவும், தனது

டி சர்ட் மற்றும் வலது கை பகுதி எரிந்தது அதை பார்த்து தான் ஓடியதாகவும், தான் நெருப்பை அனைத்துக் கொண்டே தன்னை சுட்டு விட்டார்கள் என கத்திக் கொண்டே ஓடியதாகவும், தன்னை சுட்ட நபரை தன்னால் அடையாளம் சொல்ல முடியும் என்றும், சாட்சி நீதிமன்றத்தில் முதலாவதாக நின்றுக் கொண்டிருந்த எதிரி வெங்கடேசன் என்பவரை அடையாளம் காண்பித்ததாகவும், இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்திருந்த நபரையும் தன்னால் அடையாளம் சொல்ல முடியும் என்றும், சாட்சி நீதிமன்றத்தில் உள்ள இரண்டாவது நபர் பரதன் என்பவரை பார்த்து அடையாளம் காட்டியதாகவும், தன்னை கை பகுதியில் துப்பாக்கியால் சுட்டதால் அதிலிருந்து வெளியேறிய குண்டு தனது வலது கையில் பட்டு தனது வலது விலா பகுதியில் நுழைந்து விட்டதாக கூறி, சாட்சி அவருக்கு ஏற்பட்ட காயத்தை தனது கை சட்டையை கழட்டி வலது கையில் உள்ள காயத்தையும், விலா எலும்பில் உள்ள காயத்தையும் மற்றும் அதை அகற்றுவதற்கு வயிற்று பகுதியில் அறுவை சிகிச்சை செய்த பகுதியையும் காட்டியதாகவும், அவை தழும்புடன் காணப்பட்டதாகவும், தான் சத்தம் போட்டுக் கொண்டே பி.எட் கல்லூரி விடுதியின் கேட்டின் முன்புள்ள வாட்ச்மேனிடம் சென்று தன்னை அடித்து விட்டதாக சொல்லியதாகவும், முருகனை அடித்துக் கொண்டிருப்பதாகவும், கைப்பையை பிடுங்கிக் கொள்ள முயற்சிப்பதாகவும் சொல்லியதாகவும், கல்லூரி வாட்ச்மேனிடம் தங்கள் கடை சூப்பர்வைசர் சிவக்குமாருக்கு தன் செல்போனில் இருந்து தகவல் தெரிவித்ததாகவும், 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்ததையும் சொல்லியதாகவும், தான் அவரிடம் பேசி கொண்டிருக்கும் போதே இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் துப்பாக்கியுடன் மீண்டும் ஊத்தங்கரை நோக்கி வந்ததாகவும், தான் ஆம்புலன்ஸ் வந்த பிறகு ஊத்தங்கரை அரசு மருத்துவ மனைக்கு தானும், முருகனும் வந்ததாகவும், அதிகமாக காயம் பட்டிருந்ததால் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு செல்ல பரிந்துரை செய்ததாகவும், தருமபுரி அரசு மருத்துவ மனையில் தனக்கு ஸ்கேன் எடுக்கப்பட்டதாகவும், அதன் பிறகு தன்னை சேலம்

அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு தனக்கு விலா எலும்பு பகுதியில் இரண்டு குண்டுகள் இருப்பததாக தெரிவித்தாகவும், சேலம் அரசு மருத்துவமனையில் தனக்கு அறுவை சிகிச்சை செய்து குண்டுகள் அகற்றப்பட்டதாகவும், சேலம் அரசு மருத்துவமனையில் தான் சுமார் 15 நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும், தருமபுரி அரசு மருத்துவமனைக்கு தன்னுடன் முருகன், மாரியப்பன், சிவக்குமார் ஆகியோர் வந்ததாகவும், போலீஸார் தன்னை ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்த போது விசாரித்ததாகவும், சம்பவ தினத்தன்று தான் கருநீலக் கலர் டி சர்ட் அணிந்திருந்ததாகவும், வெள்ளை உள் பனியன் அணிந்து இருந்ததாகவும், நீதிமன்றத்தில் தன்னிடம் காண்பிக்கப்படும் டி சர்ட் மற்றும் பணியன் தான் சம்பவ தினத்தன்று தான் அணிந்திருந்ததாகவும், **அந்த டி சர்ட் மற்றும் பணியன் சா.பொ.1 மற்றும் 2 என்றும்**, தான் சம்பவத்தின் போது ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து திரும்பவும் பெற்றுக் கொண்டாகவும், தனது இருசக்கர வாகனத்தை தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டு வந்ததாகவும், **டி.எண்.29 பி.இ.சட். 5171 இருசக்கர வாகனம் சா.பொ.3 என்றும்,** தன்னை சுட பயன்படுத்திய துப்பாக்கி நீளமாக இருந்ததாகவும், குறிப்பிட்ட அடையாளம் எதுவும் தனக்கு நியாயபகம் இல்லை என்றும், தான் துப்பாக்கியை பார்த்தவுடன் ஓடி விட்டதாகவும், அன்றைய தேதியில் டாஸ்மாக் கடையில் சுமார் மூன்று லட்சம் தொகை வசூலானது என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**அதேபோல் மாரியப்பன் என்பவர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் காட்டேரி கிராம தலைவராக 2011ம் ஆண்டு முதல் 2016 வரை செயல்பட்டாகவும், தான் பழக்கமாக இருந்த போது கோவிந்தராஜ், இளையராஜா, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் தனக்கு பழக்கம் என்றும், கடந்த 15.12.2018 அன்று இரவு சுமார் 10.15 மணியளவில் அ.சா.1 தன்னை போனில் அழைத்தாகவும், அவர் அழைத்து தன்னிடம் தானும், அ.சா.2ம்

இருசக்கர வாகனத்தில் வந்துக் கொண்டிருந்தபோது வித்யாமந்தீர் பி.எட் கல்லூரி அருகே அடையாளம் தெரியாத நபர்கள் அவர்களை துாப்பாக்கி காட்டி ஓயின்சாப் வசூல் செய்த தொகையை எடுத்துச் சென்றுவிட்டதாகவும், ஆட்களை அழைத்து வரும்படியும் சொன்னதாகவும், தான் மணி என்பவரை அழைத்தேன் அவர் ஊரில் இல்லை என்று சொல்லியதாகவும், அதனால் தான் மட்டும் கிளம்பி வந்ததாகவும், தான் வந்தபோது வித்யா மந்தீர் கல்லூரியில் வேலை பார்க்கும் 3 காவலர்கள் இருந்ததாகவும், அவர்களில் இளையப்பன் என்பவர் தனக்கு அறிமுகமானவர் என்றும், அவரிடம் தான் விசாரித்த போது ஆனந்தன் கல்லூரிக்குள் இருப்பதாகவும், முருகன் எங்குள்ளார் என்ற விவரம் தனக்கு தெரியவில்லை என்று கூறியதாகவும், தான் முருகனுக்கு அவரது அலைப்பேசியில் அழைத்தபோது தான் செடி புதரில் மறைந்திருப்பதாகவும், தான் வந்ததை பார்த்தாகவும் தான் வருகிறேன் என்று சொல்லி சிறிது நிமிடத்திலே அவர் வந்ததாகவும், தான் ஆனந்தனிடம் முருகனை அழைத்துக்கொண்டு சென்றபோது ஆம்புலன்ஸ் வந்தது என்றும், தான் ஆம்புலன்ஸில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை அழைத்துக்கொண்டு ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்ததாகவும், தான் இளையராஜாவுக்கு போன் மூலம் அ.சா.1 மற்றும் 2 ஐ துப்பாக்கியால் சுட்டுவிட்டதாகவும், அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக தகவல் தெரிவித்தாகவும், ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு தாங்கள் வந்தபோது இளையராஜா மற்றும் மதுக்கடை கண்காணிப்பாளர் சிவக்கமார் ஆகியோரும் வந்து விட்டதாகவும், பின்பு அ.சா.1 மற்றும் 2 ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்ததாகவும், தானும் அ.சா.1, 2, இளையராஜா, சிவக்குமார் ஆகியோர் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், தருமபுரி அரசு மருத்துவமனையில் ஊத்தங்கரை போலீஸார் அதிகாலை சுமார் 1 மணியளவில் வந்ததாகவும், ஆனந்தன் மயக்க நிலையில் இருந்ததால் அ.சா.1 முருகன் வாக்குமூலம் அளித்தாகவும், ஆனந்தனுக்கு அதிகமாக காயங்கள்

இருந்ததால் அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறியதாகவும், தான் தருமபுரி அரசு மருத்துவமனையிலிருந்து திரும்ப வீட்டிற்கு வந்து விட்டதாகவும், தான் ஆனந்தனை பார்த்த போது அவருக்கு வலது அல்லையில் காயங்கள் இருந்ததாகவும், முருகனுக்கு வலது காதில் காயமிருந்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**அதேபோல் திரு. சிவக்குமார் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் ஊத்தங்கரையிலுள்ள கடை எண். 2985ல் மேற்பார்வையாளராகவும், காட்டேரியிலுள்ள கடை எண். 2936ல் கூடுதல் பொறுப்பாளராக மற்றும் டாஸ்மாக்கில் மேற்பார்வையாளராக 2018ம் ஆண்டு பணி செய்து வருவதாகவும், தான் சம்பவதினமான 15.12.2018ம் தேதி இரவு சுமார் 10.15 மணியளவில் ஆனந்தனின் அலைப்பேசியில் இருந்து வித்யா மந்தீர் கல்வியியல் கல்லூரி காவலர் தன்னிடம் ஆனந்தன் மற்றும் முருகனை சுட்டு விட்டதாக தகவல் தெரிவித்ததாகவும், தான் எங்கு நடந்தது என்று கேட்டபோது கல்லூரி அருகே நடந்ததாக கூறியதாகவும், தான் அவரிடம் ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்யுமாறு கூறியபோது அவர் தகவல் தெரிவித்து விட்டதாக கூறியதாகவும், அவரிடம் தான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்து விடுவதாக சொல்லி விட்டு, தான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அவர்களும் ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு வந்து விட்டதாகவும், மருத்துவர் ஆனந்தனை பரிசோதித்த போது அவருக்கு வலது கையிலும், வலது அல்லையிலும் காயங்கள் இருந்ததாகவும், ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் உரிய மருத்துவ வசதிகள் குறைவாக இருப்பதால் தருமபுரி அரசு மருத்தவமனைக்கு செல்வதாக கூறியதாகவும், தான் ஆம்புலன்ஸ் தயார் செய்துக் கொண்டு உடனடியாக அ.சா.1, 2, தான், இளையராஜா, மாரியப்பன் ஆகியோர் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், காட்டேரிக்கடையின் மேற்பார்வையாளர் சுபாஷ் என்பவருக்கு தகவல் தெரிவித்தாகவும், அவர் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வருவதாக

சொன்ன போது அவரை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு வருமாறு தெரிவித்தாகவும், தருமபுரி அரசு மருத்துவமனையில் முருகன் மற்றும் ஆனந்தனை மருத்துவர்கள் தனிதனியாக பரிசோதனை செய்தனர் என்றும், ஆனந்தனுக்கு அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், முருகனுக்கு வலது காதில் காயம் ஏற்பட்டிருந்ததாகவும், ஆனந்தனுக்கு ஸ்கேன் மருத்துவ பரிசோதனை செய்தபோது அவரது உடம்பில் 2 குண்டுகள் இருப்பதாக தெரிவித்து மேல் சிகிச்சைக்காக சேலம் அழைத்து செல்லுமாறு மருத்துவர்கள் தெரிவித்ததாகவும், பின்பு அங்கு ஆம்புலன்ஸ் தயார் செய்து கொண்டு ஆனந்தனுடன், தானும், சுபாஷும் சேலம் அரசு மருத்துவமனைக்கு தருமபுரி அரசு மருத்துவமனையிலிருந்து சுமார் 1.30 மணியளவில் கிளம்பி சென்றதாகவும், ஆனந்தனை சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை தொடங்கிய பிறகு காலையில் தானும், சுபாஷும் அங்கிருந்து கிளம்பி விட்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**அதேபோல் இளையராஜா என்பவர் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** 2018-ம் ஆண்டு வெப்பாலம்பட்டி அரசு மதுபானக்கடையில் விற்பனையாளராக பணி செய்து வந்ததாகவும், தன்னுடன் ஆனந்தன், கோவிந்தராஜ் , முருகன் ஆகியோர் விற்பனையாளராகவும், மேற்பார்வையாளராக சுபாஷ் என்பவரும் உதவி மேற்பார்வையாளராக சிவகுமார் என்பவரும் உள்ளதாகவும், கடந்த 15.12.2018-ல் தான் தனது வீட்டில் இருந்ததாகவும், அனுமந்தீர்த்தத்தை சேர்ந்த முன்னாள் தலைவர் மாரியப்பன் என்பவர் தனக்கு 10.15 மணியளவில் போன் செய்ததாகவும், ஆனந்தன் மற்றும் முருகனை துப்பாக்கியால் வித்தியா மந்தீர் மாணவர் விடுதி பக்கம் சுட்டுவிட்டு பணத்தை கொள்ளையடித்துவிட்டதாக தகவல் சொன்னதாகவும், தான் வந்துவிடுவதாக சொல்லிவிட்டுஇருசக்கர வாகனத்தில் கல்லூரி விடுதி அருகே சென்றபோது மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டதாக சொன்னதாகவும், பின்பு தான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்ததாகவும், ஆனந்தன் மற்றும்

முருகன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாகவும், தான் பார்க்கும்போது ஆனந்தனுக்கு வலது கை அக்குள் மற்றும் விலா எலும்பு பகுதியில் காயம் இருந்ததாகவும், முருகனுக்கு வலது காதில் காயம் இருந்ததாகவும், அவருக்கு காதில் கட்டு போட்டிருந்ததாகவும், அவரை மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு சொன்னதாகவும், அவர்களுடன் தானும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் சென்றதாகவும், தான் ஆம்புலன்ஸில் செல்லும் வழியில் கோவிந்தராஜிற்கு தகவல் கொடுத்ததாகவும், தருமபுரி மருத்துவமனையில் முருகனிடம் ஊத்தங்கரை போலீசார் வாக்குமூலம் வாங்கியதாகவும், காலை 6.30 மணியளவில் ஊத்தங்கரை போலீசாரிடம் முருகன் அவர் அணிந்திருந்த வெள்ளை முழு கைச்சட்டை அதில் நீல நிறத்தில் கட்டம் இருந்ததாகவும், ஆனந்தன் அவர் அணிந்திருந்த கருநீலம் நிறமுடைய டி–சர்ட் மற்றும் முண்டா பனியன் ரத்த கரையுடன் உள்ளதை ஆஜர் செய்ததாகவும், அதை போலீசார் பெற்றுக்கொண்டதாகவும், அது சம்மந்தமாக தயார் செய்த ஆவணத்தில் தானும், கோவிந்தராஜ் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் தன்னுடையது என்றும், அதன் பிறகு தான் கடைக்கு வந்துவிட்டதாகவும், டாஸ்மாக் மேலாளர் கடைக்கு வந்து ஆய்வு செய்தார் என்றும், அவ்வாறு ஆய்வு செய்தபோது தானும் கோவிந்தராஜும் உடனிருந்தோம் என்றும், கடையின் மேற்பார்வையாளர் சுபாஷ் என்பவரும் உடனிருந்ததாகவும், ஆய்வின்போது ரூ.2,90,830/– குறைவு இருப்பதாக கடையிருப்பின் அடிப்படையில் கண்டறியப்பட்டதாகவும், இது தொடர்பாக மேலாளர் தயார் செய்த அறிக்கையில் தான், சுபாஷ் மற்றும் கோவிந்தராஜ் கையொப்பம் செய்ததாகவும், ஆய்வில் குறைவு என கண்டறியப்பட்ட தொகையானது, சம்பவத்தில் கொள்ளை போன தொகையின் மதிப்பாகும் என்றும், **முருகன் அணிந்திருந்த முழுக்கை சட்டை தான் தன்னிடம் காண்பிக்கபடுவது அது சா.பொ.4.** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**அதேபோல் சுபாஷ் என்பவர் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் வெப்பாலம்பட்டி கடை எண்.2936 மதுபானக்கடையில் மேற்பார்வையாளராக சம்பவத்திற்கு முன்பு சுமார் 1 ஆண்டாக பணி செய்து வந்ததாகவும், தன்னுடன் 3 விற்பனையாளர்கள், 1 உதவி விற்பனையாளர் மற்றும் உதவி மேற்பார்வையாளராக ஒருவரும் பணி செய்து வந்ததாகவும், கடந்த 15.12.2018 இரவு சுமார் 11.00 மணியளவில் தனது உதவி மேற்பார்வையாளர் சிவகுமார் என்பவர் தனக்கு போன் மூலம் விற்பனையாளர்கள் ஆனந்தன் மற்றும் முருகன் விற்பனை தொகையை எடுத்துச்செல்லும் வழியில் இரு நபர்கள் துப்பாக்கியால் சுட்டுவிட்டு பணத்தை கொள்ளையடித்துவிட்டு சென்றுவிட்டதாக தகவல் சொன்னதாகவும், அதன் பிறகு ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் காயம் பட்டவர்களுக்கு முதலுதவி சிகிச்சை எடுத்துவிட்டு தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று கொண்டிருப்பதாக தகவல் சொன்னதாகவும், தான் 1.00 மணிக்கு தருமபுரி அரசு மருத்துவனைக்கு சென்றதாகவும், தான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தவர்களை பார்த்துக்கொண்டிருந்தபோது போலீசார் மருத்துவனைக்கு வந்துவிட்டதாகவும், போலீசார் முருகனிடம் வாக்குமூலம் வாங்கியதாகவும், இரவு 2.00 மணிக்கு ஆனந்தனை மேல்சிகிச்சைக்கு சேலத்திற்கு அழைத்து சென்றுவிட்டதாகவும், தான் ஆனந்தனை சேலம் அரசு மருத்துவமணையில் சிகிச்சைக்கு அனுமதித்துவிட்டு விடியற்காலை தனது வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், சம்பவம் நடந்தவுடனே சம்பவம் தொடர்பாக டாஸ்மாக் மாவட்ட மேலாளருக்கு தகவல் தெரிவத்துவிட்டதாகவும், அடுத்த நாள் மாவட்ட மேலாளர் கணக்குகளை சரிப்பார்க்க உதவி கணக்கு மேலாளர் மஞ்சுநாத் என்பவரை கடைக்கு அனுப்பி வைத்திருந்ததாகவும், பகல் 12.00 மணிக்கு கடைக்கு வந்து பூட்டை கல்லால் உடைத்து திறந்ததாகவும், 2 விற்பனையாளர்கள் கோவிந்தராஜ், இளையராஜா மற்றும் தான், கணக்கு மேலாளர் ஆகியோர் கணக்கு வழக்குகளை சரிப்பார்த்தபோது சம்பவம் நடைபெற்ற தினத்தின் விற்பனை ஆனது

ரூ.2,90,830/- என கண்டறிந்து மாவட்ட மேலாளருக்கு கணக்கு மேலாளர் மூலமாக தகவல் தெரிவித்ததாகவும், அதன் பிறகு காவல் துறையினருக்கு கொள்ளையடிக்கப்பட்ட தொகையின் மதிப்பை தெரிவித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**அதேபோல் குமரேசன் என்பவர் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** கடந்த 16.12.2018-ம் தேதி காலை சுமார் 8.45 மணியளவில் தனது வாகனத்திற்கு பெட்ரோல் போடுவதற்காக அனுமந்தீர்த்தம் நோக்கி சென்றதாகவும், காட்டேரி கல்லூரி விடுதியை தாண்டி ஜெயவேல் என்பவரின் தோட்டத்தின் வளைவில் கூட்டமாக இருந்ததாகவும், தான் அதனால் வாகனத்தை ஓரமாக நிறுத்தியதாகவும், போலீசார் அங்கிருந்ததாகவும், தான் விசாரித்தபோது முதல் நாள் இரவு துப்பாக்கியால் சுட்டு மதுபானக்கடையின் ரொக்கம் கொள்ளையடிக்கப்பட்டதாக தெரிந்துக்கொண்டதாகவும், போலீசார் சம்பவ இடம் குறித்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்வதாகவும் அதற்காக தானும் எனது தம்பி ரமேஷ் என்பவரும் சாட்சியாக இருக்க சொல்லி கேட்டார்கள் தானும் தன் தம்பி ரமேஷும் சாட்சிகளாக இருக்க சம்மதித்ததாகவும், பின்பு போலீசார் காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையது என்றும், பார்வை மகஜரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றும், சிறிது நேரம் அங்கே இருந்தோம் அப்போது சம்பவ இடத்தின் கிழக்கு புறத்திலிருந்து ஒரு ஆக்டிவா இரு சக்கர வாகனத்தை போலீசார் மகஜரில் கைப்பற்றியதாகவும், அதிலும் தானும், ரமேஷ் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையது என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**அதேபோல் பிரகாஷ் என்பவர் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு வித்தியா மந்தீர் கல்லூரியில்

செக்யூரிட்டி பணியில் பணி செய்து வந்ததாகவும், அப்புனு என்பவரும் தானும் இரவு காவல் பணியில் இருந்ததாகவும், இரவு சுமார் 10 மணிக்கு மேல் தாங்கள் பணியிலிருந்தபோது டமீல் என சத்தம் கேட்டதாகவும், சுமார் 4, 5 நிமிடங்கள் கழித்து ஒரு நபர் தன்னை சுட்டுவிட்டார்கள், சுட்டுவிட்டார்கள் என்னை காப்பாற்றுங்கள் என சொல்லிக்கொண்டே கல்லூரியின் விடுதி கேட் அருகே கீழே விழுந்து தண்ணீர், தண்ணீர் என கேட்டதாகவும், சத்தம் கேட்டு விடுதி மாணவர்கள் தண்ணீர் எடுத்துக்கொண்டு ஓடி வந்ததாகவும், தண்ணீர் வாங்கி கீழே விழுந்த நபருக்கு தான் தண்ணீர் கொடுத்ததாகவும், தன்னுடன் இருந்த அப்புனு கல்லூரி மேல் அதிகாரிக்கு போன் மூலம் தகவல் சொன்னதில் கல்லூரி விடுதி கண்காணிப்பாளர் இளையப்பன் அங்கு வந்துவிட்டதாகவும், கண்காணிப்பாளர் இளையப்பன் அடிப்பட்ட நபரை விசாரித்து அவர் தகவல் சொன்னதாகவும், பிறகு தான், அப்புனு மற்றும் இளையப்பன் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றதாகவும், தங்கள் கல்லூரி விடுதி கேட்டின் முன்பிருந்து 50மீ தூரம் சம்பவம் நடந்ததாக சொன்னதாகவும், அங்கு தாங்கள் சென்று பார்த்தபோது ஒரு இருசக்கர வாகனம் ரோட்டிற்கு கிழக்கே விழுந்து கிடந்தது அடிப்பட்ட மற்றொரு நபர் யாருக்கோ போனில் தகவல் சொன்னதாகவும், 10நிமிடத்தில் மாரியப்பன் அந்த இடத்திற்கு வந்ததாகவும், பின்பு நாங்கள் அனைவரும் சேர்ந்து மீண்டும் கல்லூரி விடுதி முன்புறம் வந்ததாகவும், பின்பு போலீசாருக்கும் 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கும் தகவல் தெரிவித்து ஆம்புலன்ஸ் வாகனத்தில் அனைவரும் சென்றுவிட்டதாகவும், சம்பவத்திற்கு அடுத்த நாள் மற்றும் அதன் பிறகும் சுமார் 10 நாட்கள் போலீசார் தங்களை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் இளையப்பன் என்பவர் அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு வித்தியா மந்தீர் கல்லூரியில் பொறுப்பு பாதுகாப்பு அலுவலராக பணி செய்து வந்ததாகவும், கடந்த 2018ம் ஆண்டு 15ம் தேதி டிசம்பர் மாதம் தான் கல்லூரியில் பணியில் இருந்தபோது இரவு

10.15 முதல் 10.30 மணியளவில் செக்யயூரிட்டி பணியிலிருந்த அப்புனு என்பவர் தனக்கு தொலைப்பேசியில் துப்பாக்கியால் அடிப்பட்டதாக ஒரு நபர் கேட்டின் முன்பு விழுந்து விட்டதாக தனக்கு தகவல் சொன்னதாகவும், தான் கல்லூரியிலிருந்து அந்த இடத்திற்கு வந்ததாகவும், விழுந்த நபருக்கு தண்ணீர் கொடுத்ததாகவும், விழுந்த நபர் தன்னிடம் அவரது செல்போனை கொடுத்து தான் விழுந்துவிட்டது குறித்தும் காயம்பட்டது குறித்தும் தகவல் தெரிவிக்குமாறு சொன்னதாகவும், தான் அவர்களுக்கு தகவல் கொடுத்ததாகவும், கீழே விழுந்த நபர் தன்னுடன் வந்த மற்றொரு நபரும் கீழே விழுந்துவிட்டதாக சொன்னதாகவும், அவர் சொன்ன தகவலின் பேரில் கீழே விழுந்த மற்றொரு நபரை தேடுவதற்காக தான், அப்புனு மற்றும் பிரகாஷ் சுமார் 60மீ தெற்கு நோக்கி சென்றதாகவும், தாங்கள் சென்று டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்த்தபோது அந்த இடத்தில் ஆட்கள் யாரும் இல்லை என்றும், ஒரு இருசக்கர வாகனம் மட்டும் ரோட்டின் கிழக்கு புறம் விழுந்து கிடந்ததாகவும், திரும்ப தாங்கள் அனைவரும் விடுதி கேட் அருகே வந்து 108 ஆம்புலன்ஸிற்கு தான் தகவல் தெரிவித்ததாகவும், அதன் பின்னிட்டு ஹை வே பெட்ரோல் வாகனமும் வந்ததாகவும், ஆம்புலன்ஸில் அடிப்பட்ட நபரை ஏற்றி அனுப்பி வைத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் மஞ்சுநாத் என்பவர் அ.சா.10 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** கடந்த 15.12.2018 அன்று கடை எண்.2936 வெப்பாலம்பட்டி கடையினை மூடிவிட்டு விற்பனையாளர் ஆனந்தன், முருகன் ஆகியோர்கள் இரவு 10 மணிக்கு அவர்கள் தங்கி உள்ள அறை அனுமன்தீர்த்தம் அருகே உள்ளதால் இருவரும் விற்பனை தொகையை கையில் எடுத்து கொண்டு வித்யாமந்தீர் கல்லூரி விடுதிக்கு அருகே அவர்கள் சென்று கொண்டு இருந்தபோது அவர்களை பின் தொடர்ந்து வந்த இரண்டு நபர்களும் கையில் இருந்த துப்பாக்கியால் சுட்டு விற்பனையாளர்கள் கையில் இருந்த தொகையை பிடுங்கி சென்று விட்டதாகவும், சூப்பர்வைசர்கள் சுபாஷ் மற்றும் சிவகுமார்

இருவரும் இரவு 11.30 மணி அளவில் தொலைபேசி வாயிலாக தகவல் சொன்னதாகவும், தனது உயரதிகாரியிடம் சம்பவம் அன்று இரவே தகவல் தெரிவித்ததாகவும், விற்பனையாளர்கள் தாக்கப்பட்டு தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டு மறுநாள் காலையில் மருத்துவமனைக்கு வந்து பார்த்ததாகவும், மருத்துவமனையில் விற்பனையாளர் முருகன் சிகிச்சையில் இருந்ததாகவும், மற்றொரு விற்பனையாளரை மேல் சிகிச்சைக்காக சேலம் அனுப்பி வைத்தார்கள் என்று தெரிந்துக்கொண்டதாகவும், எவ்வளவு தொகை களவு என்பதை அறிய மேற்படி கடைக்கு வந்ததாகவும், தனது உயர் அதிகாரி மாவட்ட மேலாளர் கடையில் சென்று எவ்வளவு தொகை களவு சென்றது என்பதை உறுதி செய்து கூறுமாறு தெரிவித்து இருந்ததாகவும், மேற்படி கடையை பகல் 12 மணி அளவில் அடைந்து விட்டதாகவும், கடையின் பூட்டு சாவி தன்னிடம் இல்லை என்றும், அந்த இடத்தில் போலீசாரும் மேற்சொன்ன சுபாஷ், விற்பனையாளர்கள் கோவிந்தராஜ், இளையராஜா அங்கு இருந்தார்கள் என்றும், தொகையோடு சேர்த்து சாவியும் களவு செய்து விட்டதால் கல்லால் உடைத்து பூட்டை திறந்ததாகவும், அதன் பிறகு சரக்கு இருப்பு விவரம், முந்தையநாள் வரை விற்பனை தொகை வங்கியில் வைப்பீடு செய்த விவரம், அங்கு இருந்த பதிவேடுகளின் மாவட்ட அலுவலகத்தில் இருந்து, சரக்கு அனுப்பப்பட்ட விவரத்தில் இருந்து விற்பனையான சரக்கு போக இருப்பில் உள்ள சரக்கின் அடிப்படையில் 15.12.2018 அன்று விற்பனை தொகை எவ்வளவு இருந்தது என கணக்கீடு செய்ததாகவும், அதன் அடிப்படையில் 15.12.2018 அன்று ரூ.2,90,830/– தொகைக்கு சரக்கு விற்பனை செய்யப்பட்டது தெரியவந்ததாகவும், மேற்படி விவரங்கள் அடிப்படையில் புள்ளிவிவர பட்டியலை சுபாஷ் விற்பனையாளர் கோவிந்தராஜ், இளையராஜா ஆகியோர்களுக்கு அங்கு இருந்ததால் தயார் செய்து அவர்களிடம் கையொப்பம் வாங்கியதாகவும், அப்போது அசோக்குமார் @ கோ நிறுவனத்தின் கணக்கர் உதவியாளர் ஆனந்தன் என்பவரும் புள்ளி

விவரப்பட்டியல் விபரம் தயார் செய்த போது உடன் இருந்து கையொப்பம் இட்டதாகவும், அதன் ஒரு நகலை மேற்படி விற்பனையாளர், மேற்பார்வையாளர் ஆகியோர்களிடம் கொடுத்து விட்டு அசலை தனது உயர் அதிகாரி பார்வைக்கு தான் நேரில் சென்று கொடுத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் பாலகிருஷ்ணன் என்பவர் அ.சா.11 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் தற்போது சிங்காரப்பேட்டை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 2018/2019 ஆண்டுகளில் ஊத்தங்கரை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணி புரிந்து வந்த போது நி.கு.எண்.589/2018 குற்ற வழக்கில் சம்பந்த பட்ட சேலம் குமாராமங்கலம் அரசு மருத்துவமனையில் வழக்கில் பாதிக்கப்பட்ட ஆனந்தன் என்பவருக்கு அல்லையில் இருந்து மருத்துவரால் எடுக்கப்பட்ட இரண்டு பால்ரஸ் குண்டுகளை பெற்று வர 17.12.2018–ம் ஆண்டு அன்று தபாலும் கடவு சீட்டு கொடுத்து ஆய்வாளர் தன்னை அனுப்பி வைத்ததாகவும், மதியம் 3 மணியளவில் மருத்துவமனை சென்று அலுவல் மருத்துவர் இடம் கடித்ததினை கொடுத்த பொழுது அவர் வாய் மொழி உத்தரவின் மூலம் மறுநாள் வருமாறு கூறியதாகவும், பிறகு நிலையம் வந்து நடந்த விவரத்தை ஆய்வாளரிடம் கூறியதாகவும், பின்பு 18.12.2018 காலை 7 மணிக்கு கடவு சீட்டு ஆய்வாளர் அனுப்பியதன் பெயரில் 11 மணி அளவில் சேலம் மருத்துவமனை சென்று தபாலை கொடுத்த போது மருத்துவர் காடா நூல் சுற்றப்பட்ட பிளாஸ்டிக் டப்பாவிற்குள் இரண்டு பால்ரஸ் குண்டுகள் உள்ளது என கூறி கொடுத்ததை பெற்று நிலையம் வந்து ஆஜர் படுத்தியதாகவும், ஆய்வாளர் விசாரணைசெய்ததாகவும், பின்பு 04.04.2019 அன்று மேற்படி தடைய பொருட்களை ஊத்தங்கரை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் கடிதம் மூலம் ஆஜர்படுத்தி நீதிமன்றத்தின் மூலம் சென்னை தடயவியல் அறிவியல் ஆய்வகத்திற்கு 05.04.2019 அன்று ஒப்புவித்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் திருஞானம் என்பவர் அ.சா.12 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** கடந்த 24.02.2019 அன்று ஊத்தங்கரை காவல் நிலையத்தில் இருந்து தனக்கு அழைப்பானை வந்து 25–ம் தேதி காவல் நிலையம் வருமாறு குறிப்பிட்டு இருந்ததாகவும், ஒரு குற்ற வழக்கில் சாட்சியாக இருக்க வேண்டும் என்று தன்னையும் தன் உதவியாளர் கோவிந்தராஜனையும் அழைத்து இருந்ததாகவும், 25–ம் தேதி காலை 5.30 மணியளவில் தானும் தன் உதவியாளரரும் ஊத்தங்கரை காவல் நிலையம் சென்றதாகவும், நிலையத்தில் காவல் ஆய்வாளர் வெங்கடேசனை விசாரணை செய்து கொண்டு இருந்ததாகவும், அப்போது தான், தன் உதவியாளர், கேமராமேன் மற்றும் போலீஸ் இருந்ததாகவும், ஆஜர் 1–ம் எதிரியிடம் விசாரித்ததாகவும், வெப்பாலம்பட்டி ஒயின்சாப்பில் இருந்து இரவு 10.00 மணிக்கு தொகையை எடுத்து சென்ற போது, காட்டேரி வித்தியாமந்தீர் அருகே மது கடை ஊழியர்கள் சென்ற போது அவர்களை தாக்கி பணம் பொருட்கள் எடுத்து வந்ததாக 1–ம் எதிரி கூறியதாகவும், பரதனும் வெங்கடேசன் கோழி குஞ்சி வளர்ப்பதன் மூலம் நண்பர்களாக இருந்தார்கள் என்று கூறியதாகவும், பர்கூர் அருகே ஒப்பந்த வாடியில் இருந்து நாட்டு துப்பாக்கி வாங்கியதாக கூறியதாகவும், அந்த துப்பாக்கியை பயன்படுத்தி சுட்டதாக கூறியதாகவும், தங்களை அழைத்து சென்றால் பயன்படுத்திய பொருளை ஆஜர்படுத்துவதாக கூறியதாகவும், காவல் நிலையத்திலேயே 6 முதல் 7 மணி வரை வெங்கடேசனிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகவும், பிறகு 8 முதல் 9 வரை பரதன் இடம் பதிவு செய்யப்பட்டதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் தன்னுடைய கிராம உதவியாளரும் சாட்சி கையொப்பம் இட்டதாகவும், 25.02.2019 தேதியிட்ட எதிரி வெங்கடேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது என்றும், 2–வது கையெழுத்து தன் உதவியாளர் கையெழுத்து என்றும், ஒப்பு கொண்ட தனது கையெழுத்து அ.த.சா.ஆ.2 என்றும், 25.02.2019 தேதியிட்ட எதிரி பரதன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல்

கையெழுத்து தன்னுடையது என்றும், 2–வது கையெழுத்து தன் உதவியாளர் கையெழுத்து என்றும், ஒப்பு கொண்ட கையெழுத்து அ.த.சா.ஆ.3. பிறகு வெங்கடேசனை அழைத்து கொண்டு ஊத்தங்கரை கலைஞர் நகரில் உள்ள வெங்கடேசன் வீட்டிற்கு சென்றதாகவும், அப்போது தான் தன் உதவியாளர் எதிரி வெங்கடேசனும் பரதனும் மற்றும் போலீசாரும் வந்ததாகவும், கேமராமேன் உடன் வந்து இருந்ததாகவும், எதிரி வெங்கடேசன் வீடு தார்ஸ் வீடு என்றும், வீட்டிற்குள் அவரே சென்று கோழி கூட்டில் உள் இருந்த துப்பாக்கி ஆஜர்படுத்தியதாகவும், மேலும் 4 பிஸ்டல் குண்டுகளை ஆஜர்படுத்தியதாகவும், கோலி குண்டு போன்று 3 குண்டுகளை ஆஜர்படுத்தியதாகவும், மேலும் 4 பாக்கெட்டுகள் பிரிக்காத நிலையில் ஆஜர்படுத்தியதாகவும், மேற்படி பொருட்களை வெங்கடேசன் ஆய்வாளர்களிடம் கொடுத்ததாகவும், அப்போது கேமராமேன் ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும், பொருட்களை தன் முன்னிலையில் காண்பித்ததாகவும், அவைகளை பதிவு செய்து தன்னிடமும் என் உதவியாளரிடமும் கையெழுத்து வாங்கியதாகவும், பொருட்களை பார்த்தால் அடையாளம் காண்பிப்பதாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் கைபற்றுதல் மகஜரில் (**அ.தா.சா.ஆ.4)** உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது என்றும், ஆஜர்படுத்தபட்டுள்ள **துப்பாக்கிகளில் குட்டையாக உள்ள துப்பாக்கி** (அ.சா.பொ.5) எதிரி வெங்கடேசன் வீட்டில் இருந்து ஆஜர்படுத்தியது என்றும், ஆஜர்படுத்தப்பட்டுள்ள **4 பிரிக்கப்படாத டப்பா கொண்ட பாக்கெட் சா.பொ.6**. ஆஜர்படுத்தப்பட்டுள்ள **4 பிஸ்டல் குண்டுகளும் 3 கோலி குண்டுகளும் சா.பொ.7.** எதிரி வெங்கடேசன் வீட்டில் 10 மணிக்கு முடித்து விட்டு ரெட்டிப்பட்டி பரதன் வீட்டிற்கு சென்றதாகவும், எதிரி பரதன் வழியை காண்பித்து வந்ததாகவும், எதிரி பரதன் வீடு ஓட்டு வீடு என்றும், தாங்கள் அனைவரும் அங்கும் சென்றதாகவும், எதிரி பரதன் வீட்டின் பரனில் இருந்து நீட்டு நாட்டு துப்பாக்கி கரிமருந்து, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிற பவுடர் கோலி குண்டுகள் போன்று 5 குண்டுகள் தேங்காய் நாரு, டி.வி.யஸ் பெரிய இருசக்கரவாகனம் மற்றும் ரூ.25,000/– தொகை அதில்

ரூ.500, 200 நோட்டுகள் இருந்தது என்றும், ஆய்வாளர் அவைகளை எண்ணிபார்த்ததாகவும், மகஜர் தயார் செய்து கையெழுத்து வாங்கியதாகவும், தானும் தன் உதவியாளரும் கையெழுத்து போட்டதாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் **கைற்பற்றுதல் மகஜரில் (அ.த.சா.ஆ.5)** உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது என்றும், இரண்டாவது கையெழுத்து தன் உதவியாளர் உடையது என்றும், சுமார் 11.30 மணி அளவில் அங்கு வேலை முடிந்து விட்டதாகவும், ஆஜர்படுத்தப்பட்ட **நீட்டு துப்பாக்கி (அ.சா.பொ.8)** அங்கு கைபற்றியதாகவும், **மஞ்சள், ஆரஞ்சு நிற பவுடர் உள்ள டப்பா சா.பொ.9என்றும், 5குண்டுகள் சா.பொ.10** என்றும், **தேங்காய் நாரு சா.பொ.11** என்றும், **கரிமருந்து பாக்கெட் சா.பொ.12** என்றும், ஆஜர்படுத்தப்பட்ட புகைபடத்தில் உள்ள ரூபாய் நோட்டுகளை கைபற்றியதாகவும், **புகைபடத்தின் தொகுப்பு சா.பொ.13 என்றும்,** அங்கிருந்து சென்னப்பநாயகனூர் பழையூருக்கு இரண்டு எதிரிகளும் வழி காட்டி அழைத்து சென்றதாகவும், ஏரிகளுக்கு அருகில் கொண்டம்பட்டி போகும் மண் சாலையில் புளியமரத்துக்கு அருகே ஒரு பேக் ஜிப்பு ஒன்று, சாம்பல், ஸ்டேபலர், கால்குலேட்டர், மூன்று சாவிகள் அடங்கிய கொத்து ஆகியவற்றை இரண்டு எதிரிகளும் ஆஜர்படுத்தியதாகவும், அந்த இடத்தில் மகஜர் தயார் செய்து கையெழுத்து வாங்கியதாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் **கைபற்றுதல் மகஜர் (அ.த.சா.ஆ.6)** உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது என்றும், கால்குலேட்டர் உடைந்த நிலையில் இருந்ததாகவும், **உடைந்த நிலையில் உள்ள கால்குலேட்டர் சா.பொ.14** என்றும், ஜிப் **சா.பொ.15, ஸ்டேபலர் சா.பொ.16 என்றும், மூன்று சாவிகள் உடைய கொத்து சா.பொ.17, சாம்பல் பேக் (சிறிதளவு எரிந்த சாம்பல் மண்) சா.பொ.18** என்றும், அதன் பிறகு சேர்ந்தே காவல் நிலையம் வந்ததாகவும், அதன் பிறகு மதியம் 2.00 மணிக்கு வருமாறு போலீஸ் கூறி இருந்ததாகவும், 2 மணியளவில் தானும் தன் உதவியாளர் ஊத்தங்கரை காவல் நிலையம் வந்ததாகவும், அதன் பிறகு மகேந்திரனிடம் வாக்குமூலம் வாங்கியதாகவும், மகேந்திரன் கோழி வளர்ப்பின் மூலமாக நண்பர்கள்

ஆனதாகவும், பணம் வாங்கிகொண்டு நாட்டு துப்பாக்கியை கொடுத்தேன் என்று வாக்குமூலம் அளித்ததாகவும், தன் உதவியாளரும் கையெழுத்து போட்டதாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் 25.02.2019 தேதியிட்ட **மகேந்திரன் வாக்கு மூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து (அ.சா.சா.ஆ.7)** தன்னுடையது தான் என்றும், ஆஜர் 1–ம் எதிரி வெங்கடேசன் என்றும், 2–ம் எதிரி பரதன் என்றும், 3–ம் எதிரி மகேந்திரன் என்றும் அடையாளம் காட்டி சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் ராஜேந்திரன் என்பவர் அ.சா.13 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** கடந்த 25.02.2019 அன்று ஊத்தங்கரை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி போது அன்றை காவல் ஆய்வாளர் தனக்கு நியமித்த அலுவலக ஊத்தங்கரை கா.நி.கு.எ.589/2018 சட்ட பிரிவுகள் 394, உ/இ.397 இ.தா.சா. மற்றும் பிரிவு 25/1எ ஆம்ஸ் ஆக்ட் படி வழக்கில் கண்ட எதிரிகள் விசாரணையின் போது பாதுகாப்பு அலுவலராக சி.கா.ஆ.நாடராஜன் உடன் தானும் காவலர் ஏழுமலையும் பணி நியமித்து எதிரிகளான வெங்கசடேசன், பரதன் ஆகியோர்கள் அன்று காவல் நிலையத்தில் வைத்து ஊத்தங்கரை கிராம நிர்வாக அலுவலர் திருஞானம் மற்றும் அவர்களது உதவியாளர் மற்றும் வீடியோ கிராப்பர் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்தபோது முதலில் வெங்கடேசன் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகவும், 2–வதாக பரதன் ஒப்புதல்வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகவும், அதன் பிறகு 9 மணியளவில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு எதிரி வெங்கடேசன் வீட்டிற்கு கிராம நிர்வாக அலுவலர், மற்றும் அலுவலக உதவியாளர், வீடியோ கிராப்பர், ஆய்வாளர் சென்றதாகவும், எதிரி வெங்கடேசன் வீட்டில் அடையாளம் காண்பித்த Air Gun–1, Pistol–4, Bolles–3, திறக்கப்படாத நிலையில் 4–குண்டு பாக்கெட்கள் ஆகியவற்றை கிராம நிர்வாக அலுவலக முன்நிலையில் கைபற்றப்பட்டதாகவும், பிறகு அங்கு இருந்து ரெட்டிப்பட்டி கிராமத்தில் எதிரி பரதன் வீட்டிற்கு சென்றதாகவும், சீமை பில்லை ஓடு உடைந்த வீட்டில் பரனில் நாட்டு துப்பாக்கி ஒன்று, மஞ்சள், ஆரஞ்சு நிற

பவுடர் டப்பா 1, பால்ரச குண்டு 5, பேப்பர் சுத்திய கரி மருந்து, தேங்காய் நாரு, இரு சக்கர வாகனம் மற்றும் ரூ.25,000/− ரொக்கம் ஆகியவற்றை கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாகவும், மேலும் எதிரிகளுடன் சென்னப்பநாயக்கனூர் இருந்து பழையூர் கொண்டம்பட்டி செல்லும் சாலையில் ஏரியின் அருகே உள்ள ஒரு புளிய மரத்தின் இடது பக்கம் சாம்பல் நிற படிந்த ஜிப் ஒன்று இருந்து, சாவி கொத்து ஒன்று, ஸ்டேபலர் ஒன்று இருந்தது, சாலைக்கு வலது பக்கமாக கால்குலேட்டர் உடைந்த நிலையில் இருந்ததை மகஜரில் கைபற்றப்பட்டதாகவும், இங்கிருந்து பர்கூர் ஒப்பந்தவாடி சென்றதாகவும், எதிரி மகேந்திரனை இதர எதிரி அடையாளம் காட்டியதாகவும், ஆய்வாளர் அவரை கைது செய்து நிலையம் அழைந்து வந்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் ஸ்ரீவித்யா என்பவர் அ.சா.14 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் தற்போது சென்னை தடயவியல் அறிவியல் துறையில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 05.04.2019 அன்று உதவி இயக்குநராக துப்பாக்கியியல் பிரிவில் பணிபுரிந்த போது காவலர் எண்.1785 திரு.பாலகிருஷ்ணன் என்பவர் மூலமாக ஊத்தங்கரை குற்றவியல் நடுவர் நீதிமன்ற க.எண்.573/2019 நாள்.04.04.2019 அதில் குறிப்பிட்டுள்ள வழக்கு சொத்துக்கள் சரியான முத்திரையுடன் தங்கள் ஆய்வகத்தில் பெறப்பட்டதாகவும், அதில் 1 இன சொத்து ஒன்று ஒற்றை குழல் முன் வழி நிறமும் நாட்டு துப்பாக்கி 2. இரண்டு இரும்பு குண்டுகள் 3. ஆரஞ்சு நிற பவுடர் 4. கருப்பு நிற பவுடர் 5. தேங்காய் நாரு 6. வெள்ளை நிற முன்டா பனியன் 7. நேவி புளு அரக்கை டீ சட்டை 8 நீள வெள்ளை முழுக்கை சட்டை மேற்படி வழக்கு சொத்து துணை இயக்குநர் உடன் இணைந்து ஆய்வு செய்யப்பட்டதாகவும், அதில் 1 ஒற்றை குழல் நாட்டு துப்பாக்கி அது உபயோகப்பட்டு இருந்ததற்கான எரிந்த நிலையில் உள்ள துகள்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும், மேற்படி துப்பாக்கி இயங்கும் நிலையில் இருந்ததாகவும், மேற்படி துப்பாக்கி தற்செயலாக வெடிக்கக்கூடிய தன்மையில் இல்லை என்றும்,

2-ம் இரும்பு குண்டுகள் ஒற்றை குழல் நாட்டு துப்பாக்கியில் குண்டுகளாக உபயோகப்படுத்தக்கூடிய குண்டுகள் என்றும், மேற்படி குண்டுகள் மேற்படி துப்பாக்கியில் இருந்து 30 கெஜ தூரத்தில் இருந்து சுட்டால் தீவிரமான காயங்களை ஏற்படுத்தும் என்றும், 3 ஆரஞ்சு நிற பவுடரில் ஆய்வு செய்ததில் அதில் Percussion CAPS செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் பொருள் என்றும், 4-ல் கறுப்பு நிற பவுடரில் கண் பவுடர் குறிய வேதிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இது மேற்படி துப்பாக்கியில் உந்து எரி பொருளாக தேங்காய் நார் மேற்படியில் துப்பாக்கியில் தடுப்பு பொருளாக பயன்படுத்தக்கூடியது என்றும், முன்டா பனியனில் வலது முன் பக்க தோள் பகுதியில் இருந்த இரண்டு துளைகள் இரும்பு குண்டு துளைத்ததனால் ஏற்பட்டது என்று கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அரைக்கை டீசர்ட் வலது கை பின் பகுதியில் 17.07 சென்டி மீட்டர் X 4.5Cm அளவிலான கிழிதலின் துப்பாக்கி சுட்ட வெப்பத்தின் மற்றும் எரி பொருளின் விளைவினால் ஏற்பட்டது என்று கண்டுபிடிக்கப்பட்டதாகவும், எனவே மேற்படி துளை கிழிதல் துப்பாக்கி சூட்டினால் சுமார் 3 அடி தூரத்தில் இருந்து சுடப்பட்டதால் ஏற்பட்டது ஆக கருத்து வழங்கப்பட்டதாகவும், முழுக்கை சட்டையில் துப்பாக்கி சுட்டதனால் ஏற்பட்ட எந்தவிதமான துளை இல்லை என்றும், மேற்படி விவரங்கள் அடங்கிய ஆய்வறிக்கை BALL 29/2019 நாள்.31.07.2019 அன்று மேற்படி நீதிமன்றத்திற்கு கடித எண்.1533/2019 நாள்.26.08.2019 அன்று நியமிக்கப்பட்ட பாலகிருஷ்ணன் காவலர் மூலமாக 28.08.2019 அன்று ஆய்விற்கு பின்னர் **ஆய்வறிக்கை (அ.த.சா.ஆ.8)** உடன் மற்றும் மேற்சொன்ன 8 பொருட்களும் ஆய்வக முத்திரையுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் நடராஜன் என்பவர் அ.சா.15 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் தற்போது பாரூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், 15.12.2018ம் தேதியில் 23.30 மணிக்கு

ஊத்தங்கரை காவல் நிலையத்தில் இரவு ரோந்து அலுவலில் இருந்த போது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் முருகன் த/பெ. பெருமாள், ஆனந்தன் த/பெ. அண்ணாமலை ஆகியோர்களை ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது முருகன், ஆனந்தன் இருவரும் மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால், தருமபுரி மருத்துவமனைக்கு சென்று பொது வார்டில் முருகன் என்பவரை 16.12.2018 அன்று இரவு 01.00 மணிக்கு விசாரணை செய்து புகார் வாக்கு மூலம் பெற்று ஊத்தங்கரை காவல் நிலையம் வந்து அதிகாலை 03.00 மணிக்கு ஊத்தங்கரை காவல் நிலைய குற்ற எண். 589/2018 இ.த.ச பிரிவு 394ன் இணைந்த 397 மற்றும் இந்திய ஆர்ம்ஸ் ஆக்ட் 25(1)(எ)ன் கீழ் வழக்கினை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையினை (அ.த.சா.ஆ.9) ஊத்தங்கரை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனுப்பியும் இதர நகல்களை காவல் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் விமலா என்பவர் அ.சா.16 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் தற்போது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 15.12.2018 அன்று இரவு 11.00 மணி அளவில் தான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் பணி மருத்துவராக இருந்தபொழுது முருகன் த/பெ.பெருமாள், ஆனந்தன் த/பெ.அண்ணாமலை ஆகியோர்களை மாரியப்பன் என்பவர் சிகிச்சைக்ககாக அழைத்து வந்ததாகவும், அவர்களில் முருகன் என்பவர் இரவு 10.30 மணி அளவில் வித்தியாமந்தீர் மாணவர் விடுதி அருகே இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது வேறு இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் துப்பாக்கியால் சுட்டதாக கூறியதாகவும், முருகள் என்பவரை பரிசோதனை செய்தில் வலது காதின் மடல் 4x2x1CM அளவில் பிய்ந்து இருந்ததாகவும், மூக்கில் 0.5x0.5cm அளவில் சிராய்பு

காயம் இருந்ததாகவும், அவரை மேல் சிகிச்சைகாக தருமபுரி மருத்துவ கல்லூரி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்ததாகவும், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முருகனுக்கு சிகிச்சை அளித்துபோது வலது காதுக்கு அருகே தாடை எழும்பில் ஒரு சிறிய எழும்பு முறிவு இருந்தது கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் மேற்படி முதல் காயம் கொடுங்காயம் என்று கருத்துரை வழங்கியதாகவும், அதே சம்வத்தின் தொடர்ச்சியாக சிகிச்சைக்கு வந்திருந்த ஆனந்தன் என்பவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு வலது அக்குல் கீழ் பகுதியில் 1x1cm அளவில் வட்ட வடிவலன துப்பாக்கியால் சுட்ட தீ காயம் இருந்தது. அவரது வலது முன் கையில் உள் பகுதியில்  1x1cm அளவில் கிழிந்த மாதிரியான காயம் இருந்ததாகவும், மேற்படி வலது முன் கையின் உள் பகுதியில் மேற்கூறிய காயத்திற்கு அருகே 1x0.5cm அளவில் கிழிந்த காயம் இருந்ததாகவும், அதே இடத்திற்கு அருகில் 0.5x0.5cm அளவில் ஒரு தீ காயம் இருந்தது. அவரை மேல் சிகிச்சைகாக தருமபுரி மருத்துவ கல்லூரி அரசு மருத்துவமனை பரிந்துரை செய்ததாகவும், அவரை அங்கிருந்து மறுபடியும் மேல் சிகிச்சைகாக சேலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு உள்ளதாகவும், சிகிச்சையின் முடிவில் அவருக்கு உள்ள காயங்கள் கொடுங்காயம் என்று சிகிச்சை அளிந்த மருத்துவர் சான்று வழங்கியதாகவும், அதன் அடிப்படையில் காயம் பட்ட நபருக்கு உள்ள காயம் கொடுங்காயம் என்று கருத்துரை அளித்து காய சான்றுதல் வழங்கியதாகவும், முருகன் என்பவருக்கு விபத்து பதிவேட்டு உடனான காய சான்று அ.தா.சா.ஆ.10. ஆனந்து விபத்து பதிவேட்டு உடனான காய சான்றிதழ் அ.த.சா.ஆ.11. ஆனந்தனுக்கு உள்ள முதல் காயம் வலது பக்க விலா எலும்பிற்கு மேலே உள்ள அல்லை பகுதி என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் சுரேந்தர் என்பவர் அ.சா.17 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் தற்போது சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக்

கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசியர், அறுவை சிகிச்சை பிரிவில் தான் பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 16.12.2018 அன்று ஆனந்தன் த/பெ. அண்ணாமலை, நம்பிப்பட்டி என்பவர் மேற்படி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததாகவும், விடியற்காலை 4 மணியளவில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும், அப்போது பணியில் இருந்த அறுவை சிகிச்சை மருத்துவர் அவரை பரிசோதித்து அவர் காயங்களுக்கு CT ஸ்கேன் எடுக்கப்பட்டதாகவும், அதில் 2 வெளி துகள்கள் (Pellets) வயிற்றின் மேல் பகுதியிலும், அல்லையின் மேல்பகுதியிலும் இருந்ததாகவும், குடல் அறுவை சிகிச்சை மருத்துவரின் அறிவுறுத்தலின் பெயரில் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், மேற்படி 2 வெளி துகள்கள் (Pellets) மீட்கப்பட்டதாகவும், மேலும் குடல் உறுப்புகள் நல்ல நிலையில் உள்ளதா என்று உறுதி செய்யப்பட்டதாகவும், அவர் வலது பக்க நெஞ்சியில் நுரையீரலின் மேற்பகுதியில் ரத்தம் சேர்ந்திருந்தது CT ஸ்கேன் மூலம் காணப்பட்டதாகவும், மேற்படி சேர்ந்திருந்த ரத்தத்தை குழாயின் மூலம் அகற்றப்பட்டதாகவும், சிகிச்சை அளிக்கப்பட்டு 25.12.2018 அன்று சிகிச்சை வார்டில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும், சிகிச்சையின் முடிவில் அவருக்கு அவருக்குள்ள காயங்களின் தன்மை கொடுங்காயங்கள் என்று சான்று அளிக்கப்பட்டதாகவும், மேற்படி நோயாளி தருமபுரி மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக பரிந்துரைத்து அனுப்பப்பட்டு இருந்ததாகவும், மேற்படி நீக்கப்பட்ட 2 வெளி துகள்களை (Pellets) ஆய்வுக்காக உதவி மருத்துவர் அனுப்பி இருந்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் வீரராகவன் என்பவர் அ.சா.18 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் வேடம்பட்டியில் குடியிருந்து ஊத்தங்கரையில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 24.02.2019 அன்று தான் தனது கடையில்இருந்த போது ஊத்தங்கரை காவல் நிலைய போலீஸார் ஒரு வழக்கு சம்பந்தமாக மறுநாள் வருமாறு கேட்டு இருந்ததாகவும், ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்கள் ஒப்புதல்

வாக்குமூலம் கொடுக்க உள்ளதாகவும், புகைப்படம் எடுக்க கேட்டு இருந்ததாகவும், தான் 25.02.2019 அன்று காலை சுமார் 5.30 மணிக்கு காவல் நிலையம் சென்றதாகவும், காவல் நிலையத்தில் போலீஸாரும், கிராம நிர்வாக அலுவலரும், அவர் உதவியாளரும் மற்றும் 2 நபர்களும் இருந்ததாகவும், காவல் நிலையத்தில் வைத்து வெங்கடேசன், பரதன் ஆகியோர்களிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து இருந்ததாகவும், அந்த நிகழ்வினை தான் வீடியோ பதிவு செய்ததாகவும், காவல் நிலையத்தில் இருந்து வித்யா மந்தீர் பள்ளிக்கு பின்புறமாக உள்ள வெங்கடேசன் வீட்டிற்கு அவர் அழைத்து செல்ல போலீஸாரும், கிராம நிர்வாக அலுவலரும் அவர் உதவியாளரும் மற்றும் தானும் சென்றதாகவும், வெங்கடேசன் வீட்டில் ஒளித்து வைத்திருந்த துப்பாக்கி மற்றும் குண்டு ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை போலீஸார் கைப்பற்றியதாகவும், அந்த நிகழ்வை தான் வீடியோ பதிவு செய்ததாகவும், அங்கிருந்து எதிரி பரதன் சொந்த ஊரான ரெட்டிப்பட்டிக்கு சென்றதாகவும்,பரதன் வீட்டின் பரனில் வைத்திருந்த துப்பாக்கி, குண்டு மற்றும் ரொக்கம் ஆகியவற்றை ஆஜர் செய்ததை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் முன்னிலையில் போலீஸார் கைப்பற்றியதாகவும், அந்த நிகழ்வையும் தான் வீடியோ பதிவு செய்ததாகவும், பிறகு பதிவு செய்த வீடியோவையும், புகைப்படங்களையும் போலீஸாரிடம் கொடுத்ததாகவும், வீடியோ பதிவு 2 DVDல் பதிவு செய்துக் கொடுத்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் DVDகளும், புகைப்படங்களும் தான் கொடுத்ததாகும் என்றும், மேற்படி ஆவணங்களின் தொகுப்பு அ.த.சா.ஆ.12 என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் சுல்தான் அர்பீன் என்பவர் அ.சா.19 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** முன்பு கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நீதித்துறை நடுவர் எண்.1 ஆக பணிபுரிந்த போது மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் கிருஷ்ணகிரி அவர்களின் ROC.No. 911/2019, நாள் 06.03.2018 தேதியிட்ட உத்தரவின் படி ஊத்தங்கரை காவல் நிலைய குற்ற எண் 589/2018 வழக்கில்

சம்மந்தப்பட்ட சந்தேக எதிரிகளான வெங்கட்டு (எ) வெங்கடேசன், த/பெ. சின்னக்கண்ணு, மற்றும் பரதன் த/பெ. நாகேஷ்வரன் ஆகியோர்களை சாட்சிகள் முருகன் வயது (50), த/பெ. பெருமாள் புட்டிரெட்டிபட்டி கிராமம் தருமபுரி மாவட்டம், மற்றும் ஆனந்தன் வயது 42, த/பெ. அண்ணாமலை நம்பிப்பட்டி அரூர் தாலுக்கா தருமபுரி மாவட்டம் ஆகியோர் அடையாளம் காட்டுவதாக ஊத்தங்கரை காவல் ஆய்வாளர் 06.03.2019 தேதியிட்டு விண்ணபத்தின் படி அடையாள அணி வகுப்பு நடத்த எனக்கு உத்தரவிடப்பட்டது. அதன் படி 13.03.2019 தேதியில் அடையாள அணிவகுப்பு தேதி நிர்ணயிக்கப்பட்டு சேலம் மத்திய சிறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அலுவலக குறிப்பாணை 07.03.2019 தேதியிட்ட அனுப்பியதாகவும், அதன்படி 13.03.2019 தேதி காலை 10.00 மணிக்கு சேலம் மத்திய சிறைச்சாலை வாசலில் ஆஜர் ஆகுமாறு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதாகவும், 13.03.2019 தேதி காலை 10.00 மணிக்கு தான் நீதிமன்றத்தில் இருந்து புறப்பட்டு நண்பகல் 12.15 மணிக்கு சேலம் மத்திய சிறைச்சாலைக்கு சென்றதாகவும், தனக்கு உதவியாக நீதிமன்ற உதவியாளர் திரு. பசுபதி உடன் வந்ததாகவும், சேலம் மத்திய சிறைச்சாலை வாசலில் சாட்சிகள் முருகன், ஆனந்தன் ஆகியோர்கள் ஆஜராகி இருந்ததாகவும், அவர்களை ஊத்தங்கரை காவல் ஆய்வாளர் திரு. கே. ராமமூர்த்தி அடையாளம் காட்டியதாகவும், சாட்சிகள் இடம் பெயர் விலாசம் ஆகியவற்றை விசாரித்து சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையில் உள்ள விவரங்களுடன் சரிபார்த்து கொண்டதாகவும், அவர்களிடம் சம்பவத்திற்கு பிறகு சந்தேக எதிரிகளை பார்த்து உள்ளீர்களா என கேட்ட போது, பார்க்கவில்லை என்று கூறியதாகவும், ஏற்கனவே எதிரிகள் தெரிந்தவர்களா, அறிமுகமானவர்களா என்று கேட்டதற்கு எதிரிகள் தெரிந்தவர்களோ, அறிமுக ஆனவர்களோ இல்லை என்று கூறியதாகவும், அவர்கள் கூறியவற்றை அப்படியே பதிவு செய்து அவர்களிடம் கையெழுத்து பெற்றதாகவும், பிறகு அவர்களை மத்திய சிறைச்சாலையின் வெளியே இருக்கச் சொல்லிவிட்டு

அடையாள அணி வகுப்பு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த இடத்திற்கு சென்றதாகவும், அந்த இடமானது சிறைச்சாலையின் உள்பகுதியில் உள்ள கலையரங்கம் எனப்படும் பகுதியாகும் என்றும், அங்கு சந்தேக எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டு இருந்ததாகவும், எதிரிகளை சிறை முதல் தலைமை காவலர் திரு. பிரபாகரன் அடையாளம் காட்டியதாகவும், எதிரிகளின் அங்க அடையாளங்களை காவல் அடைப்பு வாரண்டில் உள்ள அங்க அடையாளங்களுடன் சரிபார்த்து கொண்டதாகவும், பாதுகாப்பிற்கு சிறை முதல் தலைமை காவலர் பிரபாகரன் உடன் இருந்ததாகவும், சந்தேக எதிரிகளை நிறம், உயரம், பருமன் ஆகியவை ஓரளவு ஒத்துப்போகும் அளவிற்கு 17 சிறைவாசிகளை தேர்ந்தெடுத்ததாகவும், அவர்களின் பெயர், தந்தையர் பெயர், வயது ஆகியவற்றை குறித்துக்கொண்டு, அவர்களிடம் கையெழுத்து வாங்கியதாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறைவாசிகள் யாரும் வெளியில் தெரியும்படி பச்சை குத்தி இருக்கவில்லை என்றும், சந்தேக எதிரிகள் யாரும் பச்சைக்குத்தி இருக்கவில்லை என்றும், அடையாள அணிவகுப்பு நடத்தப்படும் இடமானது மத்திய சிறைக்குள் கலையரங்கம் எனப்படும் பகுதி என்றும், அதன் கிழக்கு புறத்தில் நுழைவாயிலும், மேற்கு புறம் கலையரங்கத்தின் மேடையிலும் இருந்ததாகவும், சிறைவாசிகளை தெற்கில் இருந்து வடக்கு நோக்கி பார்த்தவாறு நிறுத்தி வைத்து இருந்ததாகவும், வரிசையானது மேற்கில் இருந்து கிழக்கு திசை நோக்கி வரிசைப்படுத்தி இருந்ததாகவும், தெற்கு புறமும், வடக்கு புறமும் கலையரங்க கட்டிடத்தின் சுவர் இருந்ததாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறைவாசிகள் சந்தேக எதிரிகளின் உறவினர்களோ, நண்பர்களோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டதாகவும், சந்தேக எதிரிகளிடம் வேறு குறிப்பிட்ட அடையாளம் எதுவும் இல்லை என்றும், சிறைவாசிகளை வரிசையில் நிற்க வைத்து சந்தேக எதிரிகளை அவர்கள் விருப்பப்படி இடத்தை தேர்ந்தெடுத்து நிற்குமாறு கூறியதாகவும், அதன்படி அவர்கள் விருப்பப்பட்ட இடத்தில் நின்று கொண்டதாகவும், வரிசையானது மேற்கில் இருந்து கிழக்கு திசை நோக்கி

வரிசைப்படுத்தி இருந்ததாகவும், அந்த வரிசையில் இரண்டாம் சந்தேக எதிரி பரதன் 2ம் இடத்தில், 1ம் சந்தேக எதிரி வெங்கட்டு (எ) வெங்கடேசன் 7ம் இடத்திலும் நின்றதாகவும், பிறகு மத்திய சிறைக்கு வெளியில் இருந்த சாட்சிகளில் முருகனை மட்டும் நீதிமன்ற உதவியாளர் மூலம் அழைத்து வர சொன்னதாகவும், அவரிடம் சந்தேக எதிரிகளை தொட்டு அடையாளம் காட்ட சொன்னதாகவும், அவர் நின்றிருந்த எதிரிகளை உற்று நோக்கி விட்டு மேற்கண்ட வரிசையில் இருந்த இரண்டு எதிரிகளையும் சரியாக தொட்டு அடையாளம் காட்டியதாகவும், பிறகு அவரை சிறையில் உள்ள கருமார் கூடம் என்ற தொழில் பட்டறைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கிருந்து அடையாள அணி வகுப்பு நடைபெறும் இடத்தை பார்க்க முடியாது என்றும், பாதுகாப்பிற்கு சிறை முதல் தலைமை காவலர் பிரபாகரன் உடன் சென்றதாகவும், பிறகு வெளியில் இருந்த சாட்சி ஆனந்தனை நீதிமன்ற உதவியாளர் மூலம் அழைத்து வர சொன்னதாகவும், அவரிடம் சந்தேக எதிரிகளை அடையாளம் காட்ட சொன்னதாகவும், அவர் எதிரிகளை உற்று நோக்கி விட்டு சந்தேக எதிரிகளை இருவரையும் சரியாக தொட்டு அடையாளம் காட்டினார் என்றும், பிறகு சாட்சி ஆனந்தனை சிறையில் 8வது பிளாக்கிற்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கிருந்து அடையாள அணிவகுப்பு நடைபெறும் இடத்தை பார்க்க முடியாது என்றும், அங்கிருந்து சாட்சிகள் ஒருவரையொருவர் பரஸ்பரம் பார்த்துக்கொள்ள முடியாது என்றும், பாதுகாப்பிற்கு நீதிமன்ற உதவியாளர் உடன் சென்றதாகவும், பிறகு 2ம் சுற்றுக்கு சந்தேக எதிரிகளிடம் அவர்கள் அணிந்திருந்த மேல்சட்டை, கயிலி/கால் சாட்டை ஆகியவற்றை இதர சிறை வாசிகளுடன் மாற்றி அணிந்துக்கொள்ளுமாறும் சிறைவாசிகளை வரிசை மாற்றி கலைந்து நிற்கவும் சொன்னதாகவும், அதன்படி அவர்கள் அனைவரும் வாரிசை மாறி நின்றுக் கொண்டதாகவும், சந்தேக எதிரிகளை அவர்கள் விருப்பபட்ட இடத்தை தேர்ந்தெடுத்து நின்றுக்கொள்ளுமாறு சொன்னதாகவும், அதன்படி அவர்கள் விருப்பப்பட்ட இடத்தில் நின்றுக் கொண்டதாகவும், அந்த வரிசையின் 1வது

சந்தேக எதிரி வெங்கட்டு (எ) வெங்கடேசன் 3ம் இடத்திலும், 2வது சந்தேக எதிரி பரதன் 12வது இடத்திலும் நின்றுக் கொண்டதாகவும், பிறகு கருமார் கூடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாட்சி முருகனை அழைத்து வர சொன்னதாகவும், அவரிடம் சந்தேக எதிரிகளை அடையாளம் காட்டுமாறு சொன்னதாகவும், அவர் சிறைவாசிகளை வந்து நோக்கி விட்டு எதிரிகள் இருவரையும் சரியாக தொட்டு அடையாளம் காட்டியதாகவும், பிறகு மீண்டும் அவரை சிறையில் உள்ள கருமார் கூடம் என்ற தொழிற்பட்டறைக்கு அனுப்பி வைத்ததாகவும், பிறகு 8வது பிளாக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாட்சி ஆனந்தனை அழைத்து வரச் சொன்னதாகவும், அவரிடம் எதிரிகளை அடையாளம் காட்ட சொன்ன போது சிறைவாசிகளை உற்று நோக்கி விட்டு சந்தேக எதிரிகள் இருவரையும் சரியாக தொட்டு அடையாளம் காட்டியதாகவும், பிறகு மீண்டும் அவரை சிறையில் உள்ள 8வது பிளாக்கிற்கு அனுப்பி வைத்ததாகவும், பிறகு 3ம் சுற்றுக்கு சந்தேக எதிரிகளிடம் அவர்கள் அணிந்திருந்த மேல்சட்டை, கயிலி/கால் சட்டை ஆகியவற்றை இதர சிறைவாசிகளுடன் மாற்றி அணிந்துக் கொள்ளுமாறும் சிறைவாசிகளை வரிசை மாற்றி கலைந்து நிற்கவும் சொன்னதாகவும், அதன்படி அவர்கள் அனைவரும் வரிசை மாறி நின்று வந்ததாகவும், சந்தேக எதிரிகளை அவர்கள் விருப்பப்பட்ட இடத்தை தேர்ந்தெடுத்து நின்றுக் கொள்ளுமாறு சொன்னதாகவும், அதன் படி அவர்கள் விருப்பப்பட்ட இடத்தில் நின்றுக் கொண்டதாகவும், அந்த வரிசையில் 1வது சந்தேக எதிரி வெங்கட்டு (எ) வெங்கடேசன் 7வது இடத்திலும், 2வது சந்தேக எதிரி பரதன் 13வது இடத்திலும் நின்றுக் கொண்டதாகவும், பிறகு கருமார் கூடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாட்சி முருகனை அழைத்து வர சொன்னதாகவும், அவரிடம் சந்தேக எதிரிகளை அடையாளம் காட்டுமாறு சொன்னதாகவும், அவர் சிறைவாசிகளை வந்து நோக்கி விட்டு எதிரிகள் இருவரையும் சரியாக தொட்டு அடையாளம் காட்டியதாகவும், பிறகு சாட்சி முருகனை மத்திய சிறைக்கு வெளியே அனுப்பி வைத்ததாகவும், பிறகு 8வது பிளாக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாட்சி ஆனந்தனை

அழைத்து வரச் சொன்னதாகவும், அவரிடம் எதிரிகளை அடையாளம் காட்ட சொன்ன போது சிறைவாசிகளை உற்று நோக்கி விட்டு சந்தேக எதிரிகள் இருவரையும், சரியாக தொட்டு அடையாளம் காட்டியதாகவும், பிறகு அவரை சிறைக்கு வெளியே அனுப்பி வைத்ததாகவும், இதர சிறைவாசிகளை கலைந்து செல்லுமாறு கூறியதாகவும், சந்தேக எதிரிகளிடம் அடையாள அணிவகுப்பிற்கு பிறகு ஏதாவது கூற விருப்பமா என்று கேட்டதாகவும், அவர்கள் அளித்த பதில்களை அப்படியே பதிவு செய்து படித்து காண்பித்து சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின் அவர்களின் கையெழுத்துக்களை பெற்றதாகவும், 1ம் சந்தேக எதிரி சாட்சிகள் இருவரும் ஊத்தங்கரை காவல் நிலையத்திற்கு வந்து இருமுறை பார்த்து விட்டு சென்றதாகவும், செல்போனில் போட்டோ எடுத்ததாகவும், அரூர் காவல் நிலையத்தில் சாட்சி ஆனந்தன் பார்த்து விட்டு சென்றதாகவும், 2ம் முறையாக ஊத்தங்கரை காவல் நிலையத்திற்கு வந்து போட்டோ எடுத்து சென்றதாகவும் தெரிவித்தார் என்றும், 2ம் சந்தேக எதிரி ஊத்தங்கரை காவல் நிலையத்தில் போலீஸார் காவலில் எடுத்து சென்ற போதே சாட்சிகள் இருவரும் அங்கு வந்த செல்போனில் புகைப்படம் எடுத்துக் கொண்டதாகவும், அவர்கள் யார் என்று தெரியாது என்றும், வீட்டு முகவரியை வாங்கி சென்றதாகவும், அரூர் காவல் நிலையத்திலும் போலீஸார் காவலில் சென்றபோது புகைப்படம் எடுத்துச் சென்றதாகவும், போலீஸார் மிரட்டியதாகவும் தெரிவித்ததாகவும், அடையாள அணிவகுப்பானது கலையரங்கத்தில் சூரிய வெளிச்சத்தில் நண்பகல் 12.15 மணி முதல் மாலை 03.00 மணி வரை நடைபெற்றதாகவும், சாட்சிகளுக்கு எவ்வகையிலும் தகவல் பரிமாறு வாய்ப்பில்லை என்றும், மூன்று சுற்றுகளிலும் சாட்சி முருகன், ஆனந்தன் ஆகியோர் எதிரிகள் வெங்கட்டு (எ) வெங்கடேசன் மற்றும் பரதன் ஆகியோர்களை சரியாக அடையாளம் காண்பித்தார்கள் என்றும், மேற்படி முழு நடவடிக்கையும் தன்னால் நேரடியாக மடிக்கணினியில் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றும், பிறகு முழு நடவடிக்கையும்

கோப்புகளுடன் நீதித்துறை நடுவர், ஊத்தங்கரை அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும், தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கை தான் அனுப்பிய கோப்பாகும் என்றும், மேற்படி கோப்பு அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் முரளி என்பவர் அ.சா.20 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் தற்போது தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருவதாகவும், கடந்த 17.02.2019–ம் தேதியில் பொறுப்பு கோட்டப்பட்டி காவல் நிலைய வட்ட ஆய்வாளராக இருந்த போது கோட்டப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் திரு.சுசில் என்பவர் கோட்டப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 20/2019 சட்ட பிரிவுகள் 379 இ.த.ச. மற்றும் 27(1) Arms Act பதிவு செய்து தனது பார்வைக்கு வைத்ததை அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான திருவண்ணாமலை to அரூர் அமைந்துள்ள எம்.ஜீ.ஆர்.நகர் பஸ் நிருத்தம் அருகே சென்று சாட்சி கணேசன் அடையாளம் காட்ட குமார் , பச்சையப்பன் முன்னிலையில் மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்து சம்பவ இடத்தில் இருந்த காலி கேஸ் ஒன்று புல்லட் ஒன்று எடுத்ததாகவும், அத்துடன் உடைந்த நிலையில் உள்ள நம்பர் பிலேட் எடுத்ததாகவும், அதை ஆன்லைன் மூலமாக ஆய்வு செய்தபோது அது பஜாஜ் பல்சர் என்றும் அதன் முகவரி கோவிந்தம்மாள் க/பெ. நாகேஸ்வரன் ரெட்டிப்பட்டி ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என இருந்ததாகவும், மேற்படி முகவரிக்கு 18.02.2019 தேதி அதிகாலை 4.00 மணிக்கு முகவரியில் சென்று விசாரித்த போது அந்த முகவரியில் பரதன் த/பெ நாகேஸ்வரன் என்பவர் குடியிருந்து வருவதாகவும் அவரை விசாரித்தபோது தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு அவரும் அவரது நண்பரும் வெங்கட் (எ) வெங்கடேசன், த/பெ சின்னகண்ணு கலைஞர் நகர் ஊத்தங்கரை சேர்ந்து தான் இக்குற்றத்தை செய்ததாகவும், இது மட்டும் அல்லாமல் ஊத்தங்கரையில் ஒரு நாட்டு துப்பாக்கியை வைத்து மதுபானம்

கடையில் இருந்து வியாபாரம் முடித்து வந்தவரிடம் துப்பாக்கியை காட்டி மிரட்டி பணத்தை கொள்ளையடித்ததாகவும், 05.12.2018–ம் தேதியில் தண்ணீர் பந்தல் அருகே உள்ள ஒயின் ஷாப்பில் இரவு 10.30 மணிக்கு மேல் ஒயின் ஷாப்பை பூட்டி விட்டு பணத்தோடு சென்றவர்களை பரதன் ஆகிய தானும் வெங்கடேசனும் சிறிதுநேரம் பின் தொடர்ந்து சென்று வெங்கடேசன் துப்பாக்கியால் சுட்டு 3 இலட்சம் பணத்தை இருவரும் பறித்து கொண்டு சென்று விட்டதாக கூறியுள்ளதாகவும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒப்படைக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ 14 என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**மேலும் ராமமூர்த்தி என்பவர் அ.சா.21 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில்,** தான் கடந்த 16.12.2018ம் தேதி ஊத்தங்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது 15.12.2018ம் தேதி தங்கள் காவல் நிலையத்தில் பணி புரிந்த சிறப்பு காவல் உதவியாளர் நடராஜன் என்பவர் அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி சென்று அங்கு சிகிச்சையில் இருந்த வாதி முருகன் இடம் புகார் வாக்குமூலம் பெற்று 16.12.2018–ம் தேதி விடியற்காலை 3 மணிக்கு நிலையம் வந்து அந்த வாக்குமூலத்தின் பேரில் நிலைய குற்ற எண் 589/2018 சட்டப்பிரிவுடன் 394, 397 IPC மற்றும் 25(1) (a) Indian Arms படி வழக்கு பதிவு செய்து அவர் பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை மற்றும் வாதியின் புகார் வாக்குமூலத்தை குற்றவியல் நடுவர் ஊத்தங்கரை அவருக்கு அனுப்பியும் தனக்கு விசாரணைக்கு வைத்ததை அன்றைய தினமே காலை 3.30 மணிக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான ஊத்தங்கரை to அனுமன்தீர்த்தம்ரோடு வித்யாமந்தீர் B.Ed கல்லூரி அருகே சென்று சம்பவ இடத்தை பார்வை இட்டதாகவும், அங்கு ஒரு இரு சக்கர வாகனம் ரோட்டில் அருகே விழுந்து கிடந்ததாகவும், சம்பவ இடம் அது தான் என ஊர்ஜிதம் செய்து கொண்டு சம்பவ இடத்தில் போதிய வெளிச்சம் இல்லாததால் சம்பவ இடத்தை யாரேனும் கலைக்க நேரிடும் என்பதால் சம்பவ இடத்தை பாதுகாக்க காவல் நிலைய காவலர் 1785 பாலகிருஷ்ணன் என்பவரை அறிவுரைக்கூறி அங்குபணி

நியமித்து பின்பு இவ்வழக்கில் வாதியை சந்தித்து வாக்குமூலம் பெற தருமபுரி மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரிக்கு காலை 5 மணிக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த ஆனந்தன் என்பவர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு குமாரமங்கலம் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார் என்ற விவரத்தை தெரிந்துக்கொண்டும் பின்பு அங்கிருந்த மற்றும் காயமுற்ற ஒரு சாட்சி முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேலும் அங்கு அவருக்கு உதவியாக இருந்த அரசு மதுபானை கடை சூப்ரேசர் சுபாஷ் மற்றும் சிவக்குமார் மதுபானை கடை விற்பனையாளர் இளையராஜா, கோவிந்தராஜ் மற்றும் மாரியப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து பின்பு இவ்வழக்கின் காயமுற்ற நபர் முருகன் என்பவர் தானும் தன்னுடன் காயமுற்ற ஆனந்தன் என்பவரும் அணிந்திருந்த துணிகள் இருந்ததாகவும், எடுத்து ஆய்வு செய்து ரத்த கரை படிந்த முருகனின் முழுக்கை சட்டை ஒன்று மற்றும் ஆனந்தனின் நீல கலர் டீ சட்டை வலது கை தீஞ்ச நிலையில் இருந்ததாகவும், வெள்ளை கலர் முண்டா பனியன் வலது புறம் அல்லை பகுதியில் இரு சிறிய ஓட்டைகள் இருந்ததை தன்னிடம் ஆஜர் செய்ததாகவும், அதை மருத்துவமனையிலேயே சாட்சிகள் கோவிந்தராஜ் மற்றும் இளையராஜா ஆகியோர் முன்னிலையில் சாட்சியாக வைத்து கைப்பற்றுதல் மகசரில் 06.35 மணிக்கு கைப்பற்றியதாகவும், பின்பு 06.45 முதல் 8மணி வரை சாட்சிகளை விசாரணை செய்ததாகவும், பின்பு அங்கிருந்து புறப்பட்டு 8.55 மணிக்கு சம்பவ இடம் வந்தடைந்து 9 மணி முதல் 10 மணி வரை சாட்சிகள் குமரேசன் மற்றும் ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் கைப்பற்றுதல் மகசர் மாதிரி வரைபடம் இவைகளை தயார் செய்ததாகவும், மேற்படி **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.த.சா.ஆ. 15 மற்றும் 16** என்றும், தான் மருத்துவமனையில் கைப்பற்றிய வழக்கு சொத்தையும் சம்பவ இடத்தில் கைப்பற்றிய வழக்கு சொத்தையும் படிவம் 91–ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி படிவங்கள் முறையே

**91 அ.த.சா.ஆ. 17 முதல் 23 வரை குறியீடு** செய்யப்பட்டதாகவும், பின்பு சம்பவ இட சாட்சிகள் குமரேசன் மற்றும் ரமேஷ் , அப்புலு, பிரகாஷ், இளையப்பன் ஆகியோர்களை 10.30 மணி முதல் 12 மணி வரை விசாரணை செய்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், விசாரணையின் தொடர்சியாக வழக்கில் சம்பந்தப்பட்ட டாஸ்மாக் கடைக்கு சென்று பார்த்ததில் அங்கு கடை திறக்கப்பட்டிருந்ததாகவும், அங்கு அருகில் இருந்த சூப்பர் வைசர் சுபாஸ் உதவி சூப்பர் வைசர் சிவக்குமார் சேல்ஸ்மேன்கள் இளையராஜா மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்த வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் நடராஜனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், டாஸ்மாக் கணக்காளர் மஞ்சுநாத் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தான் பதிவு செய்த வாக்குமூலங்கள் மற்றும் இதர ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்பு 17.12.2018–ம் தேதி சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக்கல்லூரி அலுவலருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதில் காயமுற்ற ஆனந்தன் என்பவரின் உடலிருந்து எடுக்கப்பட்ட பால்ரஸ் குண்டுகளை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டும் இந்த பணிக்கு காவலர் 1785 திரு.பாலகிருஷ்ணன் என்பவரை அனுப்பி வைத்ததாகவும், அவர் மேற்படி மருத்துவமனைக்கு சென்று வேண்டுகோளை தெரிவித்துள்ள வழக்கு சொத்தை மருத்துவரிடம் பெற்று தன்னிடம் வந்து ஆஜர் செய்ததை படிவம் 91–ன் படி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்பு 21.12.2018–ம் தேதி சேலம் குமாரமங்கல அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த ஆனந்தன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு இந்த வழக்கின் எதிரிகள் கோட்டப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 20/2019 சட்ட பிரிவுகள் 397 IPC மற்றும் 27 Indian Arms Act படி மேற்படி காவல் ஆய்வாளர் கோட்டப்பட்டி அவர்கள் 18.02.2019–ம் தேதி கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டபோது அதில் எதிரிகள் பரதன்

வயது 24 த/பெ நாகேஷ்வரன் ரெட்டிப்பட்டி கிராமம் ஊத்தங்கரை வட்டம் மற்றும் எதிரிகள் வெங்கட் (எ) வெங்கடேசன் வயது 32, த/பெ சின்னகண்ணு, கலைஞர் நகர், ஊத்தங்கரை ஆகிய இருவரும் இதற்கு முன்பாக 15.12.2018-ம் தேதி இரவு தண்ணீர் பந்தல் ஒயின் ஷாப் அருகில் நாட்டு துப்பாக்கி உடன் பல்சர் பைக்கில் வந்து டாஸ்மாக் ஊழியர்களை சுட்டு ரூபாய் 3 லட்சம் கொள்ளை அடித்ததாக கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் தனக்கு அதை தெரிவித்ததாகவும், இதன் அடிப்படையில் தான் அன்றைய தினமே அங்கு சென்று விசாரித்து உண்மை தன்மையை தெரிந்து கொண்டதாகவும், பின்பு மேற்படி எதிரிகளை கைது செய்ய விசாரிக்க கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பீட்டிவாரண்ட் கொடுக்கும்படி வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாகவும், அதன் படி நடுவர் அவர்கள் பீட்டிவாரண்ட் கொடுத்ததன் பேரில் மேற்படி எதிரிகளை நீதிமன்றத்தில் வழி காவல் மூலம் ஆஜர் செய்ததாகவும், பின்பு மேற்படி எதிரிகளை ஊத்தங்கரை காவல் நிலைய குற்ற எண் 589/2018 விசாரிக்க வேண்டி 3 நாட்கள் போலீஸ் காவலில் விசாரிக்க ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் குற்றவியல் நடுவர் ஆணை வழங்கியதன் பேரில் மேற்படி எதிரிகள் இருவரையும் போலீஸ் காவலில் எடுத்து மேற்படி எதிரிகள் இருவரையும் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரித்ததாகவும், அவர்கள் மேற்படி குற்ற எண்களில் சம்பந்தப்பட்ட குற்றத்தை செய்யததாகவும் தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் தருவதாகவும், தெரிவித்தன் பேரில் ஒப்புதல் வாக்குமூலம் பெற சாட்சிகளை அனுப்பி வைக்கும்படி வட்டாட்சியர் ஊத்தங்கரை அவர்களுக்கு 24.02.2019-ல் வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாகவும், அவர் அவரிடத்தில் பணி புரியும் ஊத்தங்கரை கிராம நிர்வாக அலுவலர் திருஞானம் மற்றும் கிராம உதவியாளர் கோவிந்தராஜ் ஆகியோர்களை அனுப்புவதாக தெரிவித்ததாகவும், இவர்கள் இருவருக்கும் சட்ட பிரிவு 160 கு.வி.முச படி அழைப்பாணை வைத்து அழைத்ததாகவும், மேற்படி அவர்கள் இருவரும் காவல் நிலையம் வந்ததாகவும்,

பின்பு விசாரணையின் போது போட்டோ மற்றும் வீடியோகிராப் செய்ய ஊத்தங்கரை அடுத்த வேடப்பட்டி கிராமத்தில் குடியிருக்கும் நடராஜன் மகன் வீரராகவன் சாய் ஸ்டுடியோ ஊத்தங்கரை என்பவரை புகைப்படம் எடுக்க வருமாறு அழைப்பாணை அனுப்பியதாகவும், பின்பு இவர்கள் முன்னிலையில் எதிரி வெங்ட் என்ற வெங்கடேசன் என்பவர் தானாக முன் வந்து கொண்டு வந்த வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் 15.12.2018–ம் தேதி இரவு அவரும் அவருடன் பரதன் என்பவரும் வெப்பாலம்பட்டிக்கு அருகே உள்ள தண்ணீர் பந்தல் டாஸ்மார்க் கடையின் பணியாளர்கள் முருகன் மற்றும் ஆனந்தன் பணி முடித்து மதுபானம் விற்ற பணத்தை எடுத்து இருசக்கர வாகனத்தில் எடுத்து செல்லும்போது இவர்கள் இருவரும் நோட்டமிட்டு பரதன் பல்சர் வண்டியை ஓட்ட பின்னால் உட்கார்ந்து சென்று வெங்கட் என்ற வெங்கடேசன் தனது கையில் இருந்த நாட்டு துப்பாக்கியால் இருவரையும் சுட்டதில் கீழ விழுந்தவர்களிடம் இருந்த ரூ.2,90,830/– பணத்தையும், மதுபான கடை சாவி மற்றும் கணக்குநோட்டு புத்தகம் இவைகளை கொள்ளையடித்து சென்றதாகவும் தன்னை அழைத்து சென்றதாகவும் வழக்குசொத்துக்கள் மறைத்து வைத்துள்ள இடத்தை அடையாளம் காட்டியும் எடுத்து ஆஜர் செய்வதாகவும் சொன்னதாகவும், பின்பு இவருடன் சென்ற மற்ற எதிரியான பரதன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவரை அழைத்து கொண்டு போனால் அவர் வீட்டின் அருகில் உள்ள கோழி கூண்டில் மறைத்து வைத்துள்ள நாட்டு துப்பாக்கி மற்றும் கரிமருந்து , தேங்காய் நார் , ஆரஞ்சு பொடி மற்றும் அவருக்கு கொள்ளையடித்த பணத்தில் செலவு செய்தது போக மீதம் இருந்தது போக 25,000/– த்தை மற்றும் வெங்கடேசன் பயன்படுத்திய பைக் மற்றும் வழக்கு சொத்தான நோட் புக்கை எரித்த இடத்தையும் சம்பவத்திற்கு பயன்படுத்திய நாட்டு துப்பாக்கியை விலைக்கு கொடுத்த ஒப்பத்தவாடியை சேர்ந்த மகேந்திரன் என்பவரை அடையாளம் காட்டுவதாக தெரிவித்ததாகவும், இதன் பேரில் 25.02.2019 –ம் தேதி காலை 10

மணிக்கு ஊத்தங்கரை கலைஞர்நகர் எதிரி வெங்கட்டு மெத்தை வீட்டிற்கு சென்று அவர் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்துக்கள் (1) NH 100 Polaris precahcle Sports Air Gun cal 4.5 (177) Sl.No. AH 02975. (2) K. F 7.65 என்ற Pistal Rounds 4. (3) இரும்பு பால்ரஸ் குண்டுகள் 3. (4) Double Head DIANA shot AIR RIPLE PELL ETS 100 No.1 (177) CAL 4.5 mm Long Rang திறக்காத நிலையில் 4 Box. ஆகியவற்றையும் பின்பு 11.40 மணிக்கு இதே எதிரி சென்னப்பநாய்கனூர் பழையாஊர் கொண்டம்பட்டி போகும் வழியில் உள்ள ஏரியை அடுத்த புளியமரத்தில் கிழக்காக ரோட்டின் இடது புறத்தின் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த சிறிதளவு எரிந்த சாம்பல் மண். (2) பேக் ஜீப் ஒன்று (3) ஸ்டேபளர் ஒன்று . (4) 3 சாவிகள் கொத்தாக ( 2,3,4) தீயில் எரிந்து காணப்பட்டவை உடைந்த கால்குலேட்டர் துண்டுகள் இரண்டு ஆகியவை கைபற்றுதல் மகஜரில் சாட்சிகள் திருஞானம், கோவிந்தராஜ் இவர் முன்னிலையில் கைபற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்பு காலை 11 மணிக்கு ரெட்டிபட்டி கிராமத்தில் உள்ள எதிரி பரதன் என்பவரது சீமை ஓட்டு வீட்டின் முன்பு சென்று எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த சுமார் 61cm நீளம் உள்ள கட்டை மற்றும் இரும்பு குழலுடன் கூடிய நாட்டு துப்பாக்கி ஒன்று. மஞ்சல் ஆரஞ்சு நிறம் கொண்ட பவுடர் சிரிய பிளாஷ்டிக் குப்பியில் சுமார் 7.460 கிராம். கரிமருந்து சிறிதளவு பேப்ரில் சுற்றி வைக்கப்பட்டவை சுமார் 11.150 கிராம். (4) தேங்காய் நார் 13.850 கிராம். இரும்பு பால்ரஸ் குண்டுகள் 5 அதில் புதியது 2 பழையது 3. TN 07 BW 0619 TVS PHOENIX 125 Motor cycle. பணம் ரூ.25,000/- ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைபற்றியதாகவும், மேற்படி **TVS 125 மோட்டார் சைகில் சா.பொ.19** என்றும், பின்பு மேற்படி விசாரணை மேற்கொண்டதை மேற்படி விசாரணையின் போது எடுக்கப்பட்ட sony DVD CD 2.போட்டோக்கள் 4 எடுத்து அதை நீதிமன்றத்தில் அனுப்பி வைத்ததாகவும், பின்பு மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒப்பத்தவாடி சென்று

அங்கு கதவு எண் 232–ல் குடியிருந்த சாம்மோடன் மகன் மகேந்திரன் என்பவரை எதிரிகள் அடையாளம் காட்ட கைது செய்து அவர் நாட்டு துப்பாக்கியை மேற்படி எதிரிகளுக்கு ரூ.8000/– க்கு விற்றதையும் அவர்கள் கொள்ளை அடிக்க தான் வாங்கி கொண்டு சென்றார்கள் என்ற விவரம் தெரிந்து அவர்களுக்கு விற்றதையும் ஒப்புக்கொண்டு தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை சாட்சிகள் திருஞானம் மற்றும் கோவிந்தராஜ் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், பின்பு 3 எதிரிகளுடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்ததாகவும், பின்பு இவ்வழக்கில் மேற்படி எதிரிகளுக்கு காவல் நிலையத்தில் எதிரிகளுக்கு விசாரணையின் போது பாதுகாப்பாக இருந்த காவலர்கள் நடராஜ், ராஜேந்திரன், ஏழுமலை இவர்களையும் இப்பணிக்கு தன்னுடன் போலீஸ் வாகனத்தை ஓட்டி வந்த தலைமை காவலர் சரவணன் என்பவரையும் தட்டச்சு செய்த தங்கபால் என்பவரையும் போட்டோ கிராப்பர் பதிவு செய்த வீரராகவன் என்பவரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், வீரராகவன் கொடுத்த போட்டோ மற்றும் வீடியோ சீடிகளை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததாகவும், பின்பு மேற்படி எதிரிகளை அடையாள அணிவகுப்பு முதன்மை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அந்த கடிதத்தின் அடிப்படையில் குற்றவியல் நடுவர் எண் 1 கிருஷ்ணகிரி அவர்கள் மேற்படி சாட்சிகளை சேலம் மத்திய சிறைக்கு அழைத்து ஆஜர் அடையாள அணிவகுப்பு நடத்தியதாகவும், பின்பு மேற்படி வழக்கில் கைப்பற்றபட்ட நாட்டு துப்பாக்கி மற்றும் தடயங்களை சேலம் மற்றும் சென்னைக்கு ஆய்வுக்காக நீதிமன்றத்தின் மூலம் அனுப்பிவைத்து அறிக்கை பெற்று இதன் பின்பு எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ய ஆணைபிறப்பிக்க கனம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவரின் நடைமுறை ஆணைபெற்றதாகவும், **மேற்படி ஆணை அ.சா.ஆ.24** என்றும், பின்பு இவ்வழக்கில் சட்ட பிரிவு 25 (1A) –

ARMS Act, 394, 397 IPC என இருந்ததை 392 உ/இ 397 IPC 25 (1B) (a), 27 (1) , 25(1) (a) ARMS Act ஆக மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றதிற்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி **பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.25** என்றும், பின்பு முதல் உதவி சிகிச்சை செய்த ஊத்தங்கரை அரசு மருத்துவர் திருமதி.விமலா என்வரையும் மேல் சிகிச்சை அளித்த சேலம் அரசு மோகனகுமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவர் சுரேந்தர் அவர்களையும் சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தின் உதவி இயக்குனர் ஸ்ரீ வித்தியா சீனிவாசன் என்பவரையும் கோட்டப்பட்டி காவல் ஆய்வாளர் முரளி என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு குற்றவியல் இணை இயக்குனர் அவர்களிடம் கருத்துரை பெற்று ஆஜர் எதிரிகள் மீது 25.02.2020 –ம் தேதி 392 உ/இ 397 IPC 25 (1B) (a), 27 (1), 25(1) (a) ARMS Act-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313 (1) (பி)–ன் கீழ் வினவ எதிரி மேற்படி சாட்சியங்களை பொய் சாட்சியம் என்றும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சியங்கள் உள்ளது என்று தெரிவித்தும் எவ்வித சாட்சியமும், சான்றாவணமும் முன்னிலைப்படுத்தவில்லை.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டியது.**

அரசுத் தரப்பில் எதிரிகள் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.

**8.தீர்வு:–**

**8.1** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி 1 மற்றும் 2 இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த போது 1, 2 எதிரிகள் பின் தொடர்ந்து TN–24–AL–7067 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் உரிமம் இல்லாத

நாட்டு துப்பாக்கியை வைத்துக்கொண்டு பின்னால் துரத்தி சென்று கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் சுட்டபோது சாட்சிகள் இருவரும் வாகனத்திலிருந்து கீழே விழுந்து பின் வாகனத்தை சாட்சி ஆனந்தன் தூக்கும்போது 1–வது எதிரி நாட்டு துப்பாக்கியின் பின் பகுதியால் சாட்சி ஆனந்தனின் வலது கண்ணத்தின் மீது அடித்து காதுமடல், வலது கை மற்றும் அக்குள் ஆகிய இடங்களில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், சாட்சிகள் ஆனந்தன் மற்றும் முருகேசனை 1–ம் எதிரி அபாயகரமான ஆயுதமான துப்பாக்கியால் சாட்சிகளை அச்சுறுத்தி, பயமுறுத்தி, மரண பயத்தையும், உண்டாக்கி அவர்கள் பையில் இருந்த பணத்தை கொள்ளையடித்தும், சம்பவத்திற்கு முன் 3–வது எதிரி உரிமமில்லாத நாட்டு துப்பாக்கியை 1–ம் எதிரிக்கு விற்றும், குற்றம் புரிந்துள்ளதாகவும் அதை அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென எடுத்துரைத்தார். ஆனால் 1, 3 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், அரசு தரப்பில் குறிப்பிடுவது போல் எதிரிகள் எவ்வித குற்றமும் செய்யவில்லை என்றும், எதிரிகள் மீது தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்கள்.

8.2 மேற்படி இருதரப்பு வாதுரைகள், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலிக்கையில் 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டான அபாயகரமான ஆயுதமான துப்பாக்கியால் சாட்சிகளை அச்சுறுத்தி பயமுறுத்தி மரண பயத்தை உண்டாக்கி சாட்சிகள் பையில் இருந்து ரூ.2,90,830/–ஐ கொள்ளையடித்து சென்றார்களா என்பது குறித்து பரிசீலிக்கையில் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட முருகன் மற்றும் ஆனந்தன் ஆகியோர் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி சம்பவம் சம்பந்தமாக

புகார் கொடுத்துள்ள அ.சா.1 முருகன் தனது சாட்சியத்தில் "வித்யாமந்திர் கல்வியல் கல்லூரி விடுதி தாண்டி ரோட்டின் வளைவில் சென்ற போது டமால் என ஒரு சத்தம் கேட்டதாகவும், தான் பார்த்தபோது தன் காதில் ரத்தம் வந்ததாகவும், தங்கள் இருசக்கர வாகனமும் நிலை தடுமாறி மண் ரோட்டில் கீழே விழுந்து விட்டதாகவும், எழுந்து பார்த்த போது ஆனந்தன் வலது கை அக்குள் பகுதி சுட்டு விட்டதாக சொல்லி அவர் கத்திக் கொண்டே ஓடியதாகவும், அவர் அணிந்திருந்த டி சர்ட் எரிந்து விட்டதாக சொல்லிக் கொண்டே ஓடியதாகவும், தான் கீழே விழுந்த பணப் பையை எடுக்கலாம் என முற்பட்டபோது ஒரு நபர் துப்பாக்கியை நீட்டிக் கொண்டே வந்ததாகவும், தான் பணப்பையை எடுக்க முயற்சித்த போது துப்பாக்கியை திருப்பி அதன் பின் பகுதியால் தனது வலது காதின் பக்கமே அடித்து விட்டு பணப் பையை பிடுங்கி கொண்டதாகவும், அவ்வாறு தன்னை துப்பாக்கியால் அடித்த நபரை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்பதாகவும், சாட்சி நீதிமன்றத்தில் முதலாவதாக நின்றுக் கொண்டிருந்த எதிரி வெங்கடேசன் என்பவரை அருகில் சென்று பார்த்து, தொட்டு, அடையாளம் காட்டியதாகவும், சம்பவம் நடைபெற்ற போது இரவு சுமார் 10.15 மணி இருக்கும் என்றும், அதன் பிறகு ஆம்புலன்ஸ்க்கு மாரியப்பன் தகவல் சொல்லி வந்தது என்றும், அதன் பிறகு ஆம்புலன்ஸில் ஏறி தான், ஆனந்தன், கடை சூப்பர் வைசர் ஆகியோர் ஊத்தங்கரை அரசு மருத்துவ மனைக்கு வந்ததாகவும், ஆனந்தன் பி.எட் கல்லூரி பக்கம் சம்பவத்திற்கு பயந்து ஒளிந்து கொண்டிருந்ததாகவும், அவரையும் அழைத்துக் கொண்டு தான்அரசு மருத்துவமனைக்கு வந்தோம் என்றும் தெளிவாக சாட்சியம் அளித்து 1-ம் எதிரியை இந்நீதிமன்றத்தில் அடையாளம் காட்டி அவர் தான் தன்னை துப்பாக்கியால் சுட்ட நபர் 1-ம் எதிரி என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சங்கதிகளை சார்ந்தே மேற்படி அ.சா.1 உடன் சென்ற அ.சா.2-ம் தனது சாட்சியத்தில் "வித்யாமந்திர் கல்லூரி விடுதி தாண்டி சென்ற போது சாலை இறக்கம் வளைவாக இருந்ததால் தான் மெதுவாக ஓட்டியதாகவும், அப்போது

டமால் என சத்தம் கேட்டதாகவும், பிறகு தான் விழுந்து விட்டதாகவும், தான் சற்று திரும்பி பார்த்தபோது துப்பாக்கியுடன் ஒரு நபர் வந்ததாகவும், ஒரு நபர் வண்டியில் உட்கார்ந்து இருந்ததாகவும், தனது டி சர்ட் மற்றும் வலது கை பகுதி எரிந்தது அதை பார்த்து தான் ஓடியதாகவும், தான் நெருப்பை அனைத்துக் கொண்டே தன்னை சுட்டி விட்டார்கள் என கத்திக் கொண்டே ஓடியதாகவும், தன்னை சுட்ட நபரை தன்னால் அடையாளம் சொல்ல முடியும் என்றும், சாட்சி நீதிமன்றத்தில் முதலாவதாக நின்றுக் கொண்டிருந்த எதிரி வெங்கடேசன் என்பவரை அடையாளம் காண்பித்ததாகவும், இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்திருந்த நபரையும் தன்னால் அடையாளம் சொல்ல முடியும் என்றும், சாட்சி நீதிமன்றத்தில் உள்ள இரண்டாவது நபர் பரதன் என்பவரை பார்த்து அடையாளம்  காட்டியதாகவும் தெளிவாக சாட்சியம் அளித்து 2 எதிரிகளையும் அடையாளம் காட்டியுள்ளார். எனவே மேற்படி எதிரிகளில் 2—ம் எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்டியும், பின்னால் 1—ம் எதிரி அமர்ந்து வந்து முன்னால் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த சாட்சிகளை துப்பாக்கியால் சுட்டு சாட்சிகளிடம் இருந்த பணப்பையை கொள்ளையடித்து சென்றது அறிய முடிகிறது. எனவே மேற்படி சம்பவத்தின் போது இருசக்கர வாகனத்தில் வந்து தங்களை துப்பாக்கியால் சுட்டு தங்களை தாக்கி தங்களிடம் இருந்த விற்பனை பணத்தை கொள்ளையடித்து சென்றது 1, 2 எதிரிகள் என தெளிவாக அடையாளம் காட்டி சாட்சியம் அளித்துள்ளதாலும், மேலும் மேற்படி குற்றச் செயலில் ஈடுபட்டதாக குறிப்பிடும் எதிரிகளை சாட்சிகள் அடையாளம் காட்ட கிருஷ்ணகிரி 1—வது குற்றவியல் நடுவர் அவர்கள் மாண்புமிகு முதன்மை குற்றவியல் நடுவர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டு வகுப்பு நடத்தப்பட்டுள்ளது. மேற்படி அணிவகுப்பில் சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோர்கள் மேற்படி சந்தேகமான எதிரிகளை அடையாளம் காட்ட கூறியதின் பேரில் மேற்படி 1 மற்றும் 2 சாட்சிகள் மூன்று முறையும் 1, 2 எதிரிகளை தெளிவாக அடையாளம் காட்டியுள்ளார்கள். எனவே மேற்படி அடையாள அணி வகுப்பின் போது சாட்சிகள்

1 மற்றும் 2 ஆகியோர்கள் 1, 2 எதிரிகளை சரியாக அடையாளம் காட்டியுள்ளார்கள். மேற்படி குற்றச் செயலில் 1, 2 எதிரிகள் ஈடுபட்டுள்ளார்கள் என்றே அறிய முடிகிறது.

8.3 மேலும் மேற்படி அரசுத் தரப்பில் குறிப்பிடுவது போல் 1, 2–ம் எதிரிகள் துப்பாக்கியை பயன்படுத்தி சுட்டு 1, 2 சாட்சிகளிடம் உள்ள பணத்தை கொள்ளையடித்தார்களா என்பதை பரிசீலிக்கையில் மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியத்தில் குறிப்பிடுவது போல் 1, 2 சாட்சிகள் இருசக்கர வாகனத்தில் சென்றுக் கொண்டிருந்த போது 1, 2 எதிரிகள் மேற்படி சாட்சிகள் சென்ற இருசக்கர வாகனத்தை பின் தொடர்ந்து இருசக்கர வாகனத்தில் சென்று சாலையின் வளைவு பகுதியில் துப்பாக்கியால் சுட்டதாகவும், அதனால் மேற்படி இருசக்கர வாகனத்தில் சென்ற சாட்சிகளில் பின்னால் அமர்ந்து சென்ற முருகனுக்கு காதில் குண்டு பட்டு காது கிழிந்து காயம் ஏற்பட்டது என்றும், முன்னால் வாகனத்தை ஓட்டி சென்ற ஆனந்தனுக்கு துப்பாக்கி குண்டு வலது கையில் பட்டு அல்லையில் குண்டுகள் பாய்ந்துள்ளது என்றும் அரசுத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் கற்றறிந்த 1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அவ்வாறு சாட்சிகள் இருசக்கர வாகனத்தில் முன்னால் சென்றுக் கொண்டிருக்கும் போது பின்னால் இருந்து சுட்டால் வாகனத்தில் பின் பகுதியில் அமர்ந்து சென்ற நபருக்கு தான் குண்டு அடிப்பட்டிருக்கும் என்றாலும், ஆனால் பின்னால் அமர்ந்து சென்ற நபருக்கு குண்டு காயம் ஏதும் ஏற்படாமல், முன்னால் வாகனத்தை ஓட்டிச் சென்ற நபருக்கு குண்டு காயம் ஏற்பட்டதாக கூறுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்பதால் அரசுத் தரப்பில் குறிப்பிடுவது போல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றும் எடுத்துரைத்தார். ஆனால் இவ்வழக்கில் 1–ம் சாட்சி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "*ஆனந்தன் என்னை விட உயரமாக இருப்பார். நான் குள்ளமாக இருப்பேன். அவர் போலீசுக்கும் தகுதியான உயரத்துடன் இருப்பார். நான் பின்புறம் அமர்ந்திருந்த இருக்கை உயரமானது என்றால் சரியல்ல அது சமமான நிலையில் தான்*

*உள்ளது*"என சாட்சியம் அளித்துள்ளதாலும், அதேபோல் அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "*சுட்டவுடன் நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். எங்கள் வாகனத்தை முந்த முயற்சிக்கும் நிலையில் எங்களை சுட்டனர். எங்களை முந்த முயற்சித்த போது எங்கள் வாகனத்திற்கும் அவர்களது வாகனத்திற்கும் இடையே சுமார் 4, 5 அடி தூரமிருக்குமென்றால் ஒரு 10 அடி தூரமிருக்கும்*" என சாட்சியம் அளித்துள்ளதாலும், மேற்படி சாட்சிகளுக்கு எதிரிகள் தரப்பில் குறிப்பிடுவது போல் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என கூறுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. ஏனெனில் முன்னால் சென்ற வாகனத்திற்கு நேர் பின் சென்றால் தான் எதிரிகள் தரப்பில் குறிப்பிடுவது போல் துப்பாக்கியில் சுடும் போது பின்னால் உள்ள நபருக்கு காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.1 தனது சாட்சியத்தில் ரோட்டின் வளைவில் சென்ற போது டமால் என ஒரு சத்தம் கேட்டது என்றும், அதேபோல் அ.சா.2 சாட்சியும் தனது சாட்சியத்தில் இறக்கம் வளைவாக இருந்ததால் தான் மெதுவாக ஓட்டியதாகவும், அப்போது டமால் என சத்தம் கேட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளதன் மூலம் மேற்படி சம்பவம் நடந்த பகுதி சாலை வளைவாக உள்ளது அறிய முடிவதாலும், அ.சா.2 ஆனந்தன் குறிப்பிடுவது போல் முன் சென்ற வாகனத்தை முந்துவது போல் வரும் போது சற்று இடைவெளி இருக்கும் என்பதாலும், மேற்படி முன் செல்லும் வாகனத்தை சாலை வளைவில் முந்தி செல்லும் போது சுடப்பட்டுள்ளதாலும், மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற சாட்சி ஆனந்தன் சற்று உயரமானவர் என்பதாலும் தான் பின்னால் அமர்ந்திருந்த அ.சா.1 முருகனின் வலதுபுற காதில் துப்பாக்கி குண்டுகள் பட்டு காது கிழிந்து முன்னால் அமர்ந்து வாகனத்தை ஓட்டிச் சென்ற ஆனந்தனுக்கு கையில் பட்டு வலது புற அல்லை பகுதியில் துப்பாக்கி குண்டுகள் துளைத்துள்ளதாலும், மேற்படி துப்பாக்கியில் முன்னால் சென்ற வாகனத்தை சாலை வளைவில் முந்தும் போது சுடப்பட்டதாலும் 1, 2 சாட்சிகளுக்கு மேற்படி காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றே கருத முடிகிறது. எனவே 1, 2 எதிரிகள் அ.சா.1

மற்றும் 2 இருசக்கர வாகனத்தில் முன்னால் சென்று கொண்டிருந்த போது சாலை வளைவில் வந்து அவர்களை முந்துவது போல் வந்து அ.சா.1, 2 சாட்சிகளை எதிரிகள் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளது தெளிவாக அறிய முடிகிறது என்பதால் எதிரிகள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதம் ஏற்றுக்கொள்ளும் விதமாக இல்லை என்றே கருத முடிகிறது.

8.4 மேற்படி சங்கதிகள் குறித்து தடைய அறிவியல் துறை நிபுணர் திருமதி. வித்யா சீனிவாசன் அ.சா.14 ஆக விசாரிக்கப்பட்டதில், அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "*இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் அமர்ந்து பயணம் செல்லும் போது அவர்களுக்கு பின்னால் இருந்து துப்பாக்கியை இயக்கினால் மேற்படி இரண்டு நபர்களின் மீதும் குண்டுகள் பாய வாய்ப்பு உள்ளது என்றால் அதை உறுதியிட்டு கூற இயலாது. இருசக்கர வாகனத்தில் வாகனத்தை ஓட்டி செல்பவரின் அல்லை (வயிறு) பகுதியில் துப்பாக்கி குண்டு இருக்கும் எனில் அவருக்கு பின்னால் அமர்ந்து வருவோரின் உடலை துளைத்தே வர இயலும் என்றால் அரிதி இட்டு கூற இயலாது*" என சாட்சியம் அளித்துள்ளதாலும், அதேபோல் அ.சா.14 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "*ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட இரும்பு குண்டுகள் பெரிய ரகமான குண்டுகள் ஆகும். மேற்சொன்ன குண்டுகளுக்கு சிறிய ரக உபயோக படுத்தப்பட்டால் அவைகள் மொத்தமாக வர வாய்ப்புள்ளது என்றால் உள்ளது. பெரிய குண்டுகளை உபயோகப்படுத்தி ஒருமுறை இயக்கினால் ஒரு குண்டு மட்டுமே வெளி வரும் என்றால் துப்பாக்கியால் எத்தனை குண்டுகள் பொறுத்தப்பட்டு உள்ளதோ அதற்கு ஏற்ப எரிபொருள் உள்ளதன் அடிப்படையில் அத்தனையும் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவரும் ஒன்றாக வரும். ஒற்றை குழல் துப்பாக்கியின் குண்டுகள் தூரம் அதிகமாக சிதறல் ஏற்படும் என்றால் சரிதான். ஒற்றை குழல் துப்பாக்கியின் மூலம் இயக்கப்படும் போது 15 அடி தொலைவை குண்டு கடக்கும் நிலையில் மட்டுமே சிதறல் ஏற்படும் என்றால் அதை விட குறைந்த தூரத்தில் சிதறல் குறைவாக காணப்படும்.*" என தெளிவாக

சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் சாட்சியம் அளித்த அ.சா.2 தனது சாட்சியத்தில் சுமார் 10 அடி தூரத்தில் இருந்து சுட்டதாக சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரிகள் தரப்பில் குறிப்பிடுவது போல் முன்னால் இருசக்கர வாகனத்தில் செல்லும் நபர்களை சுட்டால் இருநபர்கள் மீதும் குண்டு பாயும் என்பதும், பின்னால் அமர்ந்தவர்களில் உடலை துளைத்து தான் முன்னால் உள்ள நபருக்கு காயம் ஏற்படும் என எதிரிகள் தரப்பில் கூறுவது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்றே கருத முடிகிறது.

8.5 அதேபோல் சாட்சி ஆனந்தன் உடலில் இருந்து எடுக்கப்பட்ட துப்பாக்கி குண்டுகள் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.17 அரசு மருத்துவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "*ஒரு நபரை பின்புறத்தில் இருந்து துப்பாக்கியால் சுடும் பொழுது சட்டையின் பின் பகுதியில் துளைகளுக்கான அடையாளம் காணப்படும் என்றால் காணப்படும். இருந்ததாக குறிப்பிடும் இரண்டு வெளி துகள் (Pallets) அக்குல் பகுதியில் இருந்ததா என்றால் அதில் ஒன்று பயனித்து நுரையீரலில் மேல் உள்ள தசையிலும் மற்றொன்று வயிற்று மேல் புறமும் வலதிலிருந்து இடது புறமாக பயணித்து சென்று இருந்தது*" என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், மேற்படி இரண்டு துகள்கள் (Pellets) சாட்சி ஆனந்தனின் உடலில் இருந்து எடுக்கப்பட்டது தெளிவாக அறிய முடிகிறது. மேற்படி சாட்சியங்களை நிரூபிக்கும் வகையில் சம்பவம் நடந்தவுடன் மேற்படி சாட்சிகள் இருவரும் உடனடியாக ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்த போது பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டில் சாட்சி 1க்கு A laceration of right side ear lobe upper 1/3rd with partial loss of conchal cartilage measuring 4x2x1 cm. எனவும், அதேபோல் சாட்சி 2–க்கு 1. A 1x1cm circular gun shot entry wound in infraxillary region right side surrounded by scalds (First degree burns), 2. A 1x1 cm laceration in right side arm (Axillary aspect), 3. A 1x0.5 cm laceration near right side arm (Medical aspect), 4. A 0.5x0.5cm laceration in right arm axillary aspect surrounded by burns. எனவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதால், மேற்படி

சாட்சிகளுக்கு ஏற்பட்ட காயங்கள் துப்பாக்கி குண்டு துளைத்ததாலும், துப்பாக்கி சூட்டின்போது தீப்பற்றியதாலும் சாட்சிகளுக்கு மேற்படி சாட்சிக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது அ.சா.ஆ.10 மற்றும் 11 ஆவணங்கள் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. அதேபோல் மேற்படி சங்கதிகளை நிரூபிக்கும் வகையில் மேற்படி ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளித்துள்ள மருத்துவர் விமலா அ.சா.16 தனது சாட்சியத்தில் "*இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் துப்பாக்கியால் சுட்டதாக கூறினார். முருகன் என்பவரை பரிசோதனை செய்ததில் வலது காதின் மடல் 4x2x1 CM அளவில் பிய்ந்து இருந்தது. மூக்கில் 0.5x0.5 CM அளவில் சிராய்ப்பு இருந்தது. ஆனந்தன் என்பவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு வலது அக்குல் கீழ் பகுதியில் 1x1 CM அளவில் வட்ட வடிவலான துப்பாக்கியால் சுட்ட தீ காயம் இருந்தது. மேற்படி வலது முன் கையில் உள் பகுதியில் 1x1 CM அளிவில் கிழிந்த மாதரியான காயம் இருந்தது. மேற்படி வலது முன் கையின் உள் பகுதியில் மேற்கூறிய காயத்திற்கு அருகே 1x0.5 Cm அளவில் கிழிந்த காயம் இருந்தது. அதே இடத்திற்கு அருகில் 0.5x0.5 CM அளவில் ஒரு தீ காயம் இருந்தது*" என்று தெளிவாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் கற்றறிந்த 1–ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் "*முருகனின் வலது காதில் மடலின் மேல் பகுதியில் காயங்கள் இருந்தது. முருகனுக்கு மேற்படி மடலின் மேற் பகுதியை தவிர அதன் அருகில் எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். காதின் மேற்பகுதியில் காயம் ஏற்பட்டதால் தாடை பகுதியில் அறுவை சிகிச்சை செய்ய அவசியம் இல்லை என்றால் சரிதான்*". என சாட்சியம் அளித்துள்ளதாகவும், அதனால் அ.சா.1–க்கு தாடை அருகே அறுவை சிகிச்சை செய்ததாக கூறுவதால் மேற்படி சாட்சிக்கு ஏற்பட்டதாக கூறும் காயம் துப்பாக்கி சுட்டதால் ஏற்படவில்லை என்றும் மேற்படி சங்கதிகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்றும் எடுத்துரைத்தார்.

8.6 மேற்படி சங்கதிகள் குறித்து பரிசீலிக்கையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் தான் பணப்பையை எடுக்க முயற்சித்த போது துப்பாக்கியை திருப்பி

அதன் பின் பகுதியால் தனது வலது காதின் பக்கம் அடித்து விட்டு பணப் பையை பிடுங்கி கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி காயம் 1–ம் எதிரி துப்பாக்கியால் பின் பகுதியில் தாக்கியதால் தான் மேற்படி காயம் அ.சா.1க்கு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்றே கருத முடிகிறது. மேலும் மேற்படி சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து மேற்படி சாட்சிகளுக்கு முதலுதவி அளித்த மருத்துவர் விமலா மேற்படி சாட்சிக்கு ஏற்பட்ட காயம் குறித்து அ.சா.16 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "*முருகனின் வலது காதில் மடலின் மேல் பகுதியில் காயங்கள் இருந்தது. முருகனுக்கு மேற்படி மடலின் மேற் பகுதியை தவிர அதன் அருகில் எந்த காயமும் இல்லை என்றால் சரிதான் என்றும், முருகனின் காது மடலில் கிழிந்த காயம் இருந்தது. காது மடலில் குண்டு பாயந்ததர்க்கான அருகுறியும் இல்லை என்றால் ஓட்டை இல்லை, காயம் இருந்தது. காது மடலில் குண்டு பாயந்ததர்க்கான அருகுறியும் இல்லை என்றால் ஓட்டை இல்லை. குண்டு பட்டு சென்றால் ஏற்பட வாய்ப்பு உள்ளது.*" என தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதாலும், மேற்படி அ.சா.1 சாட்சிக்கு காதில் ஏற்பட்டுள்ள காயம் 1–ம் எதிரி துப்பாக்கியால் சுட்டதால் தான் ஏற்பட்டுள்ளது என்பது அறிய முடிகிறது. மேற்படி சங்கதியை நிரூபிக்கும் வகையில் மேற்படி 2–வது சாட்சி ஆனந்தனை 1–ம் எதிரி துப்பாக்கியால் சுட்டபோது மேற்படி துப்பாக்கியில் இருந்த குண்டு பாய்ந்ததில் ஆனந்தன் அணிந்திருந்த டி–சர்ட்டில் குண்டு பட்டு தீப்பற்றியதாக அரசுத் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகள் குறித்து அ.சா.பொ.1ஐ பரிசீலிக்கையில் அ.சா.2 ஆனந்தன் அணிந்திருந்த டி–சர்ட் எரிந்த நிலையில் உள்ளது தெரிய வருகிறது. மேற்படி ஆனந்தனின் டி–சர்ட்டை ஆய்விற்கு அனுப்பிய போது அதில் நிபுணர் அ.சா.14 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் "*முண்டா பனியனில் வலது முன் பக்க தோள் பகுதியில் இருந்த இரண்டு துளைகள் இரும்பு குண்டு துளைத்ததனால் ஏற்பட்டது என்று கண்டுபிடிக்கப்பட்டது. அரைக்கை டி–சர்ட் வலது கை பின் பகுதியில் 17.07 cm x*

*4.5 cm அளவிலான கிழிதலின் துப்பாக்கி சுட்ட வெப்பத்தின் மற்றும் எரி பொருளின் விளைவினால் ஏற்பட்டது என்று கண்டுபிடிக்கப்பட்டது. எனவே மேற்படி துளை கிழிதல் துப்பாக்கி சூட்டினால் சுமார் 3 அடி தூரத்தில் இருந்து சுடப்பட்டதால் ஏற்பட்டது ஆக கருத்து வழங்கப்பட்டது*" என தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதாலும், அதேபோல் ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.8–ல் "*When an SBML gun is fired, projectile/s is/are projected out of the muzzle end of the gun; burning propellant particles, partly burnt propellant particles, hot combustion gases, smoke, wadding materials etc., are also ejected out of the muzzle end along with the projectile/s, during firing. The evidence of singeing/burning, blackening and gunshot discharge residues due to the effect of burning / partly burnt propellant particles and smoke would be found on the target when the target is at a close range / with in powder range. The Powder range, in the case of a shotgun like SBML gun is about 1 to 15 meters*" என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாலும், மேற்படி சாட்சிகள் 1 மற்றும் 2–க்கு ஏற்பட்ட காயங்கள் துப்பாக்கியால் சுடப்பட்டதால் ஏற்பட்ட காயங்கள் என தெளிவாக அறிய முடிகிறது. எனவே மேற்படி அ.சா.1 மற்றும் 2 வாகனத்தில் செல்லும் போது 1–ம் எதிரி சுட்டதால் தான் அ.சா.2–ன் டி–சர்ட் தீப்பற்றி உள்ளது அறிய முடிகிறது.

8.7 ஆனால் கற்றறிந்த எதிரித் தரப்பு வழக்கறிஞர் ஆனந்தன் பயன்படுத்தியாக கூறும் உள் பனியனில் துளைகள் ஏதும் இல்லை என்றும், அதனால் 2–வது சாட்சிக்கு ஏற்பட்டுள்ள காயம் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளது இல்லை என எடுத்துரைத்தார். ஆனால் அ.சா.14 தனது சாட்சியத்தில் துப்பாக்கியால் சுட்டதால் தான் மேற்படி டி–சர்ட்டில் தீப்பிடித்துள்ளது என தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதாலும், மேற்படி குண்டு அல்லையில் பட்டுள்ளதால் தான், மேற்படி முன்டா பனியனில் இரண்டு துளைகள் ஏற்பட்டுள்ளது என்றும் அறிய முடிகிறது. மேற்படி சங்கதிகள் குறித்து பரிசீலிக்கையில் அ.சா.17 தனது சாட்சியத்தில் "*பணியில் இருந்த மருத்துவர் மருத்துவர் அறுவை சிகிச்சை மருத்துவர் அவரை பரிசோதித்து அவர்*

*காயங்களுக்கு CT ஸ்கேன் எடுக்கப்பட்டது. அதில் 2 வெளி துகள்கள் (Pellets) வயிற்றின் மேற்பகுதியிலும், அல்லையின் மேற்பகுதியில் இருந்து. குடல் அறுவை சிகிச்சை மருத்துவரின் அறிவுறுத்தல் பெயரில் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். மேற்படி 2 வெளி (Pellets) துகள்கள் மீட்கப்பட்டது. மேலும் குடல் உறுப்புகள் நல்ல நிலையில் உள்ளதா என்று உறுதி செய்யப்பட்டது. அவர் வலதுபக்க நெஞ்சில் நுரையீரலின் மேற்பகுதியில் ரத்தம் சேர்ந்திருந்தது. CT ஸ்கேன் மூலம் காணப்பட்டது. மேற்படி சேர்ந்து இருந்த ரத்தத்தை குழாயின் மூலம் அகற்றப்பட்டது*" என தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதன் மூலமும், மேற்படி இரண்டு துகள்களும் (Pellets) சாட்சி ஆனந்தனின் உடலில் இருந்து எடுக்கப்பட்டது என தெளிவாக அறிய முடிகிறது. அதே போல் அ.சா.14 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "*என்னிடம் காண்பிக்கப்படும் அயிட்டம் 6 கையில்லா பணியனில் துப்பாக்கி குண்டுகள் துளைத்ததற்கான அறிகுறிகள் இல்லை என்றால் சரியல்ல, முன் வலது பக்கத்தில் இரண்டு இரும்பு குண்டுகள் துளைத்ததற்காக துளைகள் உள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது*" என சாட்சியம் அளித்துள்ளதன் மூலமும் மேற்படி ஆனந்தனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவரும் தனது விபத்து பதிவேட்டில் *There he was operated and pallets removed.* என குறிப்பிடப்பட்டுள்ளதாலும், மேற்படி இரண்டு துப்பாக்கி குண்டுகள் ஆனந்தன் உடலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளதன் மூலம் ஆனந்தன் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார் என்பது நிரூபணம் ஆகிறது.

8.8 கற்றறிந்த எதிரித் தரப்பு வழக்கறிஞர் அ.சா.17 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் காயம்பட்ட ஆனந்தன் என்பவருக்கு சிகிச்சையில் இருந்த வரையில் முதன்மையான மருத்துவ சிகிச்சையினை மருத்துவர் சுரேஷ் பாபு என்பவர் அளித்து வந்தார். காயம்பட்ட ஆனந்தன் என்பவரது சிகிச்சை குறித்தும், காயங்கள் குறித்தும் அனைத்து முடிவுகளையும் மருத்துவர் சுரேஷ்பாபுவே கவனித்து வந்தார் என்றால் சரிதான். ஆனந்தனுக்கு குடல் அறுவை சிகிச்சையினை மருத்துவர் சுரேஷ் செய்து இருந்தார். அறுவை

சிகிச்சை செய்து இருந்த மருத்துவரை விசாரணை செய்தால் தான் குண்டு பாய்ந்து இருந்ததின் தன்மையை கூற இயலும் என்றால் ஆமாம். என சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி மருத்துவரை விசாரித்தால் தான் மேற்படி ஆனந்தனுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து தெளிவாக அறிய முடியும் என்றும் அ.சா.17 சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்றும் எடுத்துரைத்தார். ஆனால் மேற்படி சங்கதிகளை பரிசீலிக்கையில் மேற்படி சாட்சி அ.சா. 17 தனது சாட்சியத்தில் காயம்பட்ட ஆனந்தனுக்கு ஏற்பட்டிருந்த வெளிபுற காயங்கள் பார்த்து இருந்தேனா என்றால் பணி மருத்துவர்கள் விடுமுறையில் இருக்கும் போது மாற்று பணி செய்த வகையில் பார்த்துள்ளேன் என சாட்சியம் அளித்துள்ளதன் மூலம் மேற்படி காயம்பட்ட ஆனந்தனுக்கு அ.சா.17–ம் சிகிச்சை அளித்துள்ளது அறிய முடிகிறது என்பதால் மேற்படி ஆனந்தனுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து அ.சா.17 சாட்சியம் அளிக்க தகுந்தவர் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மேற்படி எதிரிகள் தரப்பில் குறிப்பிடும் மருத்துவர் சுரேஷ் குடல் அறுவை சிகிச்சை நிபுணர் ஆவார். இவ்வழக்கின் மேற்படி சாட்சி ஆனந்தனுக்கு ஏற்பட்ட காயங்கள், துப்பாக்கி குண்டு துளைத்ததால் ஏற்பட்டதா என்பதே ஆகும். அதுகுறித்து மேற்படி சாட்சி 17 மற்றும் சாட்சி 16 ஆகியோர்கள் மேற்படி சாட்சி ஆனந்தனுக்கு ஏற்பட்ட காயங்கள் துப்பாக்கி குண்டு துளைத்ததால் ஏற்பட்ட காயங்கள் என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், விபத்து பதிவேட்டில் *A laceration of right side ear lobe upper 1/3rd with partial loss of conchal cartilage measuring 4x2x1 cm. எனவும், அதேபோல் சாட்சி 2–க்கு 1. A 1x1cm circular gun shot entry wound in infraxillary region right side surrounded by scalds (First degree burns), 2. A 1x1 cm laceration in right side arm (Axillary aspect), 3. A 1x0.5 cm laceration near right side arm (Medical aspect), 4. A 0.5x0.5cm laceration in right arm axillary aspect surrounded by burns.* என குறிப்பிடப்பட்டுள்ளதாலும் மேற்படி இரண்டு துப்பாக்கி குண்டுகள் சாட்சி ஆனந்தனின் உடலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளதன் மூலம் ஆனந்தன் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார் என்பதும்,

அதனால் தான் சாட்சி ஆனந்தனுக்கு மேற்படி காயங்கள் துப்பாக்கி குண்டால் ஏற்பட்டது என்பது தெளிவாக அறிய முடிகிறது.

8.9 மேற்படி ஆனந்தன் உடலில் இருந்து எடுக்கப்பட்ட குண்டுகள் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள துப்பாக்கியில் பயன்படுத்தபட்டுள்ளதா என்பதும், மேற்படி துப்பாக்கி சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் குறித்து பரிசீலிக்கையில் இவ்வழக்கில் "*சுமார் 61cm நீளமுள்ள கட்டை மற்றும் இரும்பு குழலுடன் கூடிய நாட்டு துப்பாக்கி ஒன்று அடி பாகத்தில் சில்வர் கலரில் தகரம் மடித்து அடிக்கப்பட்டுள்ளது. அதில் 37 cm நீளம் கட்டை பகுதியும், சுமார் 42 cm கட்டையுடன் இணைந்த இரும்பு குழல் பகுதி குதிரை மற்றும் டிகளுடன் கூடியவை. மஞ்சள் / ஆரஞ்சு நிறம் கொண்ட பவுடர் சிறிய பிளாஸ்டிக் குப்பியில் சுமார் 7.460 கிராம். கரி மருந்து சிறிதளவு பப்பரில் சுத்தி வைக்கப்பட்டவை. சுமார் 11.150 கிராம். தேங்காய் நார் சிறிதளவு சுமார் 13.880 கிராம். இரும்பு சிறிய பால்ரஸ் குண்டுகள் ஐந்து. அதில் புதியது 2, பழையது மூன்று. NH 100 Polaris PRECIHCLE Sports Air Gun CAL 4.5 (177) Serial No. A.H. 02975 என்ற Air Gun சுமார் 41 Cm இதில் இரும்பு பகுதி சுமார் 29 Cm, பைபர் பகுதி 27 Cm. K.F. 7.65 என்ற Pistal Rounds – 4. இரும்பு பால்ராஸ் குண்டுகள் மூன்று. Double Head – DIANA SHOT AIR RIPLE PELLETS 100 NDI (177) CAL 4.5 mm Long Rang திறக்காத நிலையில் 4 Box.*" ஆகியவைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அரசுத் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆனந்தன் உடலில் இருந்து எடுக்கப்பட்ட குண்டும், வழக்கு சொத்தாக கைப்பற்றப்பட்டுள்ள துப்பாக்கியும் தடய அறிவியல் துறைக்கு ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து தடய அறிவியல் துறை இணை இயக்குநர் அ.சா.14 தனது சாட்சியத்தில் "*மேற்படி வழக்கு சொத்து துணை இயக்குநர் உடன் இணைந்து ஆய்வு செய்யப்பட்டதாகவும், அதில் 1 ஒற்றை குழல் நாட்டு துப்பாக்கி அது உபயோகப்பட்டு இருந்ததற்கான எரிந்த நிலையில் உள்ள துகல்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும், மேற்படி துப்பாக்கி இயங்கும் நிலையில்*

*இருந்ததாகவும், மேற்படி துப்பாக்கி தற்செயலாக வெடிக்கக்கூடிய தன்மையில் இல்லை என்றும், 2-ம் இரும்பு குண்டுகள் ஒற்றை குழல் நாட்டு துப்பாக்கியில் குண்டுகளாக உபயோகப்படுத்தக்கூடிய குண்டுகள் என்றும், மேற்படி குண்டுகள் மேற்படி துப்பாக்கியில் இருந்து 30 கெஜ தூரத்தில் இருந்து சுட்டால் தீவிரமான காயங்களை ஏற்படுத்தும் என்றும், 3 ஆரஞ்சு நிற பவுடரில் ஆய்வு செய்ததில் அதில் Percussion CAPS செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் பொருள் என்றும், 4-ல் கறுப்பு நிற பவுடரில் கண் பவுடர் குறிய வேதிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இது மேற்படி துப்பாக்கியில் உந்து எரி பொருளாக தேங்காய் நார் மேற்படியில் துப்பாக்கியில் தடுப்பு பொருளாக பயன்படுத்தக்கூடியது ஆகும்."* என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதால், மேற்படி துப்பாக்கி மற்றும் ஆனந்தனின் உடலில் எடுக்கப்பட்ட குண்டுகள் மேற்படி துப்பாக்கியில் பயன்படுத்தக் கூடியது என்பதும், மேற்படி சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியில் இருந்து வெளியேறியுள்ளது என்பது தெளிவாக அறிய முடிகிறது. எனவே இவ்வழக்கின் ஆனந்தன் உடலில் இருந்து இரண்டு குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாலும், மேற்படி துகள்கள் இரண்டிற்கு மேற்பட்ட குண்டுகள் (Pallets) துப்பாக்கியில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது என அறிய முடிகிறது என்பதாலும் மேற்படி எதிரிகள் பயன்படுத்திய துப்பாக்கி இயங்கும் நிலையில் இருந்துள்ளதாலும் அதில் கரி மருந்து பயன்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாலும், மேற்படி குண்டுகள் மேற்படி துப்பாக்கியில் பயன்படுத்தப்பட்டுள்ளது தெளிவாக அறிய முடிகிறது.

8.10 கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அ.சா.1 மற்றும் 2 சாட்சிகள் சம்பவத்தின் போது கொள்ளை அடிக்கப்பட்டதாக கூறும் ரூபாய் எவ்வளவு என்று தெளிவாக குறிப்பிடவில்லை என்றும் சுமார் மூன்று இலட்சம் எதிரிகள் கொள்ளையடித்து சென்றதாக சாட்சியம் அளித்துள்ளதால் உண்மையில் சம்பவத்தின் போது எவ்வளவு தொகை கொள்ளயடிக்கப்பட்டதாக கூறுவது எவ்வளவு என்று தெளிவாக குறிப்பிடவில்லை என்பதால் அரசுத் தரப்பில்

குறிப்பிடுவது போல் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும், அதை அரசுத் தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும் எடுத்துரைத்தார். மேற்படி சங்கதிகள் குறித்து பரிசீலிக்கையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் நான் கடையை மூடிவிட்டு கடை சாவி, ரூம் சாவி அன்று விற்பனையான சுமார் மூன்று இலட்சம் பணம், பில் புக சிட்டா பார்ம் 5 ஆகியவற்றை இருசக்கர வாகனத்தில் எடுத்துச் சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் அசா.2–ம் தனது சாட்சியத்தில் விற்பனை முடிந்து பையில் பில் புக், சிட்டா, விற்பனைத் தொகை, இருப்பு பதிவேடு, ரூம் சாவி, கடை சாவி ஆகியவற்றை வாகனத்தின் முன் பகுதியில் வைத்துக்கொண்டு சென்றதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் மேற்படி அ.சா.1 சாட்சி மதுக்கடையில் விற்பனை தொகை எண்ண மாட்டோம் ரூமிற்கு வந்து தான் இருப்பு எண்ணிக்கை விவரத்தை வைத்து வசூல் தொகையை கணக்கிடுவோம் என அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளதால் விற்பனை தொகையை சாட்சிகள் அவர்கள் தங்கியிருக்கும் இடத்தில் சென்று எண்ணி கணக்கீடு செய்வது வழக்கமாக இருந்து வந்துள்ளது அறிய முடிகிறது. இதுகுறித்து இவ்வழக்கில் மேற்படி அசா.1, 2 பணிபுரிந்த மது கடையில் பணிபுரிந்த இளையராஜா அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டதில் டாஸ்மாக் மேலாளர் கடைக்கு வந்து ஆய்வு செய்தார் அவ்வாறு ஆய்வு செய்தபோது நானும், கோவிந்தராஜூம் உடனிருந்தோம். கடையின் மேற்பார்வையாளர் சுபாஷ் என்பவரும் உடனிருந்தார். ஆய்வின்போது ரூ.2,90.830/– குறைவு இருப்பதாக கடையிருப்பின் அடிப்படையில் கண்டறியப்பட்டது என்றும், அதேபோல் மேற்படி கடையில் மேற்பார்வையாளராக இருந்த அ.சா.6 சுபாஷ் என்பவர் விசாரிக்கப்பட்டதில் சம்பவம் நடந்தவுடனே சம்பவம் தொடர்பாக டாஸ்மாக் மாவட்ட மேலாளருக்கு தகவல் தெரிவித்துவிட்டேன். அடுத்த நாள் மாவட்ட மேலாளர் கணக்குகளை சரிப்பார்க்க உதவி கணக்கு மேலாளர் மஞ்சுநாத் என்பவரை கடைக்கு அனுப்பி வைத்திருந்தார். பகல் 12.00 மணிக்கு கடைக்கு வந்து பூட்டை கல்லால்

உடைத்து திறந்தோம். 2 விற்பனையாளர்கள் கோவிந்தராஜ், இளையராஜா மற்றும் தான், கணக்கு மேலாளர் ஆகியோர் கணக்கு வழக்குகளை சரிப்பார்த்தபோது சம்பவம் நடைபெற்ற தினத்தின் விற்பனை ஆனது ரூ.2.90,830/– என கண்டறிந்து மாவட்ட மேலாளருக்கு கணக்கு மேலாளர் மூலமாக தகவல் தெரிவித்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளதாலும், அதேபோல் கிருஷ்ணகிரி டாஸ்மாக் அலுவலகத்தில் உதவி மேலாளர் கணக்கர் பிரிவில் பணிபுரிந்த மஞ்சுநாத் அ.சா.10 ஆக விசாரிக்கப்பட்டதில் எனது உயர் அதிகாரி மாவட்ட மேலாளர் கடையில் சென்று எவ்வளவு தொகை களவு சென்றது என்பதை உறுதி செய்து கூறுமாறு தெரிவித்து இருந்ததார். மேற்படி கடையை பகல் 12 மணி அளவில் அடைந்து விட்டேன். கடையின் பூட்டு சாவி என்னிடம் இல்லை. அந்த இடத்தில் போலீசாரும் மேற்சொன்ன சுபாஷ், விற்பனையாளர்கள் கோவிந்தராஜ், இளையராஜா அங்கு இருந்தார்கள். தொகையோடு சேர்த்து சாவியும் களவு செய்து விட்டதால் கல்லால் உடைத்து பூட்டை திறந்தோம். அதன் பிறகு சரக்கு இருப்பு விவரம், முந்தையநாள் வரை விற்பனை தொகை வங்கியில் வைப்பீடு செய்த விவரம், அங்கு இருந்த பதிவேடுகளின் மாவட்ட அலுவலகத்தில் இருந்து, சரக்கு அனுப்பப்பட்ட விவரத்தில் இருந்து விற்பனையான சரக்கு போக இருப்பில் உள்ள சரக்கின் அடிப்படையில் 15.12.2018 அன்று விற்பனை தொகை எவ்வளவு இருந்தது என கணக்கீடு செய்தேன். அதன் அடிப்படையில் 15.12.2018 அன்று ரூ.2,90,830/–தொகைக்கு சரக்கு விற்பனை செய்யப்பட்டது தெரியவந்தது. மேற்படி விவரங்கள் அடிப்படையில் புள்ளிவிவர பட்டியலை சுபாஷ் விற்பனையாளர் கோவிந்தராஜ், இளையராஜா ஆகியோர்களுக்கு அங்கு இருந்ததால் தயார் செய்து அவர்களிடம் கையொப்பம் வாங்கினேன். அப்போது அசோக்குமார் @ கோ நிறுவனத்தின் கணக்கர் உதவியாளர் ஆனந்தன் என்பவரும் புள்ளி விவரப்பட்டியல் விபரம் தயார் செய்த போது உடன் இருந்து கையொப்பம் இட்டார் என மேற்படி சாட்சிகள் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதால், மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2

பணிபுரிந்த மதுபானக் கடையில் சம்பவம் நடந்த 15.12.2018–ம் தேதியில் மது விற்பனை ரூ.2,90,830/–க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை தான் அ.சா.1 மற்றும் 2 சாட்சிகள் பையில் எடுத்துச் சென்றுள்ளதும். மேற்படி பையைத் தான் எதிரிகள் அ.சா.1 மற்றும் 2–யை துப்பாக்கியால் சுட்டு ரூ.2,90,830/–கொள்ளையடித்து சென்றுள்ளதும் அறிய முடிகிறது.

8.11 மேலும் 1, 2 எதிரிகளை விசாரணை செய்த போது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், அதனடிப்படையில் சான்றுப் பொருட்களை கைப்பற்றியதாகவும் அரசுத் தரப்பில் எடுத்துரைத்தார். மேற்படி சங்கதிகளை பரிசீலிக்கையில் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் அளித்த போது உடனிருத்ததாக குறிப்பிடும் அசா12 தனது சாட்சியத்தில் *"நிலையத்தில் காவல் ஆய்வாளர் வெங்கடேசனை விசாரணை செய்து கொண்டு இருந்ததாகவும், அப்போது தான், தன் உதவியாளர், கேமராமேன் மற்றும் போலீஸ் இருந்ததாகவும் ஆஜர் 1–ம் எதிரியிடம் விசாரித்தார்கள். காவல் நிலையத்திலேயே 6 முதல் 7 மணி வரை வெங்கடேசனிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகவும், பிறகு 8 முதல் 9 வரை பரதன் இடம் பதிவு செய்யப்பட்டதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் தன்னுடைய கிராம உதவியாளரும் சாட்சி கையொப்பம் இட்டோம். பிறகு வெங்கடேசனை அழைத்து கொண்டு ஊத்தங்கரை கலைஞர் நகரில் உள்ள வெங்கடேசன் வீட்டிற்கு சென்றதாகவும், அப்போது தான் தன் உதவியாளர் எதிரி வெங்கடேசனும் பரதனும் மற்றும் போலீசாரும் வந்ததாகவும், கேமராமேன் உடன் வந்து இருந்ததாகவும், எதிரி வெங்கடேசன் வீடு தார்ஸ் வீடு என்றும், வீட்டிற்குள் அவரே சென்று கோழி கூட்டில் உள் இருந்த துப்பாக்கி ஆஜர்படுத்தியதாகவும், மேலும் 4 பிஸ்டல் குண்டுகளை ஆஜர்படுத்தியதாகவும், கோலி குண்டு போன்று 3 குண்டுகளை ஆஜர்படுத்தியதாகவும், மேலும் 4 பாக்கெட்டுகள் பிரிக்காத நிலையில் ஆஜர்படுத்தியதாகவும், மேற்படி பொருட்களை வெங்கடேசன் ஆய்வாளர்களிடம் கொடுத்ததாகவும், அப்போது*

*கேமராமேன் ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும், பொருட்களை தன் முன்னிலையில் காண்பித்ததாகவும், அவைகளை பதிவு செய்து தன்னிடமும் என் உதவியாளரிடமும் கையெழுத்து வாங்கியதாகவும், எதிரி வெங்கடேசன் வீட்டில் 10 மணிக்கு முடித்து விட்டு ரெட்டிப்பட்டி பரதன் வீட்டிற்கு சென்றதாகவும், எதிரி பரதன் வழியை காண்பித்து வந்ததாகவும், எதிரி பரதன் வீடு ஓட்டு வீடு என்றும், தாங்கள் அனைவரும் அங்கும் சென்றதாகவும், எதிரி பரதன் வீட்டின் பரனில் இருந்து நீட்டு நாட்டு துப்பாக்கி கரி மருந்து, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிற பவுடர் கோலி குண்டுகள் போன்று 5 குண்டுகள் தேங்காய் நாரு, டி.வி.யஸ் பெரிய இருசக்கரவாகனம் மற்றும் ரூ.25,000/- தொகை அதில் ரூ.500, 200 நோட்டுகள் இருந்தது என்றும், ஆய்வாளர் அவைகளை எண்ணிபார்த்ததாகவும், மகஜர் தயார் செய்து கையெழுத்து வாங்கியதாகவும், தானும் தன் உதவியாளரும் கையெழுத்து போட்டோம்"* என தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தை ஒத்துரைத்தே எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும் போது உடனிருந்தவரும், சான்று பொருட்களை கைப்பற்றும் போது உடனிருந்து வீடியோ மற்றும் புகைப்படம் எடுத்த வீரராகவன் அ.சா.18 ஆக விசாரிக்கப்பட்டதில் *"தான் 25.02.2019 அன்று காலை சுமார் 5.30 மணிக்கு காவல் நிலையம் சென்றதாகவும், காவல் நிலையத்தில் போலீஸாரும், கிராம நிர்வாக அலுவலரும் அவர் உதவியாளரும் மற்றும் 2 நபர்களும் இருந்ததாகவும், காவல் நிலையத்தில் வைத்து வெங்கடேசன், பரதன் ஆகியோர்களிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து இருந்ததாகவும், அந்த நிகழ்வினை தான் வீடியோ பதிவு செய்ததாகவும், காவல் நிலையத்தில் இருந்து வித்யா மந்தீர் பள்ளிக்கு பின்புறமாக உள்ள வெங்கடேசன் வீட்டிற்கு அவர் அழைத்து செல்ல போலீஸாரும், கிராம நிர்வாக அலுவலரும் அவர் உதவியாளரும் மற்றும் தானும் சென்றதாகவும், வெங்கடேசன் வீட்டில் ஒளித்து வைத்திருந்த துப்பாக்கி மற்றும் குண்டு ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை போலீஸார் கைப்பற்றியதாகவும், அந்த நிகழ்வை தான் வீடியோ பதிவு*

*செய்ததாகவும் அங்கிருந்து மதிரி பரதன் சொந்த ஊரான செட்டிப்பட்டிக்கு சென்றதாகவும், பரதன் வீட்டின் பரனில் வைத்திருந்த துப்பாக்கி குண்டு மற்றும் ரொக்கம் ஆகியவற்றை ஆஜர் செய்ததை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் முன்னிலையில் போலீஸார் கைப்பற்றியதாகவும், அந்த நிகழ்வையும் தான் வீடியோ பதிவு செய்ததாகவும், பிறகு பதிவு செய்த வீடியோவையும், புகைப்படங்களையும் போலீஸாரிடம் கொடுத்தேன்"* என சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளதன் மூலமும், மேற்படி எடுக்கப்பட்ட வீடியோ மற்றும் புகைப்படங்கள் **அ.த.சா.12** என குறியீடு செய்யப்பட்டுள்ளதன் மூலமும், விசாரணை அதிகாரி எதிரிகளிடம் மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதும் அதில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டு வாக்கு மூலம் அளித்துள்ளதும், அதனடிப்படையில் சான்று பொருட்கள் *"சுமார் 51cm நீளமுள்ள கட்டை மற்றும் இரும்பு குழலுடன் கூடிய நாட்டு துப்பாக்கி ஒன்று அடி பாகத்தில் சில்லர் கலரில் தகரம் மடித்து அடிக்கப்பட்டுள்ளது. அதில் 37 cm நீளம் கட்டை பகுதியும், சுமார் 42 cm கட்டையுடன் இணைந்த இரும்பு குழல் பகுதி குதிரை மற்றும் டிகளுடன் கூடியவை மஞ்சள் / ஆரஞ்சு நிறம் கொண்ட பவுடர் சிறிய பிளாஸ்டிக் குப்பியில் சுமார் 7.460 கிராம். கரி மருந்து சிறிதளவு பப்பரில் சுத்தி வைக்கப்பட்டவை. சுமார் 11.150 கிராம் தேங்காய் நார் சிறிதளவு சுமார் 13.880 கிராம் இரும்பு சிறிய பால்ரஸ் குண்டுகள் ஐந்து, அதில் புதியது 2 பழையது மூன்று NH 100 Polaris PRECIHCLE Sports Air Gun CAL. 4.5 (177) Serial No. A.H. 02975 என்ற Air Gun சுமார் 41 Cm இதில் இரும்பு பகுதி சுமார் 29 Cm, பைபர் பகுதி 27 cm. K.F. 7.65 என்ற Pistal Rounds 4. இரும்பு பால்ராஸ் குண்டுகள் மூன்று Double Head – DIANA SHOT AIR RIPLE PELLETS 100 NDI (177) CAL 4.5 mm Long Rang திறக்காத நிலையில் 4 Box."* கைப்பற்றப்பட்டுள்ளதும், மேற்படி சாட்சிகளின் மூலம் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

8.12 பொதுவாக ஒருவர் துப்பாக்கி பயன்படுத்தும் போது அதற்கு படைகலன் பிரிவு 3–ன் படி உரிய அனுமதி பெற வேண்டும். ஆனால் இவ்வழக்கில் பயன்படுத்தப்பட்டுள்ள துப்பாக்கி எவ்வித உரிமமும் இல்லாமல் பயன்படுத்தியுள்ளது தெளிவாக அறிய முடிகிறது. எனவே மேற்படி எதிரிகள் பயன்படுத்திய துப்பாக்கி உரிய உரிமம் இல்லாமல் வைத்திருந்ததால், இந்திய படைகலன் சட்டம் (Indian Arms Act) பிரிவு 39–ன் படி எதிரிகள் மீது விசாரணை செய்வதற்கு மாவட்ட நடுவர் (மாவட்ட ஆட்சியர்) அனுமதி பெற வேண்டும் என்பதின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகள் மீது அ.சா.ஆ.24–ன் படி கிருஷ்ணகிரி மாவட்ட நடுவர் (மாவட்ட ஆட்சியர்) அவர்களிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

8.13 சாட்சிகள் 1 மற்றும் 2 இரண்டு சக்கர வாகனத்தில் செல்லும் போது 1, 2 எதிரிகள் துப்பாக்கியால் சுட்டதில் இருவரும் கீழே விழுந்ததில் குண்டு காயம் பட்ட ஆனந்தன் அருகில் இருந்த வித்யா மந்தீர் கல்லூரி விடுதிக்கு ஓடி சென்றுள்ளார். அங்கு சென்று அப்போது பனியில் இருந்த இரவு பாதுகாவலரிடம் தன்னை சுட்டு விட்டதாகவும், பின்பு மேற்பார்வையாளருக்கு செல்போனில் தகவல் கொடுத்ததாகவும், 108 ஆம்புலன்ஸிற்கும் தகவல் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி ஆனந்தனின் சாட்சியத்தை சார்ந்தே மேற்படி மேற்பார்வையாளர் அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில் "நான் சம்பவம் தினமான 15.12.2018–ம் தேதி இரவு சுமார் 10.01 மணியளவில் ஆனந்தனின் அழைப்பேசியில் இருந்து வித்யா மந்தீர் கல்வியல் கல்லூரி காவலர் என்னிடம் ஆனந்தன் மற்றும் முருகனை சுட்டு விட்டதாக தெரிவித்தார் என அ.சா.2 முதல் விசாரணையிலும் குறுக்கு விசாரணையிலும் கூறியுள்ள சாட்சியத்தை சார்ந்தே சாட்சியம் அளித்துள்ளதால், மேற்படி அ.சா.4 சாட்சியம் அரசுத் தரப்பை நிரூபிக்கும் வகையில் உள்ளதென்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8.14 அதே போல் மேற்படி துப்பாக்கி சூட்டின் போது வாகனத்தில் பின்னால் சென்று சுட்ட போது கீழே விழுந்த அ.சா.1 முருகன் மேற்படி சம்பவம் குறித்து உடனடியாக அனுமன்தீர்த்தம் சேர்ந்த முன்னாள் பஞ்சாயத்து தலைவர் மாரியப்பனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன் என்றும், நான் தகவல் தெரிவித்து சுமார் கால் மணி நேரத்தில் மாரியப்பனும், இரண்டு, மூன்று நபர்கள் வந்தனர் என்றும் கூறியுள்ளதை நிரூபிக்கும் வகையில் அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "*சம்பவம் நடைபெற்ற போது இரவு சுமார் 10.15 மணியிருக்கும். அதன் பிறகு ஆம்புலன்ஸிற்கு மாரியப்பன் தகவல் சொல்லி வந்தது. அதன் பிறகு ஆம்புலன்ஸில் ஏறி நான், ஆனந்தன் மற்றும் கடை சூப்பர்வைசர் ஆகியோர் ஊத்தங்கரை அரசு மருத்துவமணைக்கு வந்தோம். ஆனந்தன் பி.எட் கல்லூரி பக்கம் சம்பவத்திற்கு பயந்து ஒளிந்துக்கொண்டிருந்தார். அவரையும் அழைத்துக்கொண்டு தான் அரசு மருத்துவமனைக்கு வந்தோம்.*" என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 சாட்சியத்தை ஒத்துரைத்தே அ.சா.3–ம் தனது சாட்சியத்தில் "*கடந்த 15.12.2018 அன்று இரவு சுமார் 10.15 மணியளவில் அ.சா.1 தன்னை போனில் அழைத்தாகவும், அவர் அழைத்து தன்னிடம் தானும், அ.சா.2ம் இருசக்கர வாகனத்தில் வந்துக் கொண்டிருந்தபோது வித்யாமந்தீர் பி.எட் கல்லூரி அருகே அடையாளம் தெரியாத நபர்கள் அவர்களை துாப்பாக்கி காட்டி ஓயின்சாப் வசூல் செய்த தொகையை எடுத்துச் சென்றுவிட்டதாகவும், ஆட்களை அழைத்து வரும்படியும் சொன்னார் என்றும், தான் ஆனந்தனிடம் முருகனை அழைத்துக்கொண்டு சென்றபோது ஆம்புலன்ஸ் வந்தது என்றும், தான் ஆம்புலன்ஸில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை அழைத்துக்கொண்டு ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்ததாகவும், தான் இளையராஜாவுக்க போன் மூலம் அ.சா.1 மற்றும் 2 ஐ துப்பாக்கியால் சுட்டுவிட்டதாகவும், அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக தகவல் தெரிவித்தாகவும், ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு தாங்கள் வந்தபோது இளையராஜா*

*மற்றும் மதுக்கடை கண்காணிப்பாளர் சிவக்குமார் ஆகியோரும் வந்து விட்டனர்.*" என சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் மேற்படி அ.சா.1, 3 சாட்சியங்களை நிரூபிக்கும் வகையில் அ.சா.5-ம் தனது சாட்சியத்தில் "*அனுமந்தீர்த்தத்தை சேர்ந்த முன்னாள் தலைவர் மாரியப்பன் என்பவர் தனக்கு 10.15 மணியளவில் போன் செய்ததாகவும், ஆனந்தன் மற்றும் முருகனை துப்பாக்கியால் வித்தியா மந்தீர் மாணவர் விடுதி பக்கம் சுட்டுவிட்டு பணத்தை கொள்ளையடித்துவிட்டதாக தகவல் சொன்னதாகவும், தான் வந்துவிடுவதாக சொல்லிவிட்டுஇருசக்கர வாகனத்தில் கல்லூரி விடுதி அருகே சென்றபோது மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டதாக சொன்னதாகவும், பின்பு தான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்ததாகவும், ஆனந்தன் மற்றும் முருகன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாகவும், தான் பார்க்கும்போது ஆனந்தனுக்கு வலது கை அக்குள் மற்றும் விலா எலும்பு பகுதியில் காயம் இருந்ததாகவும், முருகனுக்கு வலது காதில் காயம் இருந்ததாகவும், அவருக்கு காதில் கட்டு போட்டிருந்தனர்.*" என சாட்சியம் அளித்துள்ளதின் மூலமும், மேற்படி துப்பாக்கி சூடு சம்பவம் நடந்தவுடன் அ.சா.1, அ.சா.3 மாரியப்பனுக்கும், அ.சா.5-ற்கும் போன் மூலம் தகவல் சொல்லி அவர்கள் இருவரும் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்து மேற்படி காயம் பட்ட நபர்களை பார்த்துள்ளதாலும், அதேபோல் அ.சா.2 கல்லூரி விடுதி பாதுகாவலர் மூலம் அ.சா.4-க்கு தொடர்பு கொண்டு விவரம் சொன்னதன் பேரில் அ.சா.4-ம் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்து காயம்பட்ட நபர்களை பார்த்துள்ளதும், மேற்படி சாட்சிகள் மூலம் தெரிய வருவதால், மேற்படி சாட்சியங்கள் அரசுத் தரப்பில் கூறும் வழக்கு சங்கதிகளை நிரூபிக்க உதவும் வகையில் உள்ளதென்றே கருத முடிகிறது.

8.15 மேலும் மேற்படி ஆனந்தன் மற்றும் முருகன் அணிந்திருந்த ஆடைகளை கைப்பற்றும் போது மேற்படி அ.சா.5 தான் உடன் இருந்ததாகவும், அப்போது கோவிந்தராஜிம் உடன் இருந்ததாகவும் கூறி தனது சாட்சியத்தில்

"*ஊத்தங்கரை போலீசாரிடம் முருகன் அவர் அணிந்திருந்த வெள்ளை முழு கைச்சட்டை அதில் நீல நிறத்தில் கட்டம் இருந்ததாகவும், ஆனந்தன் அவர் அணிந்திருந்த கருநீலம் நிறமுடைய டி–சர்ட் மற்றும் முண்டா பனியன் ரத்த கறையுடன் உள்ளதை ஆஜர் செய்ததாகவும், அதை போலீசார் பெற்றுக்கொண்டதாகவும், அது சம்மந்தமாக தயார் செய்த ஆவணத்தில் தானும், கோவிந்தராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம்.*" என தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே அரசுத் தரப்பில் குறிப்பிடுவது போல் மேற்படி சாட்சிகள் 1, 2 அணிந்திருந்த சான்று பொருட்களை, மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் பெற்றுள்ளதும் தெளிவாக அறிய முடிவதால் மேற்படி சாட்சிகள் அரசுத் தரப்பில் நிரூபிக்கும் வகையில் உள்ளது என்றே கருத முடிகிறது.

8.16 மேற்படி சம்பவம் நடந்த போது இரவு ரோந்து பணியில் இருந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் நடராஜன் அ.சா.15 அவர்கள் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் முருகன் த/பெ. பெருமாள், ஆனந்தன் த/பெ. அண்ணாமலை ஆகியோர்களை ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது முருகன், ஆனந்தன் இருவரும் மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால், தருமபுரி மருத்துவமனைக்கு சென்று போது வார்டில் இருந்த முருகன் என்பவரை விசாரணை செய்து புகார் வாக்கு மூலம் பெற்று ஊத்தங்கரை காவல் நிலைய குற்ற எண். 589/2018 இ.த.ச பிரிவு 394ன் இணைந்த 397 மற்றும் இந்திய ஆர்ம்ஸ் ஆக்ட் 25(1)(எ)ன் கீழ் வழக்கினை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தொடர்புடைய எதிரிகளை கைது செய்த கோட்டப்பட்டி காவல் ஆயிவாளர் திரு. முரளி அவர்கள் இவ்வழக்கில் அ.சா.20 ஆக விசாரிக்கப்பட்டதில், கோட்டப்பட்டி காவல் நிலைய குற்ற எண். 20/2019 சட்ட பிரிவுகள் 379 இ.த.ச. மற்றும் 27(1) Arms Act பதிவு செய்து தனது பார்வைக்கு

வைத்ததை அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான திருவண்ணாமலை to அரூர் அமைந்துள்ள எம்.ஜீ.ஆர்.நகர் பஸ் நிருத்தம் அருகே சென்று சாட்சி கணேசன் அடையாளம் காட்ட குமார், பச்சையப்பன் முன்னிலையில் மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்து சம்பவ இடத்தில் இருந்த காலி கேஸ் ஒன்று புல்லட் ஒன்று எடுத்ததாகவும், அத்துடன் உடைந்த நிலையில் உள்ள நம்பர் பிலேட் எடுத்ததாகவும், அதை ஆன்லைன் மூலமாக ஆய்வு செய்தபோது அது பஜாஜ் பல்சர் என்றும் அதன் முகவரி கோவிந்தம்மாள் க/பெ நாகேஸ்வரன் ரெட்டிப்பட்டி ஊத்தங்கரை வட்டம் , கிருஷ்ணகிரி மாவட்டம் என இருந்தது என்றும், மேற்படி முகவரிக்கு 18.02.2019 தேதி அதிகாலை 4.00 மணிக்கு முகவரியில் சென்று விசாரித்த போது அந்த முகவரியில் பரதன் த/பெ நாகேஸ்வரன் என்பவர் குடியிருந்து வருவதாகவும் அவரை விசாரித்தபோது தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு அவரும் அவரது நண்பரும் வெங்கட் (எ) வெங்கடேசன், த/பெ சின்னகண்ணு கலைஞர் நகர் ஊத்தங்கரை சேர்ந்து தான் இக்குற்றத்தை செய்ததாகவும், இது மட்டும் அல்லாமல் ஊத்தங்கரையில் ஒரு நாட்டு துப்பாக்கியை வைத்து மதுபானம் கடையில் இருந்து வியாபாரம் முடித்து வந்தவரிடம் துப்பாக்கியை காட்டி மிரட்டி பணத்தை கொள்ளையடித்ததாகவும், வாக்குமூலம் அளித்துள்ள–தாலும் அதனடிப்படையில் ஊத்தங்கரை காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்–ததாகவும் சாட்சியம் அளித்துள்ளதன் மூலமும், மேற்படி கோட்டப்பட்டி காவல் ஆய்வாளர் கொடுத்த தகவலின் பேரில் எதிரிகளை ஊத்தங்கரை காவல் ஆய்வாளர் எதிரிகளை காவல் விசாரணைக்கு எடுத்து எதிரிகளை விசாரித்து இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளது அறிய முடிகிறது.

8.17 விசாரணை அதிகாரி சம்பவயிடத்திற்கு சென்று விசாரணை செய்துள்ளதும், சம்பவயிடத்தில் வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சம்பவயிடத்தில் இருந்த "*TN-29-BZ-5171 Activa* ***இருசக்கர வாகனம்*** *Eng.No. JF50ET27-86617, Chasis No. ME4JF504JFT785521*." என்ற இருசக்கர வாகனத்தை

கைப்பற்றியுள்ளதையும் பொருத்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மேற்படி விசாரணை அதிகாரி சாட்சியத்தை நிரூபிக்கும் வகையில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.7 தனது சாட்சியத்தில் "*தான் விசாரித்தபோது முதல் நாள் இரவு துப்பாக்கியால் சுட்டு மதுபானக்கடையின் ரொக்கம் கொள்ளையடிக்கப்பட்டதாக தெரிந்துக்கொண்டதாகவும், போலீசார் சம்பவ இடம் குறித்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்வதாகவும் அதற்காக தானும் எனது தம்பி ரமேஷ் என்பவரும் சாட்சியாக இருக்க சொல்லி கேட்டார்கள் தானும் தன் தம்பி ரமேஷும் சாட்சிகளாக இருக்க சம்மதித்ததாகவும், பின்பு போலீசார் காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையது என்றும், பார்வை மகஜரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றும், சிறிது நேரம் அங்கே இருந்தோம் அப்போது சம்பவ இடத்தின் கிழக்கு புறத்திலிருந்து ஒரு ஆக்டிவா இரு சக்கர வாகனத்தை போலீசார் மகஜரில் கைப்பற்றியதாகவும், அதிலும் தானும், ரமேஷ் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும்*" என தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதால் விசாரணை அதிகாரி சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரித்துள்ளதும், சம்பவயிடத்தில் வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சம்பவயிடத்தில் இருந்த "*TN-29-BZ-5171 Activa **இருசக்கர வாகனம்** Eng.No. JF50ET27-86617, Chasis No. ME4JF504JFT785521.*" என்ற இருசக்கர வாகனத்தை கைப்பற்றியுள்ளதையும் அரசுத் தரப்பில் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

8.18 மேலும் இவ்வழக்கில் 3-ம் எதிரி மீது உள்ள குற்றச்சாட்டான உரிமம் இல்லாத நாட்டுத் துப்பாக்கியை சட்ட விரோதமாக 1, 2 எதிரிகளுக்கு விற்றது குறித்து பரிசீலிக்கையில் 3-ம் எதிரியான மகேந்தின் மீது கள்ளத்தனமாக முறையற்ற கள்ளத் துப்பாக்கி 1, 2 எதிரிகளுக்கு விற்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து 3-ம் எதிரித் தரப்பு வழக்கறிஞர் 3-ம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மதம் இல்லை என்றும், 3-ம்

எதிரி எவ்வித நாட்டு துப்பாக்கியும் தயாரிக்கவில்லை என்றும், அதை 1, 2 எதிரிகளுக்கு விற்பனை செய்ததாக அரசுத் தரப்பில் பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எடுத்துரைத்தார். மேற்படி சங்கதிகள் குறித்து பரிசீலிக்கையில் 3-ம் எதிரி நாட்டு துப்பாக்கியை கள்ளத் தனமாக 1, 2 எதிரிகளுக்கு விற்றுள்ளதாக மட்டுமே அரசுத் தரப்பில் குறிப்பிட்டுள்ளதே தவிர மேற்படி 3-ம் எதிரி கைது செய்த போது அவரை விசாரித்து அவ்வாறு அவர் கள்ளத் துப்பாக்கி கள்ளத்தனமாக விற்பனை செய்து வந்ததற்கு, 3-ம் எதிரியிடமிருந்து வேறு துப்பாக்கிகள் கைப்பற்றியோ அல்லது அவர் வேறு துப்பாக்கிகளை சட்ட விரோதமாக விற்பனைக்காக மறைத்து வைத்திருப்பது பற்றியோ 1, 2 எதிரிகளுக்கு 3-ம் எதிரி தான் கள்ளத் துப்பாக்கி விற்பனை செய்தார் என்பது பற்றியோ அரசுத் தரப்பில் தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் படி 3-ம் எதிரி மீதான குற்றச் சாட்டுகளை நிரூபிக்க தவறியதால் மேற்படி 3-ம் எதிரி கள்ளத்தனமாகவும், சட்ட விரோதமாகவும் நாட்டு துப்பாக்கியை விற்பனை செய்து வந்தாரா என்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் 1 மற்றும் 2 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே 3-ம் எதிரி இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளாரே மேற்படி 3ம் எதிரி அரசுத் தரப்பில் குறிப்பிடுவது போல் சட்ட விரோதமாக கள்ளத் துப்பாக்கிகள் விற்பனை செய்து வந்தார் என்பதை அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க தவறியதால் மேற்படி 3-ம் எதிரி மீதுள்ள கள்ள துப்பாக்கி சட்ட விரோதமாக விற்பனை செய்ததாக கூறும் குற்றச்சாட்டு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

8.19 மேற்படி, சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் படி அ.சா.1 முதல் அ.சா.21 சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளதால், 1, 2-ம் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. 3-ம் எதிரிக்கான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்வு

காணப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 1–ம் எதிரி மற்றும் 2–ம் எதிரி பரதன் ஆகிய இருவரும் குற்றம் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கையில் தாக்கல் செய்து இவ்வழக்கு மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு நீதிமன்ற விசாரணையில் இருந்த போது 2–ம் எதிரி பரதன் கடந்த 16.04.2024–ம் தேதியில் இறந்து விட்டதாக இறப்பு சான்று தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் மேற்படி 2–ம் எதிரிக்கு எதிரான குற்றச் சாட்டுகள் அற்றுப் போய் விட்டதாக இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. எனவே மேற்படி 1–ம் எதிரி மீதான சட்டபிரிவு U/s. 392 உ/இ 397 IPC மற்றும் 25(1-B) (a) and 27(1) of Arms Act-ன் படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

## 9.முடிவு

முடிவில் 1–ம்எதிரி மீது பிரிவு – 392 உ/இ 397 IPC மற்றும் 25(1-B) (a) and 27(1) of Arms Act-ன் படி குற்றவாளி என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து சட்டப்பிரிவு குவிமுச 235(2)–ன் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்படுகிறது. 3–ம் எதிரிக்கான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்வு காணப்பட்டுள்ளதால் சந்தேகத்தின் பலனை 3–ம் எதிரிக்கு அளித்து சட்டப்பிரிவு குவிமுச 235(2)–ன் 3–ம் எதிரியை விடுதலை செய்தும், இவ்வழக்கு விசாரணையில் இருந்த போது 2–ம் எதிரி பரதன் கடந்த 16.04.2024–ம் தேதியில் இறந்து விட்டதாக இறப்பு சான்று தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் மேற்படி 2–ம் எதிரிக்கு எதிரான குற்றச் சாட்டுகள் அற்றுப் போய் விட்டதாகவும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரி வழங்கிய பிணைப்பத்திரம் முறிவு செய்யப்படுகிறது. சான்றுப்பொருள்கள் அ.சா.பொ.5, 8 ஆகியவை அரசுடமையாக்கி மேற்படி துப்பாக்கிகளை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மேலும் அ.சா.பொ.3, 19 ஆகியவை உரிமையாளரிடம்

ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவர்களே மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு வைத்துக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. அ.சா.பொ.1, 2, 4, 6, 7, 9 முதல் 18 ஆகியவை மேல்முறையீடு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

என்னால் தீர்ப்புரை சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு கணினியில் நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை பிழை திருத்தம் செய்து சரிபார்த்து 2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27–ம் நாள் என்னால் கையெழுத்திடப்பட்டு இந்நீதிமன்றத்தில் திறந்த அவையில் அவையறிய பகரபட்டது.

THIRUGNANASAMBANDAM P

Assistant Sessions Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P
Date: 2026.04.27 17:52:38 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**

**எதிரிக்கு வழங்கப்போகும் தண்டனை குறித்து குவிமுச பிரிவு 235 (2)–ன் கீழ் எதிரியிடம் விசாரணை**

**கேள்வி –** **1–ம்** எதிரி ஆகிய உன் மீது பிரிவு 235 (1) இதச– வின் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. உங்களுக்கு வழங்கப்போகும் தண்டனை குறித்து என்ன சொல்கின்றீர்கள்.

**பதில் –** நான் எந்த குற்றமும் செய்யவில்லை. எனக்கு 6–1/2 மாத பெண் குழந்தை உள்ளது. எனது மனைவிக்கும் எனது குழந்தைகளுக்கும் என்னைத் தவிர வேறு யாரும் பாதுகாப்பிற்க்கு இல்லை. சிறு குழந்தைகளை வைத்துக் கொண்டு எனது மனைவி மிகவும் கஷ்டப்படுவார் என்பதால் என்மீது கருணை காட்டுங்கள். குறைந்த தண்டனை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி 1–ம் எதிரி தனது பதிலில் தனக்கு 6–1/2 மாத பெண் குழந்தை உள்ளதாகவும், தனது மனைவிக்கும் தனது குழந்தைகளுக்கும் தன்னைத் தவிர வேறு யாரும் பாதுகாப்பிற்க்கு இல்லை என்றும், சிறு குழந்தைகளை வைத்துக் கொண்டு தனது மனைவி மிகவும் கஷ்டப்படுவார் என்பதால் தன்மீது கருணை

காட்டுங்கள் என கூறியுள்ளதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு எதிரிக்கு கீழ்கண்ட தண்டனை வழங்க முடிவு செய்கிறது.

**<u>தண்டனை தீர்ப்பு விவரம்</u>**

1-ம் எதிரிக்கு இதச பிரிவு 392 உ/இ 397 IPC-ன் கீழ் குற்றமிழைத்ததற்க்காக 7 வருடங்கள் கடுங்காவல் தண்டனை விதித்தும், அபராதம் ரூ.10,000/- செலுத்த வேண்டும் என்றும் அபராதத்தொகையை செலுத்த தவறினால், மேலும், ஒரு வருட காலம் சாதாரண மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும்,

பிரிவு 25(1-B) (a) of Arms Act- கீழ் குற்றமிழைத்ததற்க்காக ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை விதித்தும், அபராதம் ரூ.1,000/- செலுத்த வேண்டும் என்றும் அபராதத்தொகையை செலுத்த தவறினால், மேலும், 3 மாதம் சாதாரண மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும்,

பிரிவு 27(1) of Arms Act-ன் கீழ் குற்றமிழைத்ததற்க்காக 3 வருடங்கள் கடுங்காவல் தண்டனை விதித்தும், அபராதம் ரூ.2,000/- செலுத்த வேண்டும் என்றும் அபராதத்தொகையை செலுத்த தவறினால், மேலும், 6 மாதம் சாதாரண மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், 1-ம் எதிரிக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

தீர்ப்பின் சான்றிட்ட நகலினை இப்பொழுதே எதிரிக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

THIRUGNANASAMBANDAM P

Assistant Sessions Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P
Date: 2026.04.27 17:52:55 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**

**<u>1. அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.த.சா.1 | முருகன் |
| அ.த.சா.2 | ஆனந்தன் |
| அ.த.சா.3 | மாரியப்பன் |

| | |
|---|---|
| அ.த.சா.4 | சிவக்குமார் |
| அ.த.சா.5 | இளையராஜா |
| அ.த.சா.6 | சுபாஷ் |
| அ.த.சா.7 | குமரேசன் |
| அ.த.சா.8 | பிரகாஷ் |
| அ.த.சா.9 | இளையப்பன் |
| அ.த.சா.10 | மஞ்சுநாத் |
| அ.த.சா.11 | பாலகிருஷ்ணன் |
| அ.த.சா.12 | திருஞானம் |
| அ.த.சா.13 | ராஜேந்திரன் |
| அ.த.சா.14 | ஸ்ரீவித்யா சீனிவாசன் |
| அ.த.சா.15 | நடராஜன் |
| அ.த.சா.16 | விமலா |
| அ.த.சா.17 | சுரேந்தர் |
| அ.த.சா.18 | வீரராகவன் |
| அ.த.சா.19 | சுல்தான் அர்பீன் |
| அ.த.சா.20 | முரளி |
| அ.த.சா.21 | ராமமூர்த்தி |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

| | |
|---|---|
| **அ.த.சா.ஆ.1** | புகார் வாக்குமூலம் |
| **அ.த.சா.ஆ.2** | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து |
| **அ.த.சா.ஆ.3** | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| **அ.த.சா.ஆ.4** | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து |
| **அ.த.சா.ஆ.5** | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| **அ.த.சா.ஆ.6** | கைப்பற்றுதல் மகஜர் |
| **அ.த.சா.ஆ.7** | மகேந்திரன் வாக்கு மூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து |
| **அ.த.சா.ஆ.8** | ஆய்வறிக்கை (தடய அறிவியல் துறை) |

| | |
|---|---|
| **அ.த.சா.ஆ.9** | முதல் தகவல் அறிக்கை |
| **அ.த.சா.ஆ.10** | முருகன் என்பவரின் விபத்து பதிவேட்டுடனான காயச் சான்றிதழ் |
| **அ.த.சா.ஆ.11** | ஆனந்தன் என்பவரின் விபத்து பதிவேட்டுடனான காயச் சான்றிதழ் |
| **அ.த.சா.ஆ.12** | ஆவணங்களின் தொகுப்பு (வீடியோ பதிவு மற்றும் புகைப்படங்கள்) |
| **அ.த.சா.ஆ.13** | கோப்பு (அடையாள அணிவகுப்பு) |
| **அ.த.சா.ஆ.14** | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| **அ.த.சா.ஆ.15** | பார்வை மகஜர் |
| **அ.த.சா.ஆ.16** | மாதிரி வரைபடம் |
| **அ.த.சா.ஆ.17** | படிவம் – 91 |
| **அ.த.சா.ஆ.18** | படிவம் – 91 |
| **அ.த.சா.ஆ.19** | படிவம் – 91 |
| **அ.த.சா.ஆ.20** | படிவம் – 91 |
| **அ.த.சா.ஆ.21** | படிவம் – 91 |
| **அ.த.சா.ஆ.22** | படிவம் – 91 |
| **அ.த.சா.ஆ.23** | படிவம் – 91 |
| **அ.த.சா.ஆ.24** | மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை |
| **அ.த.சா.ஆ.25** | பிரிவு மாறுதல் அறிக்கை |

**3. அரசு தரப்பு சான்று பொருள்**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | டி–சர்ட் |
| அ.சா.பொ.2 | பனியன் |
| அ.சா.பொ.3 | டி.எண்–29–பி.இ.சட் 5171 இருசக்கர வாகனம் |
| அ.சா.பொ.4 | முருகன் அணிந்திருந்த முழுக்கை சட்டை |
| அ.சா.பொ.5 | குட்டையாக உள்ள துப்பாக்கி |
| அ.சா.பொ.6 | 4 பிரிக்கப்படாத டப்பா கொண்ட பாக்கெட் |
| அ.சா.பொ.7 | 4 பிஸ்டல் குண்டுகளுக்கு 3 கோலி குண்டுகள் |
| அ.சா.பொ.8 | நீட்டு துப்பாக்கி |

| | |
|---|---|
| அ.சா.பொ.9 | மஞ்சள், ஆரஞ்சு நிற பவுடர் உள்ள டப்பா |
| அ.சா.பொ.10 | 5 குண்டுகள் |
| அ.சா.பொ.11 | தேங்காய் நாரு |
| அ.சா.பொ.12 | கரிமருந்து பாக்கெட் |
| அ.சா.பொ.13 | புகைப்படத்தின் தொகுப்பு |
| அ.சா.பொ.14 | உடைந்த நிலையில் உள்ள கால்குலேட்டர் |
| அ.சா.பொ.15 | ஜிப் |
| அ.சா.பொ.16 | ஸ்டேபலர் |
| அ.சா.பொ.17 | மூன்று சாவிகள் உடைய கொத்து |
| அ.சா.பொ.18 | சிறிதளவு எரிந்த சாம்பல் மண் |
| அ.சா.பொ.19 | TVS 125 மோட்டார் சைக்கிள் |

THIRUGNANASAMBANDAM P

Assistant Sessions Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P
Date: 2026.04.27 17:53:09 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**

<u>குறிப்பு</u>

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் அனைவரும் மூன்று நாட்களுக்கு மேல் விசாரிக்கவில்லை.
3. வழக்கின் முடிவு 1–ம் எதிரிக்கும் காவல் துறைக்கும் தெரிவிக்கப்பட்டது.